

# நாடி

NAADI



2006, 07

மருத்துவ மாணவர் ஒன்றியம்,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# நாடி

## மலர் – 11

இதழாசிரியர்
குமரகுருநாதன் பிரதீபன்

மருத்துவ மாணவர் ஒன்றியம்,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணம்.

**'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்**

**(திருக்குறள் 95:8)**

# சமர்ப்பணம்

எம் பாதையில்

ஒளிவிளக்காகி

எம்மை வழிநடத்திய

அனைத்து உயரிய

மனிதர்களுக்கும்

"ஹாஷ" சமர்ப்பணம்.

# துணைவேந்தரின் ஆசிச்செய்தி ...

மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தினரால் வெளிக்கொணரப் படவிருக்கும் "நாடி" என்ற சஞ்சிகைக்கு இச் செய்தியை வழங்குவதிற் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இளவயதில் வாசிக்கும் பழக்கத்தையும் எழுதும் திறனையும் விருத்தி செய்து கொள்ள வேண்டியது அவசியம். சஞ்சிகைகளை வெளிக்கொணர்தல் எழுத்தாற்றலை விருத்திசெய்யவும், தமது பாடவிதானத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களை வாசித்து அறியவும், அவ்வாறு அறிந்து கொண்டவற்றுள் பயனுள்ள விடயங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளவும் மாணவர்களை ஊக்குவிக்கிறது.

யாழ் பல்கலைக்கழகத்தில் இயங்கும் ஊக்கமும் செயற்றிறனும் கொண்ட மாணவ அமைப்புக்களுள் மருத்துவ பீட மாணவர் ஒன்றியமும் ஒன்று. தம்மிடையேயும், பல்கலைக்கழக சமூகத்தினர் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் சுக வாழ்விற்கான நடைமுறைகளையும் மருத்துவத்தில் ஏற்பட்டுள்ள, ஏற்பட்டுவரும் துரித முன்னேற்றத்தையும் வசதிகளையும் அறியவைப்பதற்கு மருத்துவக் கண்காட்சிகளை நடாத்துவதன் மூலமும் "நாடி" என்ற சஞ்சிகையை வெளியிடுதல் மூலமும் மருத்துவ விழிப்புணர்வை ஏற்படுத்த இவ்வொன்றியத்தினர் மிகுந்த அக்கறையுடன் செயற்படுகின்றனர். இது நாட்டின் அபிவிருத்திக்கு அவர்கள் செய்யும் பெரும் பங்களிப்பாகும்.

நாட்டு மக்களிடையே சுகாதார, சுகநல விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடமையாது தமது எழுத்தாற்றல் மூலம் இதர சமுதாய, கலை, கலாசார, பண்பாட்டு விடயங்கள் பற்றியும் "நாடி" மூலம் சமுதாய சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்த முயல்வது பாராட்டுதற்குரியது.

"நாடி" மூலம் மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தினர் தமது அங்கத்தினருக்கு வாசிக்கவும் எழுதவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். இச்சஞ்சிகை வெளிவருவதற்கு அயராது உழைக்கும் சஞ்சிகை ஆசிரியருக்கும், மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தினருக்கும் எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாணவர்களது எதிர்கால முயற்சிகள் வெற்றியடைய எனது மனப்பூர்வமான நல்லாசிகள்.

**பேராசிரியர் இ.குமாரவடிவேல்**
**பதில் உபவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# பீடாதிபதியிடமிருந்து ...

வருடந்தோறும் நாடி வெளிவருகின்றது. அதற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவது மகிழ்ச்சியான விடயமே. காலத்துக்குக் காலம் நாடி வெளி வருவது சில மாணவரின் சாதனையே. நாடி வெளியீட்டுக்காகப் பயன்படும் மூளைச் சக்தி, பணம், நேரம் அனைத்துக்கும் கிடைக்கும் பயன் என்ன என்பதே எனது மனதிலுள்ள கேள்வியாக உள்ளது. வருடந்தோறும் கொண்டாடப்படும் தீபாவளி, வருடப்பிறப்பு, பொங்கல், புதுமாணவர் வரவு, மருத்துவ இரவு போன்று நாடி வெளியீடும் மருத்துவபீடம் மாணவர் செய்ய வேண்டிய வருடாந்தக் கடமையாக மட்டும் கொள்ளப்படுகின்றதா அல்லது மாணவர் விருப்பத்துடனும் அக்கறையுடனும் மேற்கொள்ளும் நடவடிக்கையா ?

மாணவரிடையே இதுபற்றிய உண்மையான நிலைப்பாட்டை ஆராய்ந்து சரியான முடிவெடுக்கவேண்டிய காலம் இது. ஒவ்வொருவரும் தாம் மேற்கொள்ளும் எந்தச் செயற்பாடும் ஏன், எவருக்காக, என்ன பயன் என்பவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து செயலில் இறங்கவேண்டும். வருடாந்தம் அச்சாகும் பிரதிகளின் எண்ணிக்கை மற்றும் மாணவர் வாங்கிப் படிக்கும் பிரதிகளின் எண்ணிக்கை என்பன கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

நாடி என்பது இன்னுமொரு ஆனந்த விகடனாகவோ குங்குமமாகவோ அல்லாமல், வெறும் கட்டிளம்பருவக் கறபனைகளாக மட்டும் இருந்துவிடாமல், மருத்துவ மாணவ முத்திரை பதிக்கப்பட்டதாக, மருத்துவ மாணவர் அனைவராலும் ஆதரிக்கப்படுவதாக, மாணவர் தரத்தை உயர்த்துவதாக, உயர்ந்த எண்ணங்களை வளர்ப்பதாக, குறுகிய அற்பத்தனமான சுயநல எண்ணங்களை நீக்குவதாக, இன்னும் பல நல்ல குணாதிசயங்களை உள்ளடக்கியதாக மிளிர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

Dr.க.சிவபாலன்
மருத்துவ பீடாதிபதி,
யாழ். பல்கலைக்கழகம்.

# மாணவ ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி

மருத்துவ மாணவர் ஒன்றியம் தனது பதினோராவது நாடி மலரினை வெளியிடுவதையிட்டு நான் மிகவும் மிகிழ்ச்சியடைகின்றேன். மாணவர்களின் கலை ஆக்கங்கள் வீணடிக்கப்படாது அவற்றினை ஒரு ஏடாக்கும் பணி ஒரு அரும் முயற்சியாகும். இம்முயற்சியிற் சற்றும் தளராது எவ்வளவு இடர் வரினும் அதனை எதிர்கொண்டு நடைமுறைப்படுத்து வதையிட்டு தற்போதைய மருத்துவமாணவர் ஒன்றியத்தைப் பாராட்டுகின்றேன். ஆனால் இம்முயற்சியானது இதழைக் கொண்டு வருவதை மட்டும் நோக்காகக்கொண்டு மட்டுமல்லாது, நாடி என்னும் இதழின் தரம் எவ்வகையிலும் பாதிக்காத வகையில் அமைதல் வேண்டும். மேலும் 'நாடி' ஒரு கலை இலக்கிய ஏடு; அது தாங்கிவரும் ஆக்கங்கள் சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு அமைதல் அவசியம். கலை இலக்கியம் என்பது மக்களின் நாளாந்த வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்தது. எனவே மருத்துவ சமூகம் ஆகிய நாம் மக்களுடன் என்றும் உறவுப் பாலங்களை உருவாக்கி அதனை வளப்படுத்துவது முக்கியமானது. நாடியானது இவ்வகையான நோக்கத்திற்குச் சரியான முறையிற் பயன்படுதல் வேண்டும். இது அறைகளில் தேக்கி வைப்பதற்கான வெளியீடு அல்ல. இது சரியான வகையில் யாரைச் சென்றடைய வேண்டுமோ அவர்களைச் சென்றடைய வேண்டும். இதனை உறுதிப்படுத்துவதும் வெளியீட்டாளர்களின் கடமையாகும். இதற்கு முதற்கண் தரமான ஆக்கங்கள் இன்றியமை யாததாகும். தரமான ஆக்கங்களை உருவாக்க மாணவர்களைத் தூண்ட வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகள் அருகிக் காணப்படுவதை என்னால் உணர முடிகிறது. எனவே இனி வரும் காலங்களில் மாணவரிடையே தரமான ஆக்கங்களைக் கொண்டுவருவதற்குரிய புதிய முயற்சிகளைக் கண்டுபிடித்து நடைமுறைப்படுத்துவது எதிர்கால மாணவர் ஒன்றியங்களின் கடமையாகும். எனது கருத்துகளைப் பகிரச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி.

Dr. இ. சுரேந்திரகுமார்
மாணவ ஆலோசகர்,
மருத்துவபீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

# இதழாசிரியரிடமிருந்து ...

"முற்றுப்புள்ளி" விழு முன்
மீண்டெழுகிறது "நாடி"!
சுற்றத்தில் நடப்பன
சற்று அயர வைத்தாலும்
சளைக்காமல் எழ முயல்கின்றோம்!

தேங்கி நிற்கும் பாடச் சுமைகளும்
"வெளியேறத் துடிக்கும் அவசரமும்
எம்மவர் கரங்களைச் சிறிது
கட்டிப் போட்டிருக்குமோ?
ஆக்கங்களின் எண்ணிக்கை
சிந்திக்க வைக்கிறது!
ஆனாலும் "பொறுக்கி" எடுத்து
வெளியிடுகிறோம் - நாளைய
"நாடி" இன்னும் மேம்படும்
என்ற நம்பிக்கையில் ....

**மருத்துவ மாணவர் ஒன்றியம்**
**மருத்துவபீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

அன்புடன்
ஆசிரியர்,
குமரகுருநாதன் பிரதீபன்

# மீளாதுறங்கியோரை

# மீட்கின்றோம் நினைவுகளில்.......

* Prof.A.A.ஹுவர் (உயிரியல் இரசாயனத்துறைப் பேராசிரியர், முதற் பீடாதிபதி, மருத்துவபீடம்)
* Prof.V.கருணைநாதன் ( அறுவைச் சிகிச்சைப் பேராசிரியர்)
* Prof.N. சரவணபவாநந்தன் (சட்டமருத்துவத்துறைப் பேராசிரியர்)
* Prof.S.சிவஞானசுந்தரம் (சமுதாய மருத்துவத்துறை வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் பீடாதிபதி, மருத்துவபீடம்.)
* Prof. V. குணானந்தம் (நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்)
* Dr.A. சிவபாதசுந்தரம் (குழந்தை மருத்துவ நிபுணர்)
* Dr.(Mrs.) ரஜினி திரணகம (சிரேஷ்ட விரிவுரையாளர், உடற்கூற்றியல்துறை)
* Dr.S.பொன்னம்பலம் (அறுவைச் சிகிச்சை நிபுணர்)
* Dr.(Mrs.)S.மகேந்திரன் ( சிரேஷ்ட விரிவுரையாளர், உயிரியல் இரசாயனத்துறை)
* Dr.V.வேலாயுதபிள்ளை (வருகை விரிவுரையாளர், நுண்ணுயிரியல்துறை)
* Dr.R. உக்கிரப்பெருவழுதிப்பிள்ளை (சிரேஷ்ட விரிவுரையாளர், நுண்ணுயிரியல் துறை)
* Dr.Miss. P. சின்னப்பா (வருகை விரிவுரையாளர், உடல்நோயியல் துறை.)
* Dr.M.K. கணேசரட்ணம் (1ஆம் அணி மாணவன்)
* Dr.A. அருளானந்தம் (4ஆம் அணி மாணவன்)
* Dr. இளங்கோ (8ஆம் அணி மாணவன்)
* Dr.A. சசிகாந்தன் (9ஆம் அணி மாணவன்)
* S. பிரதாபன் (6ஆம் அணி மாணவன்)
* S. சிவகுருநாதன் (7ஆம் அணி மாணவன்)
* S. சிவசங்கர் (9ஆம் அணி மாணவன்)
* K. சதீஸ்குமார் (9ஆம் அணி மாணவன்)
* T. சத்தியேந்திரா (10ஆம் அணி மாணவன்)
* W. நிக்கலஸ் (14ஆம் அணி மாணவன்)
* N. ரவிசங்கர் (17ஆம் அணி மாணவன்)
* R. சுரேஷ்குமார் (21ஆம் அணி மாணவன்)
* K. சரவணபவன் (26ஆம் அணி மாணவன்)



# மருத்துவ மாணவர் ஒன்றியம்

# செயற்குழு - 2007

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | வைத்திய கலாநிதி க.சிவபாலன் (பீடாதிபதி, மருத்துவ பீடம்) |
| பெரும் பொருளாளர் | : | கலாநிதி D.குணராஜசிங்கம் (சிரேஷ்ட விரிவுரையாளர், உடற்தொழிலியல்துறை) |
| தலைவர் | : | G.திவ்வியானந் |
| உப தலைவர் | : | T.பாலகுமாரன் |
| செயலாளர் | : | V.ஜெயாடினேஷ் |
| இளம் பொருளாளர் | : | R. ஜனா |
| இதழாசிரியர் | : | K.பிரதீபன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | K.சேந்தன் |
| | | A.செந்தூரன் |
| | | T.கிருபேந்திரன் |
| | | R.ஜெகன் |
| | | K.கார்த்திகேயன் |
| | | K.உதயசீலன் |




# Medical Students' Union - 2007

Standing (L - R):MR.T.KIRUBENDRAN, MR.K. UTHAYASEELAN , MR.K.KARTHIKEYAN, MR. T.BALAKUMARAN (Vice President), MR.R.JEGAN, MR.K.PRATHEEPAN (Editor), MR.K. CHENTHAN (ITS Coordinator), Absent:MR.A.SENTHURAN

Seated (L -R):

PROF. (MISS) V. ARASARATNAM, MISS.R.JANA (Junior Treasurer), PROF. R.KUMARAVADIVALL (Vice Chancellor) ,MR. G. THIVIJANANTH (President) DR. K. SIVAPALAN (Dean), MR. V.JEYADINESH (Secretary), DR.D.GUNARAJASINGAM (Senior Treasurer)

# மருத்துவ மாணவர் ஒன்றியம்
# செயற்குழு - 2006

| | |
|---|---|
| காப்பாளர் | : Dr.K. சிவபாலன் |
| பெரும் பொருளாளர் | : பேராசிரியர் (செல்வி) V. அரசரட்ணம் |
| தலைவர் | : P. சிவமயூரன் |
| உப தலைவர் | : M. சுரேந்திரன் |
| செயலாளர் | : K. விக்னேஸ்வரராஜா |
| இளம் பொருளாளர் | : M. பிரிந்தினி |
| இதழாசிரியர் | : V. விஜிதரன் |

| | |
|---|---|
| செயற்குழு உறுப்பினர்கள் | : A. செந்தூரன் |
| | V. சதீசன் |
| | S. அருணன் |
| | S. பிரணவன் |
| | A. கிரிபரன் |
| | K. தர்ஸனன் |




# Medical Students' Union - 2006

Standing (L - R): MR.S.ARUNAN, MR.K. THARSANAN, MR.A.KIRIPARAN, MR.M.SURENDRAN (Vice President), MR.T.SATHEESAN, MR.S.PRANAVAN, MR.A.SENTHOORAN (ITS-COORDINATOR), MR.V.VIJITHARAN (Editor)

Seated (L -R): MISS.M.PIRINTHINY (Junior Treasurer) ,Prof. (MISS) V.ARASARATNAM (Senior Treasurer), PROF R.KUMARAVADIVALL (Vice Chancellor) MR.P.SIVAMAYURAN (President), DR.K.SIVAPALAN (Dean), MR.K.VIGNESWARARAJAH (Secretary), DR.D.GUNARAJASINGAM

# நாடியின் துடிப்பில் .....


| | | |
|---|---|---|
| 1) | யாழ் மருத்துவபீடமும் தமிழ் சமூகமும் | 01–02 |
| 2) | அழகின் இருப்பு | 03–04 |
| 3) | கரையைத் தீண்டாத அலைகள் | 05–06 |
| 4) | காசம் அற்ற சுவாசம் நோக்கி ......... | 07–14 |
| 5) | காடாகும் நாட்டில் .......... | 15–16 |
| 6) | முடிவைத் தேடும் சமாந்தரங்கள் | 17–20 |
| 7) | குறைப்பிரசவம் | 21 |
| 8) | நன்றி நவிலல் | 23 |
| 9) | கண்தானம் ஒளியூட்டும் உன்னத பணி | 25–27 |
| 10) | நீ எனது குரு | 29 |
| 11) | என் காதலின் ஒரு துளி... | 31–32 |
| 12) | சிதம்பர இரகசியம் | 33–34 |
| 13) | நானுனைச் சேர்ந்த கணம் ... | 35 |
| 14) | சேவை? ! | 37–39 |
| 15) | வரம் வேண்டும் பராசக்தி ! | 41–42 |
| 16) | சிக்குன்குனியா எனும் ஒரு சிறிய அரக்கன் | 43–48 |
| 17) | தேடுகிறோம்... | 49–50 |
| 18) | யாழ்நிலா | 51–53 |
| 19) | 2007 இல் மாணவர்களுக்காக ... | 54–55 |
| 20) | Stress | 56–58 |
| 21) | காதலித்த தோழி... | 59 |
| 22) | கால்கள் எழுதிய கவிதை... | 60–62 |
| 23) | கிறுக்கல்கள்... | 63 |
| 24) | காதலின் விம்பங்கள் | 64 |
| 25) | மருத்துவமாணவர் ஒன்றியம் 2005/ 06 முயற்சிகள்... | 65–67 |
| 26) | Sports | 68–70 |

# யாழ் மருத்துவபீடமும் தமிழ்ச்சமூகமும்



Dr. சி. யமுனாநந்தா
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு
வைத்திய அதிகாரி.

தொன்மையும் பெருமையும் கொண்டது தமிழ். தமிழின் தொன்மையும் அதன் நாகரிகமும் பல கடற்கோள்களால் அழிந்தது. குமரிக்கண்டத்தின் எஞ்சிய இலங்கையிலும் தமிழகத்திலும் தமிழ் தழைத்தோங்கியிருந்தது. இலங்கையில் கி.மு **300**ம் ஆண்டளவில் பௌத்த மதத்தின் வருகையுடன் தமிழுடன் பாளிமொழியும் சமஸ்கிருதமும் கலந்து சிங்களம் தோன்றியது. அதுவரைக்கும் கடல்காவு கொண்டது தமிழை. பின் சிங்களமும் காவு கொள்ளத்தொடங்கியது. அன்றாடபாவனையில் ஒருமொழியினை உபயோகிக்காது விட்டால் அல்லது வேற்று மொழிச் சொற்களைப் பிரயோகித்தால் அம்மொழி அழியும் ஆபத்து உள்ளது.

அழிந்தும் அழியாத தொன்மை மொழியின் சமூகத்தில் வாழும் நாங்கள் சமகால அரசியல், பொருளாதார, இராணுவ நடவடிக்கைகளில் எமது சமூகக்கட்டமைப்பினைப் பாதுகாப்பதால் எமது இருப்பை உறுதி செய்ய முடியும். அந்தவகையில் யாழ் மருத்துவபீடம் தமிழ்ச் சமூகத்திற்கு ஆற்றிய, ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம்.

முதலாவதாக நோயாளிகளுக்குமான சிகிச்சையில் மருத்துவர்கள் யாழ்போதனா வைத்தியசாலையை மையமாக வைத்துச் சேவை ஆற்றுகின்றனர். பல வைத்திய நிபுணர்கள் யுத்த சூழ்நிலையிலும் புலம் பெயராது இங்கு சேவையாற்றி வருகின்றனர். உறுதியான மருத்துவ வசதி ஒரு சமூகத்தில் இருக்கும்போதே மக்கள் அங்கு நிலைத்து வாழ்வர். எனவே எமது பிரதேசத்தில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளிலும் எமது மருத்துவபீடத்தில் இருந்து வெளியேறும் மாணவர்கள் சேவையாற்றத் திடசங்கற்பம் பூணல் வேண்டும். இதனாலேயே எமது சமூகம் வெறுமையாவதனைத் தடுக்கலாம்.

அடுத்து யுத்த காலத்தில் இடப்பெயர்வு, விமானக்குண்டுவீச்சு, எறிகணைத்தாக்குதல் எனப் பல வகையில் மருத்துவ நெருக்கடிகள் தோன்றியபோது, மருத்துவபீடமாணவர்கள் பல வழிகளில் மருத்துவ சேவையினைச் செய்தனர். இவை பல மருத்துவச் சுகாதார நெருக்கடிகளைத் தவிர்த்து, ஆரம்பச் சுகாதார பராமரிப்பிலும் முதலுதவிச்சிகிச்சை அளிப்பதிலும், தமிழ்மக்களிடையே ஒரு கட்டமைப்பு உருவாக உதவியது.


மருத்துவ பீடத்தின் உளநலத்துறை, உளசமூக மேம்பாட்டிற் பல முன்னோடி முயற்சிகளை ஆரம்பித்துச் செயற்படுத்தியுள்ளது. யுத்தத்தின் மனவடுக்களைக் குறைப்பதற்கும் நெருக்கீடுகளை அகற்றுவதற்குமான வழிகளை உருவாக்கியுள்ளது. மேலும் சித்திரவதைக்கு உட்பட்டோருக்குச் சிகிச்சை அளிக்கவேண்டிய அவசியத்தினையும் மனிதநேய மேம்பாட்டினையும் ஊக்குவித்துள்ளது. இவற்றினையும் இன்றைய மாணவர்கள் அக்கறை எடுத்துச் செயற்படுத்த வேண்டியவர்களாவர்.

மருத்துவத்தினைத் தமிழிலே விளங்கக் கூடியதாகப் பல நூல்கள் உருவாக வேண்டிய அவசியம் உள்ளது. ஒரு மொழி அழியாது இருப்பதற்கு அன்றாட தொழில் நுட்பத்திலும் அதன் பிரயோகம் இருத்தல் அவசியம். இதனை இன்றைய மருத்துவபீட மாணவர்கள் சிரமேற்கொண்டு பணியாற்றல் வேண்டும். தாய்ப்பறவை கூடுகட்டி, முட்டை இட்டு, குஞ்சு பொரித்து, உணவுதீத்தி விடக் குஞ்சுகள் வளர்ந்ததும் கூட்டை விட்டுப் போவதைப்போல் நாட்டைவிட்டு நாமும் நடப்போமானால், நாம் நடந்த வீதிகளுக்காவது எங்கள் பாரத்தினைத் தாங்கியதற்கு, நன்றியைக்கூற வேண்டும். இதற்கான நன்றிக் கடனை வெறும் வார்த்தை களில் சொல்வதா? இல்லவே இல்லை. எமது மக்களுக்குச் சேவை செய்வதையே தமிழ்ச் சமூகம் யாழ் மருத்துவபீட மாணவர்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றது.

ஒரு மருத்துவனை ஒரு சமூகத்தில் இருந்து அகற்றுவது அச்சமூகத்தில் 100பேரை கொன்றதற்குச்சமன். எனவே, எமது பிரதேசத் தின் சமூகக்கூட்டமைப்பு பாதகமாகிவிடுமுன் அதனைக் காப்பாற்ற நாம் அனைவரும் செயற்படவேண்டும்.

எத்தனை பெரிய காரியத்திற்கும் அதனைச் சாதிப்பதற்கு எத்தனை பேர் முன்வருகின்றார்கள் என்பது முக்கியமல்ல; மாறாக எத்தகைய உள்ளப் பண்பு வாய்ந்தவர்கள் முன்வருகிறார்கள் என்பதே இறுதியில் வெற்றியே நிர்ணயிக்கும் அம்சம்.

– மகாத்மா காந்தி –



# அழகின் இருப்பு !



க.தர்ஸனன்
29ஆம் அணி

மனுஷ யந்திரங்களே !
நில்லுங்கள் ...
நிமிர்ந்து பாருங்கள்...
நான் மேதாவியல்ல
உங்களுக்கு அறிவுரை சொல்ல ...
சாதாரணன்
ஆனால்
ரசிக்கத் தெரிந்தவன்

நிஜம் தொலைத்து
நிம்மதியிழந்து ...
நிழல்களாய்த் திரிவதில்
இஷ்டமில்லை எனக்கு

ஆழமாய் இயற்கையை
அனுபவிக்கிறேன்
அந்த அழகில் ...
தொலைந்து போவது
துன்பமில்லை எனக்கு !

பனிவிலகும் காலை
பச்சை இலைகள்
மஞ்சள் சூரியன் ...
வெளுக்கும் அடிவானம்
குயில்களின் பூபாளம்
புதிதாய்ப் பூக்கும்
பூக்களின் புன்னகை ...
ஒவ்வொரு நிறமும் ...
அழகு ...!

வெவ்வேறு நிறங்களில்
நடை பாதை மனிதர்கள்...

பள்ளிச் சிட்டுக்களின்
பளிச்சிடும் வெண்மை
யார் சொன்னது ?
வாகனச் சத்தங்கள்
அமைதியைக் குலைப்பதாய்...?
ஆழ்ந்து புலன்களைக் குவியுங்கள் ...
சப்தம் கூட ...
நிசப்தமாய்த் தோன்றும் !
வீதியில் காணும்
ஒவ்வொரு ஆணும் ...
ஒவ்வொரு பெண்ணும் ...
அழகுதான் !
மன்மதனும் ரதியும்தான்
அழகென்றால் ...
எங்கே போவார்கள்
மானுடர்கள்?

முடமாய்ப் போனவனின்
செயற்கைக் கால் ...
பார்வை தொலைந்தவனின்
வெள்ளைப் பிரம்பு ...
தள்ளாடும் கிழவியின்
கைத்தடி ...
அழகின் அடையாளங்கள் !

மனதிற்குப் பிடித்தவனின்
அல்லது
பிடித்தவளின்
உதட்டோரப் புன்னகை ...
அழகிற்கெல்லாம் அழகு !

ஆடி அசைந்து விழும்

ஆலமரத்தின்
உதிர்ந்த இலை ...
புல்வெளிச் சிறுவர்களின்
விளையாட்டு ...
தத்துப் பித்தென்று
கண்கள் உருட்டி
உளறும்
மழலைமொழி ...
ரசித்ததுண்டா ?

உச்சந் தலையில்
எச்சம்போடும்
பறவை கூட
பார்த்தால் அழகுதான் ...!

வெயில் கொழுத்தும்
வேளை...
மரநிழல் இருக்கை அழகு!
கதைபேசும் காற்று ....!
சலசலக்கும் இலைகள்
விலகும் களைப்பு
அழகின் சிரிப்பு!

மாலைநேரத் தென்றல்
ஆகாயத்தில் கோலமிடும்
பறவைப் புள்ளிகள் ....
மஞ்சள் குளித்தபின்
வெட்கத்தில் சிவக்கும்
மேகக் கன்னி ....
சூடு குறைந்து
கருங்கிப் போகும்
சூரியக் கோளம்...!
வர்ணக் குழம்பில்
நனைந்து சிவக்கும்
தாரிகை ....
முகில்கள் ....

பார்த்ததுண்டா ...?
இரவின் அமைதி ....
இருளைக் கிழித்து
எரியும் நிலவு !
நட்சத்திரத் தோடுகளில்
ஜொலிக்கும் வானம் !
அமாவாசை இருள்...
பௌர்ணமிப் பகல் ....
ஸ்பரிசித்த துண்டா ?

இல்லையேல் ....
நீங்கள் இழந்தது
அதிகம் தான் ...!

இனியேனும் .,...
இறுக்கங்களை
இளக்குங்கள் !
ரத்தத்தில்
ரசனைக்கும்
இடங்கொடுங்கள் !

கல்லாய்க் கனக்கும்
இதயத்தில்
ஈரத்தைப் பாய்ச்சுங்கள் !
பாறை விலங்குகளை
உடையுங்கள் !

எனக்காகவேனும் ...
ஒருமுறை ...
ஒரேயொருமுறை...
இத்தனைக்குள்ளும்
நுழைந்து பாருங்கள் !
அப்போது புரியும் ...
எம்மைச் சுற்றி
எல்லாமே அழகுதான் !

# கரையைத் தீண்டாத அலைகள் ...



தர்சனன் சக்திவேல்
25ஆம் அணி

ஒவ்வொரு பனி தூவிய அதிகாலையிலும்
சிணுங்கும் என் கைத்தொலைபேசியில்
வழியும் உன் தேன் குரல்
நின்றுபோய் ...
நெடுங்காலம் ஆயிற்று ...

காத்திரு வருவேன் என்று
நீ ...
கையசைத்துப் போன காட்சி ...
என் ....
கண்ணீர் திரையில் ...
சலனப்படமாய்த் தெரிகிறது ...

விடுமுறைக்குப் பிரிந்து சென்றாய் ....
மறுமுறை வராமல் ....
எங்கே...
மாட்டிக்கொண்டாய் ...

உன்னைச் சுமந்த ரயில்
ஓடிய தண்டவாளங்களை
நனைத்த என் கண்ணீர்த் துளிகள்
கதை அறிவாயா ....?

இங்கு .....
தண்டிக்கப்பட்டது நான்தான் ...
தவறு செய்தவர் யார் ....??

ஆற்றங்கரை மணலில்
நம் கால்த் தடங்கள்
அழியாமல் குடைபிடித்த ...
அந்த மரம் ...
இன்னமும் நிற்கிறது
நம்மை எதிர்பார்த்து....
முதியோர் இல்லத்திலும் ....
புதிய மலராய் இருக்கும் ....
நம் நட்பென்று ...
நீ செய்த சத்தியத்தின் ...
சாட்சியமாய் ....
சிரிக்கிறது. ...
கையெழுத்துப் போட்டு
நீ கொடுத்துப்போன...
கைக்குட்டை .....

அத்தனை உணர்வுகளுக்கும் ....
உன் ...
குங்குமத்திலல்லவா ....
முற்றுப்புள்ளியிட்டாய் நீ ....

திருமண பந்தத்தில்
திசைமாறிப் போவதுதான் ...
பெண்களின் நட்பென்றால் ....
உன் ...
பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடு....
குறையில் நின்றுபோன
நம் ....
உறவில் கதை !
இன்னொரு தவறு ....
இடம்பெறாதிருக்கட்டும் ....

நான் எறிந்தது ....
நல்ல விதைதான் ....
விழுந்த உன் மனம் தான் ....
பாறையாகிவிட்டது....

உன் சிநேகிதத்தில்
எனக்கு மிஞ்சியது
அழுதுகொண்டே சிரிக்கும்
இந்த அவஸ்தை மட்டுமே....

எனக்குத் தெரியவேண்டும் தோழி ....
நீ.....
புதைக்கப்பட்டாயா .............??
புதையுண்டு போனாயா ..........??


மாசிமாதப் பனி இரவிலும்
என்....
ஜன்னல்கள் திறந்து காத்திருக்கின்றேன்...

அந்த ...
பனிக்காற்றின் முகத்திலென்றாலும் ...
ஒரு பதில் எழுதிவிடு ....

என் ...
முற்றத்து மாமரத்தில்
ஒரு ஒற்றைப் பெண்குயில்
நீ போன பின்னால் ...
என்னை ...
ஒவ்வொரு காலையிலும் துயிலெழுப்பும் ...
ஒரு ...
அதிகாலைக்குப் பின்னால் ...
அதுவும் காணாமல் போயிற்று ...
ஒரு வேளை ....
உன்னைப்போல் அதுவும் ....
'வெளிநாட்டுப் பந்தத்தில்'
மாட்டியிருக்குமோ ...?



# காசம் அற்ற சுவாசம் நோக்கி...



த.துஷ்யந்தன்
25ஆம் அணி

இன்று உலகிலுள்ள காற்றினாற் பரவுகின்ற நோய்களில் மிகமுக்கியமானது காசநோயாகும். இந்த நோயானது வயது வேறுபாடின்றித் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. உலகளாவிய ரீதியில் ஆண்டொன்றிற்குப் பல மில்லியன் மக்கள் காசநோய்த் தொற்றிற்குள்ளாகின்றனர். அதிக சனத்தொகையடர்த்தி கொண்ட, வளர்ந்துவரும் இலங்கை போன்ற வறுமையான நாடுகளிலுள்ள மக்கள் அதிகளவாக இக் காசநோயினாற் பீடிக்கப்படுகின்றார்கள். இலங்கையைப் பொறுத்தவரை 2006ம் ஆண்டில் 8481 நோயாளிகள் அடையாளங் காணப்பட்டனர். இவர்களுள் 361 பேர் யாழ்ப்பாணத்தில் அடையாளங் காணப்பட்டவர்களாவர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை 2005ம் ஆண்டில் 280பேரும், 2006ம் ஆண்டில் 361பேரும் இந்த ஆண்டான 2007இன் ஆடிமாதம் வரை 200பேரும் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

காசநோய் பற்றீரியா எனப்படும் நுண் கிருமியால் ஏற்படுகிறது. இது பரம்பரை நோய் அல்ல. இந்தநோய் குறிப்பாக மைக்கோ பற்றீரியா ரியூபகிளோசிஸ் எனப்படும் கிருமியால் ஏற்படுகிறது. இந்நோயானது அதிகமாக நுரையீரல்களையே தாக்குகின்றது. ஆனாலும் நுரையீரல்களை விடுத்து உடலின் பிற பாகங்களையும் தாக்கக்கூடிய வல்லமையுடையது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

இக்கிருமியானது நோயாளி இருமும் போதோ, தும்மும்போதோ, சிரிக்கும்போதோ, அல்லது கதைக்கும்போதோ, வெளியிடப்படும் காற்றில்(நுரையீரல்களில் இருந்து வாயினூடான சளிநீர்த்துணிக்கைகள் மூலமாக) கலந்துவிடப்படுகின்றன.இவ்வாறு காற்றில் தூவப்பட்ட கிருமிகள் சுவாசத்தின் மூலமாக சுகதேகி ஒருவரின் நுரையீரல்களை அடைகிறது. ஆனாலும் இக்கிருமிகள் நேரடிச் சூரிய ஒளியினால் அழிந்துவிடக்கூடியன. காற்றில் விடப்பட்ட கிருமிகள் போதிய சூரிய ஒளி இல்லாத பட்சத்தில் பலமணி நேரங்கள் உயிர் வாழக்கூடியன. காற்றோட்டம் கூடிய இடங்களில் கிருமியின் செறிவு ஐதாக்கப் படுவதாலும், சூரிய ஒளியினால் அதன் வாழ்தகவு அற்றுப் போவதாலும், நோய்த் தொற்றுக்கான சாத்தியமானது இல்லாது போகின்றது. அடைக்கப்பட்ட சூரிய ஒளிபடாத, காற்றோட்ட வசதியற்ற இடங்களில், உதாரணமாகக் காற்றோட்டம் குன்றிய சமையலறைகள், தொழிற்சாலைகள், நெருக்கமான குடிமனை உள்ள இடங்களில் வாழ்வோர். அகதிமுகாம்கள், சிறைச்சாலைகள் மற்றும் பொது மலசலகூடம் போன்றவற்றிற் கிருமித் தொற்றிற்கான வாய்ப்புக்கள் அதிகமாக்கப்படுகின்றன. மேலும் மதுபானப் பாவனையுள்ளோர், புகை பிடிப்போர், போதைப் பொருளுக்கு அடிமையானோர், சலரோக நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள், மந்தப்போசாக்குள்ளோர் ஆகியோரிடையேயும் இது அதிகளவு தொற்றக்கூடியதாயுள்ளது.

இவ்வாறு நோய்த் தாக்கத்திற்குள்ளாகும் ஒருவர் ஒரு வருடத்தில் 10–15 சுகதேகிகளைக் காசநோயாளிகளாக்கும் ஆபத்தைக் கொண்டிருப்பார். மருந்து எடுக்காத நோயாளிகளில் 50% மானோர் 5 வருடங்களுக்குள் இறந்துவிடுவர். மிகுதி 25% மானோர் சுயமாக நோயிலிருந்து மீளுவர். அதேவேளை 25%பேர் நோய்க்காவிகளாகச் செயற்பட்டுப் பிறருக்கும் நோய்தொற்ற வழிகோலுவர். இதில், குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் நோய்த் தொற்றிற்குள்ளானவர் நோயினது குணங்குறிகளை வெளிக்காட்ட ஓரிரண்டு வாரங்களில் இருந்து ஒரு சில வருடங்கள் வரை செல்லலாம். இவ்வாறாக நோய்த்தொற்றிற்குள்ளான ஒருவரில் நோய்க் கிருமியானது எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது என்பதனைப் பார்ப்போம்.

வளியில் உள்ள கிருமியானது சுவாசத்தின் மூலமாக நுரையீரல்களை அடைகின்றது. இவ்வாறு நுரையீரல்களை அடையும் கிருமியை சுவாசப்பாதையின் தற்காப்புப் பொறிமுறையின் ஒரு கட்டமான திண்குழியங்கள், தமது திண்குழியச் செயலாற்றுகை மூலமாக (கிருமிகளை விழுங்குதல்) உள்ளெடுக்கின்றன. இவ்வாறாக திண்குழியத்தின் மூலமாக உள்ளெடுக்கப்படும் நோய்க்கிருமியானது, திண்குழியத்தால் உடனடியாக அழிக்கப்படலாம். அல்லது உடலின் பிறபாகங்களிற்கும் குருதியூடு காவிச் செல்லப்படலாம். இதேவேளை கிருமியானது தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு தற்காப்புப் பொறிமுறையாக திண்குழியத்தின் உள்ளான அமில, கார நடுநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அதன் முதிர்ச்சியை உறைய வைக்கின்றது. இத் தற்பாதுகாப்பானது எமது நோய் எதிர்ப்புச் சக்தியினின்று தப்பித்துக் கொள்ள காச நோய்க்கிருமி கொண்டிருக்கும் ஒரு மூலோபாயமாகும். இம் முதிர்ச்சித் தடையானது கிருமியின் திண்குழியத்தின் உள்ளான நீடித்த நிலைப்பிற்கு வழிகோலுகின்றது. இதேவேளை எமது உடலின் நோயெதிர்ப்புப் பொறிமுறையானது துரிதமாக்கப்பட்டு மேலதிக தொற்றுக்களை அழிக்கக்கூடிய வகையில் முனைப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான பிந்திய நோய் எதிர்ப்புச் சக்தியின் வெளிப்பாடாக ஏற்கனவே திண்குழியத்தாற் சிறைப்பிடிக்கப்பட்ட கிருமிகளைச் சூழவும் ஒரு மேலதிக சுவரை ஒத்த, தடுப்பு அரண் போன்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, கிருமிகள் வெளிச் சுற்றோட்டத்திற்கு விடப்படுவது தவிர்க்கப்படுகின்றது.

இச்செயற்பாடானது நிணநீர் முடிச்சுக்களில் நடைபெறுகின்றது. ஆனாலும் நோய்த் தொற்றிற்குள்ளானவர் குறைந்த நோய் எதிர்ப்புச் சக்தியை உடையவர் எனில் மேற்படி பொறிமுறைகள் வினைத்திறன் உடையதாக இராது. எனவே அந்நபர் இலகுவாகக் காசநோயின் தாக்கத்திற்கு உள்ளாகுவார். அதேவேளை போதிய நோய் எதிர்ப்புச்சக்தி உள்ள ஒருவரில் இந்த கலத்தடுப்புகளாற் சூழப்பட்ட கிருமி+திண்குழியச் சிக்கலானது வருடக்கணக்கில் நோயை ஏற்படுத்தாது சிறைவைக்கப்பட்டிருக்கும். இச்சிக்கலானது உடையும் பட்சத்தில் அது சுவாசப்பாதையின் பிறபகுதிகளிற்கும் கிருமிகளைப் பரப்பும் அபாயத்தை ஏற்படுத்தும். உடையும் இச்சிக்கலானது கிருமிகளை இரத்தத்தில் கலப்பதால், உடலின் மற்றைய பாகங்களிற்கு அவை இலகுவிற் பரவுவதோடு, சுவாசப்பரிமாற்றத்திற்

கான, நன்கு குருதியமைப்புச்செய்யப்பட்ட நுரையீரல்களில் முற்றுமுழுதாகவும் பரவலாக்கப் பட்ட காசநோயை உண்டு பண்ணுகிறது. இதனை விடவும், மூளைக்காசம், என்புகள், என்பு மூட்டுகள், மண்ணீரல், ஈரல், சிறுகுடல், விதை, நிணநீர் முடிச்சு என்பனவற்றிற்கும் பரவ ஏதுவாகின்றது.

**காசநோயின் குணங்குறிகள்**

காசநோய்த்தாக்கத்திற்குள்ளான ஒரு வரிற்குத் திடீரென அறிகுறிகள் தென்பட மாட்டாது. நீண்டகாலமாக இருந்துவரும் இருமல் (மூன்று வாரங்களிற்கு மேலதிகமாக ) குறுகியகாலத்திற்குள்ளான அதிக நிறை இழப்பு, இரவுநேரக் காய்ச்சல், இரவுநேரத் திடீர் வியர்வை, இரத்தம் தோய்ந்த சளி, உணவில் நாட்டமின்மை, உடற்சோர்வு, நெஞ்சுநோவு, மூச்செடுத்தலில் சிரமம் என்பன அதன் குணங் குறிகளாகும். வைத்தியசாலையில் சளியின் மாதிரியைச் சோதிப்பதன் மூலமே நோயின் நிச்சயத்தன்மையை அறிந்துகொள்ளமுடியும். சளியில் உள்ள காசநோய்க்கிருமியை நேரடியாக நுணுக்குக்காட்டியினூடாக அவதானித்தோ அல்லது சளியிலுள்ள கிருமியை விசேட வளர்ப்பூடகங்களில் வளர்த்து அடையாளங் காண்பதின் மூலமோ, நோயின் நிச்சயத்தன்மை உறுதிப்படுத்தப்படும்.

முன்கையின் நடுப்பகுதியில் நொது மலாக்கப்பட்ட, வீரியங் குறைந்த, பிரித் தெடுக்கப்பட்ட காசநோய்க் கிருமிப்புரதங்கள், ஊசிமூலம் நோயாளி எனச் சந்தேகிப்பவருக்கு ஏற்றப்பட்டு, அவரது நோய் எதிர்ப்புச் சக்தியின் அடிப்படையில், வைத்தியரால் நோய்த்தன் மையை அறிந்துகொள்ளும் முறையும் உள்ளது. ஆனாலும் இம்முறையில் வழுஏற்படக்கூடிய வீதம் அதிகமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக இம்முறை நிச்சயத் தன்மையை உறுதிப்படுத்து வதாகக் கருதாது நோய் நிருணயத்தின் உதவிப்பரிசோதனையாகவே கருதப்படுகிறது. இச்சளிச் சோதனையானது தொடர்ச்சியான, அடுத்தடுத்த நாட்களிற் பெறப்பட்ட மூன்று மாதிரிகளில் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே, நோயாளி முதற்தடவை வைத்திய சாலைக்கு வரும்போதும், பின்னர் தொடர்ந்து வரும் இரண்டு நாட்களிலும் ஆய்வுக்கூடப் பரிசோதனைக்காக சளி கொடுத்தல் அவசிய மாகிறது.

இச்சளி 'மாதிரி' பெறப்படுகையில் நோயாளி திறந்தவெளியில், ஆட்களினின்றும் விலத்தி, அடிநெஞ்சில் இருந்து இருமி, சளியை மாத்திரம் கொடுத்தல் வேண்டும். சளி மாதிரி பெறப்பட முன்னர், பின்வரும் வழிமுறைகளைக் கையா ளுதல், சரியான சளிமாதிரியைப் பெற உங்க ளுக்கு உதவும். வாயை நன்கு கொப்பளித்த பின்னர், ஆழமான உட்சுவாசத்தை 2–3 தடவை செய்ய வேண்டும். அடிநெஞ்சில் இருந்து இருமுதல் வேண்டும். தரப்பட்ட பாத்திரத்தை வாயிற்கு மிக அருகிற் கொண்டுவந்து பாத்திரத்தின் வெளிப்புறத்திற் படாது, வெளியிற் சிந்தாது, அவதானமாகப் பாத்திரத்தினுள் துப்ப வேண்டும். முக்கியமாகச் சளி மாத்திரமே பாத்திரத்துள் வருதல் மிக மிக அவசியம். எச்சில் அல்லது தடிமன் காரணமாக மூக்கிலிருந்து வடியும் நீர் ஆகியவற்றைச் சளியுடன் கொடுக்க வேண்டாம். நன்கு இறுக்கமாக, பாத்திரத்தின் மூடியை மூட வேண்டும். சரியான முறையிற்

பெறப்பட்ட சளி மாதிரியானது, நன்கு தடித்த தாயும் , மஞ்சள் நிறமாயும் , சுமாராக அரைத் தேக்கரண்டி அளவிலும் இருக்கும்.

மேற்குறிப்பிட்ட சோதனை முறைகளின் பிரகாரம், ஒரு நோயாளி காசநோயாளி என அடையாளப்படுத்தப்பவாராயின், அவர் பின்வரும் அம்சங்களிற் கவனம் செலுத்துதல் வேண்டும்.

- ✠ காசநோய் என்பது மருந்துகளைக் கிரமமாக, குறிப்பிட்ட காலத்திற்கு உள்ளெடுக்கும் பட்சத்தில் முற்றாகக் குணப்படுத்தக் கூடியதாகும். இதற்காக நோயாளியின் பூரண அர்ப்பணிப்பும், ஒத்துழைப்பும் மிக அவசியமாகும்.
- ✠ காசநோயானது வளிமூலமாகப் பரவுமாதலால் கண்டகண்ட இடங்களில் துப்புதலைத் தவிர்த்தல், தும்மும்போதோ இருமும்போதோ பிரத்தியேகமான கைக்குட்டைகளை அல்லது துவாய்களைப் பாவிப்பதன் மூலம் தனது குடும்பத்தையும், சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும்.
- ✠ இது குடும்ப அங்கத்தவரிடையேயும், நெருங்கிய உறவினருக்கும் நோயாளியின் அன்னியோன்னியப் பழக்கத்தில் தொற்றியிருக்கக் கூடுமாதலால் நெருங்கிய தொடர்புடைய அனைவரும் சளிச்சோதனையை நிறைவேற்றிக் கொள்ளுதல் அவசியமாகும்.
- ✠ கிரமமாகச் சரியான அளவுகளில் மருந்துகளை உள்ளெடுக்கும் ஒருவர் 2 வாரங்களில் நோயைப் பரப்பும் ஆற்றலை இழப்பார். அதன் பின்னர் அவர் சாதாரணமானவர் போல நடமாடலாம். ஆயினும் எக்காரணம் கொண்டும் இடைநடுவே மருந்து உட்கொள்ளுவதைத் தவிர்த்தலாகாது.
- ✠ வழங்கப்படும் குளிகைகள் அனைத்தும் முறையாக, தொடர்ச்சியாக 6 மாதங்களிற்கு ஒரு நாட்கூடத் தவறாது உள்ளெடுக்க வேண்டும். இதற்கு நோயாளி தானாகவும் அதேபோன்று குடும்பத்தினர் தாமும் ஒத்துழைத்தல் வேண்டும்.
- ✠ சிகிச்சைக் காலத்திற் சகல நோயாளிகளுக்கும் சிறிய தொகை உதவிப்பணம் வழங்கப்படும். இதனைப் பெற வைத்தியரின் அத்தாட்சிக் கடிதத்தைப் பெற்று, பிரதேச செயலாளரின் ஊடாக பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அடிப்படைச் சம்பளமும் விடுமுறையும் வழங்கப்படும்.
- ✠ நோயாளி துப்புகையில் ஒரு கடதாசியில் துப்பி உடனே அதனை எரித்துவிடல் வேண்டும்.
- ✠ அரைகுறை மருந்துகளை உள்ளெடுத்தல், நேரங்களை மாற்றிக் குளிகைகளை எடுத்தல், சிறிதுகாலம் குளிகைகளை உள்ளெடுக்க மறத்தல் என்பன நோயாளியை மட்டுமல்லாது அவரது சமூகத்தையும் பாதிக்கும் என்பதனைப் புரிந்துகொண்டு, சமூகப் பொறுப்புணர்வுள்ளவராகவும் நடக்க எத்தனிக்க வேண்டும்.

## அரைகுறைச் சிகிச்சை அல்லது முறைபிறழ்வான சிகிச்சையின் பாதிப்பு

- ✠ காசநோய்க்கிருமியானது சரியான செறிவுகளில், சரியான நேரத்திற்கு மருந்துகளை உள்ளெடுக்கும்போது மாத்திரமே முற்றாக அழியும். இவ்வாறு தொடர்ச்சியாக மருந்துகளைப் பாவிக்காதுவிடின், அந்நோய்க் கிருமியானது அனைத்துக் குளிசைகளிற்கும் தப்பிப்பிழைக்கும் ஆற்றலைத் தாமாகவே வளர்த்துக் கொள்ளும். அதாவது பின்னர் அதே மருந்துகளை ஒழுங்காக உள்ளெடுக்கும் போதும் அதனைக் கொல்ல முடியாதபடி தன்னை மருந்துகளுக்கெதிராக இசைவாக்கிக் கொள்ளும். இவ்வாறாக மருந்துக்கெதிராக இசைவாக்கப்பெற்ற கிருமிகளை அழித்தொழிப்பது மிகக் கடினமாகும்.
- ✠ தன் குடும்பத்தவர், அயலவர், வேலை செய்யும் நண்பர் போன்றோரிற்கு நோய்த் தொற்றை ஏற்படுத்துவர்.
- ✠ முறையான மருந்துப்பாவனையை இடைநடுவே கைவிட்ட ஒருவர், புதிய மேலதிக சிகிச்சையை நாடவேண்டியிருக்கும். இது அந்நபருக்கும், குடும்பத்தாரிற்கும் பொருளாதார ரீதியிலும், உளரீதியாகவும் பாதிப்பாக அமைவதோடு, மருத்துவர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களிற்கும், சுமையாய் அமையும்.
- ✠ ஏற்கனவே அறிந்தபடி சரியாக மருந்தை உள்ளெடுக்காதவர்களில் 50% ஆனோர் காசநோய் காரணமாக இறந்துவிடுவர்.

## நடைமுறையில் உள்ள சிகிச்சை முறைகள்

சாதாரண காய்ச்சல், தடிமன் போன்றல்லாது காச நோயானது ஓரிரண்டு குளிகைகளின் உதவியுடனோ அல்லது ஓரிரு வாரங்களிலோ, நாட்களிலோ குணப்படுத்த முடியாத நோய் என்பதனை நாம் அனைவரும் நன்கு உணர வேண்டும். ஏனெனில் இந்நோய்க்கான கிருமியானது சாதாரண கிருமிகள் போலல்லாது தன்னுடைய நீடித்த நிலைப்பிற்காகச் சில குறிப்பிட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது. இதனால் இக்கிருமிகளை ஒழிக்க ஒரு தொகுதி மருந்துகளை ஆறு மாதங்களிற்குப் பாவிப்பது அவசியமாகின்றது.

## கிருமியின் நீடித்த நிலைப்பிற்கான தற்காப்பு முன்னெடுப்புகள்.

- ✠ மிக மெதுவாகவே வளரும். இதனால் சாதாரண நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளால் அழிக்கப்பட முடியாதிருக்கிறது.
- ✠ கொழுப்புக்கூடிய அதன் கலச்சுவரானது நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள் உள்நுழைவதைத் தடுக்கிறது.
- ✠ இவை உறங்கு நிலையில் இருப்பதால் விரைவாகப்பெருக்கமடையும் கிருமிகட்கெனத் தயாரிக்கப்பட்ட நுண்ணுயிர்க் கொல்லிகளால் அழிக்க முடியாது.
- ✠ ஒரு நுண்ணுயிர்க் கொல்லியைப் பாவிக்கையில் அதற்கெதிரான எதிர்ப்புத் தன்மையை உருவாக்கும் ஆற்றல் உடையது. இதன் காரணமாகவே 4 வகை நுண்ணுயிர்க் கொல்லிகள் வழங்கப் படுகிறது.

சிகிச்சை முறையானது வகை-I, வகை-II என்று இரு பிரதான பிரிவுகளை உள்ளடக்கு கின்றது.

வகை-I சிகிச்சை முறையானது புதிதாக அடையாளங் காணப்பட்டவர்கட்கும், வகை-II முறையானது இடைநடுவே சிகிச்சையைக் கைவிட்டவர்களிற்கும், மீளவும் காசநோய் தொற்றியவருக்கும், எதிர்ப்புச்சக்தி கொண்ட வகை -I முறையால் அழிக்கப்பட முடியாத கிருமியுள்ள நோயாளிகட்கும் வழங்கப்படுகிறது. எந்தவகை முறையானாலும் நோயாளர் எக்காரணத்தைக் கொண்டும் குணங்குறிகள் மறைந்ததும் இடைநிறுத்தக் கூடாது.

6 மாதம் முடிந்த பின்னர் மார்ப்புப் படம் எடுக்கப்பட்டு வைத்தியரின் சிபார்சுடனேயே குளிகைகளை நிறுத்த வேண்டும்.

**வகை -I சிகிச்சை முறை**

இங்கு முதல் இருமாதங்களிற்கும் (ஆரம்ப அவத்தை) நான்கு குளிகைகளும், கடைசி நான்கு மாதங்களிற்கும் (தொடர்அவத்தை) 2 குளிகைகளுமாக, மொத்தமாக 6 மாதங்களிற்கு வழங்கப்படும். முதல் இரு மாதங்களிற்கும்– ஐசோநியசிட், றிபாம்பிசின், பிரசினமைற், எதன்பியூற்றோல் ஆகியன வழங்கப்படும். பின்னரான நான்கு மாதங்களிற்கும் றிபாம்பிசினும், ஐசோநியசிட்டும் வழங்கப்படும்.

**வகை- II சிகிச்சை முறை**

முதல் இரு மாதகால ஆரம்ப அவத்தையின் போது, வகை– I இன் அதே 4 குளிகைகளும் மேலதிகமாக ஸ்ரெப்ரோமைசின் எனப்படும் ஊசியும் போடப்படும். பின்னர் வரும் 1 மாதத்திற்கு 4 குளிகைகளும் பின் 5 மாதங்களிற்கு ஐசோநியசிட், றிபாம்பிசினுடன், எதன்பியூற்றோல் எனும் மருந்தும் கொடுக்கப் படும்.

மேற்படி சிகிச்சைகளை மேலும் இலகுவாக்க " குறுகியகால நேரடி அவதானிப்பு முறை" கையாளப்படுகிறது. இம்முறையில் முதல் 2 மாதங்களிற்கும் நோயாளி தினமும் குளிகை களை உட்கொள்ள, தன் வீட்டிற்கு மிக அருகா மையில் உள்ள ஒரு மருத்துவநிலையத்திற்கு அனுப்பப்படுவார். ஒவ்வொருநாளும் நோயாளி அந்த இடத்திற்குச் சென்று குளிகைகளை விழுங்கியபின் அவருக்கான அட்டையில் சுகாதார உத்தியோகத்தர் நோயாளி மருந்து உட்கொண்டதாக அடையாளமிடுவார். இதன் மூலம் நோயாளியின் தொடர்ச்சியான மருந்து உள்ளெடுப்பு அவதானிக்கப்படும். இதேவேளை நோயாளி சமூகமளிக்காதபட்சத்தில் அவர் சுகாதார உத்தியோகத்தர்களால் தேடப்பட்டுச் சிகிச்சையை தொடரப் பணிக்கப்படுவார்.

தற்போது ஆரம்ப அவத்தைக்குரிய 4 வகைக் குளிகைகளும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு தனி வில்லை வடிவில் உள்ளது. இது குளிகை உள்ளெடுப்பதை இலகுவாக்குவ தோடு, பலவகை குளிகைகளால் ஏற்படும் தேவையற்ற குழப்பநிலைகளையும் குறைக் கின்றது.

| | | |
|---|---|---|
| அளவு | <35 Kg | - 2 வில்லைகள் |
| | 35-50 Kg | - 3 வில்லைகள் |
| | >75 Kg | - 4 வில்லைகள் |

இவ்வாறான தொடர் அவத்தைக்குரிய 2 வகை மருந்துகளும் நோயாளியின் அசௌ கரியத்தைத் தவிர்க்கும் பொருட்டு ஒரு தனி வில்லை வடிவில் உள்ளது. சிகிச்சையின் வினைத்திறனானது வகை -I முறையில் 2ம், 5ம், மாதங் களிலும், சிகிச்சை முடிவிலும் மேற்

கொள்ளப்படும். இதேபோன்று வகை-II முறையில் 3ம் மாதத்திலும் செய்யப்படும்.

## நுரையீரல் தவிர்ந்த பிற இடங்களிற் காசநோய்த் தாக்கம்

காச நோய்க்கிருமியானது இரத்தத்தின் மூலமாக உடலின் பிற இடங்களிற்கும் கொண்டு செல்லப்படுகின்றது. குறிப்பாக மூளை, என்புகள், குடல், கண், சிறுநீரகம், மார்பு, விதை, குதம், வயிற்றுக்குழி, நிணநீர் முடிச்சுக்கள் என வெவ்வேறு பகுதிகளை இவை தாக்குகின்றது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை 2005ம் ஆண்டு 109 பேரும், 2006 ம் ஆண்டு 75 பேரும், 2007 இற்குரிய முதற்காலாண்டில் 21 பேரும் நுரையீரல் தவிர்ந்த பிற இடங்களிற் காசநோய்த் தாக்கம் இருப்பதாக அடையாளங் காணப் பட்டிருக்கின்றார்கள்.

## குழந்தைகளும் காசநோயும்

காசநோயாளி ஒருவரின் அரவணைப்பில் உள்ள குழந்தை அல்லது அவரது அருகாமையில் உள்ள குழந்தை, போசணை குறைந்த குழந்தைகளில் இந்நோய்த் தொற்றிற்கான வாய்ப்பு அதிகமாகவுள்ளது. குழந்தைகள் இருமல், சளி, சளியுடனான இரத்தம் , மூச்செடுக்கையில் நெஞ்சுநோ, மூச்செடுப்பதில் சிரமம், அடிக்கடி சுவாசப்பாதையில் நோய்த் தொற்று, நிறைக் குறைவு , விளையாட்டுச் செயற்பாடுகளில் நாட்டமின்மை , களைப்பு, உடற்சோர்வு, உணவு வெறுப்புப் போன்ற குணங்குறிகளை வெளிக் காட்டுவர்.

மேற்படி காச நோய்க்கெதிராகக் குழந்தை பிறந்து 24 மணித்தியாலத்திற்குள் பீசிஜீ எனப்படும் காசநோய்த்தடுப்பூசி ஏற்றப்படும். வீட்டிற் பிறந்த குழந்தையாயின் குடும்பநல மாதுவிற்கு அறிவிக்கப்பட்டு உடனடியாகத் தடுப்பூசி பெறப்படல் வேண்டும். இத்தடுப்பூசியானது குழந்தையை மூளைக்காசம் மற்றும் மிலியறி காசத்தில் இருந்து பாதுகாக்கின்றது. உலகளாவிய ரீதியில் நியம முறையாக இத்தடுப்பூசி இடது கையிலேயே இடப்படுகிறது. அதேவேளை இத்தடுப்பூசி இடப்படும் சில வாரங்களில் ஒரு தழும்பு ஏற்படும். இடது கை தோள் மூட்டுக்குச் சற்றுக் கீழாக (ஊசி போடும் இடத்தில்) அவ்வாறான தழும்பு 6 மாதங்களின் பின்பும் தோன்றாவிடின் கட்டாயம் வைத்தியரை நாடி, மீள ஊசியேற்றுதல் வேண்டும். தழும்பற்ற பிள்ளைக்குத் தடுப்பூசியானது ஒழுங்காக உடலின் நோயெதிர்ப்பு சக்தியை தோற்றுவிக்க வில்லை என்றே பொருள்படும். இவ்வாறான தழும்பு வராத பிள்ளைகள் 5 வயது வரை மீளவும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும். வீட்டிற் பிறந்தாலோ, மருத்துவமனையிற் பிறந்தாலோ போடப்படும் காசநோய்த் தடுப்பூசிக்கு எந்தவித பணமும் அறவிடப்படமாட்டாது.

## நோக்கம்

காசநோய்ச்சிகிச்சையின் நோக்கமானது பின்வரும் அம்சங்களைப் பூரணப்படுத்துவதற் காக முனைப்படுத்தப்பட்டிருக்கும்.

- நோயாளியைக் காசநோயில் இருந்து பாதுகாத்தல்.
- இறப்பைத் தவிர்த்தலும் நோயின் பிந்திய விளைவுகளைத் தவிர்த்தலும்
- மீள் காசநோய் ஏற்படுவதைத் தவிர்த்தல்.
- பிறருக்குப் பரவுவதைத் தவிர்த்தல்.

சகல மருந்துகளைப் போலவே காசநோய்க் கெதிரான குளிகைகளும் பக்க விளைவுகளைக் கொண்டிருக்கும். இந்தப் பக்க விளைவுகளைச் சாதாரணமானவை, பாரதூரமானவை என நாம் பிரித்து நோக்கலாம். முதலிற் பாரதூரமற்ற சாதாரண பக்கவிளைவுகளைப் பார்ப்போம். றிபாம்பிசின் என்னும் மருந்தானது சிறுநீர்,

வியர்வை மற்றும் பிற சுரப்புகள் மூலம் வெளியேற்றப்படுகின்றது. ஆதலால் சிறுநீர் இரத்தம் கலந்தது போன்று சிவப்பு நிறமாகத் தோன்றும். பல நோயாளர்கள் இதனைத் தவறாகப் புரிந்து கொண்டு சலத்தோடு குருதி வெளியேறுவதாக உணர்ந்து குழம்புவதோடு, சிகிச்சையையும் இடைநடுவே கைவிட எத்தனிப்பர். இது மருந்தின் நிறம் என்பதனை அறிந்துகொள்ளவேண்டும். இச்சிவப்புச் சலமானது நண்பகலிற்குப் பின்னர் சாதாரண சலமாகவே கழிக்கப்படும். நண்பகலிற்குப் பின்னரும் குருதி கலந்தது போன்ற நிறமான சிறுநீர் வெளிப்படுமாயின் மாத்திரம் வைத்தியரை நாடி மேலதிக சிகிச்சை பற்றி ஆலோசிக்க வேண்டும். நாம் பீற்றூட் போன்ற நிறமுள்ள உணவுகளை உட்கொள்ளும்போது, மலம் சிவப்பு நிறத்தில் வருவதைப் போலவே இதுவும் சாதாரண விடயம் என்பதை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக மெல்லிய சொறிவு போன்ற தோல் வியாதிகள் ஏற்படலாம். இவை சாதாரண மாகவோ, சிலவேளை தாங்கவொண்ணாத தாகவோ இருக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் உடனடியாக வைத்தியரை நாடிப் பிரச்சனையை தீர்த்துக்கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் தாமாக மருந்துகளை நிறுத்தக் கூடாது.

எதன்பியூற்றோல் எனப்படும் மருந்தானது பார்வைப்புலனைக் குறைக்கும் தன்மையை ஒரு பக்கவிளைவாகக் கொண்டுள்ளது. எனவே காசநோய்க்கெதிராக மருந்து பாவிப்போர் தம் கண்பார்வையானது குறைவானதாக உணரின் வைத்திய உதவியை நாடி மாற்றுக் குளிகை களைப் பெறவேண்டும். ஆயினும் மருந்தை மாற்றியதும் பார்வையானது மீளவும் பழைய நிலைக்குத் திரும்பும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இக்குளிகைகள் சிறுவர்கட்கு, வழங்கப்படமாட்டாது.

அடுத்து குளிகையான ஐசோநியசிட் ஆனது நரம்புசார் பக்கவிளைவுகளை ஏற்படுத் தக் கூடியது. உதாரணமாக கைகால்களில் விறைப்புத்தன்மை, ஞாபகமறதி , ஒருங்கிசை வான செயற்பாடின்மை போன்றவை ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைத் தவிர்க்க முற்பாதுகாப் பாகவே பிரிடொக்சின் எனப்படும் மருந்தும் சேர்த்தே வழங்கப்படும்.

இப்பக்கவிளைவுகளை விடவும் மூட்டுநோ ஏற்படலாம். இதனைப் பரசிற்றமோல் போன்ற வீரியங்குறைந்த வலி நிவாரணிகளைப் பாவிப்பதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். இதனைவிடக் குருதிக் கூறுகளில் மாற்றம், ஈரல் அழற்சி போன்றவையும் நிகழலாம். மருந்துப் பாவனையின் பின்னரான கண் மஞ்சள் நிறமாதல் ஈரல் அழற்சியின் அறிகுறியாகும். இவ்வாறு கண் மஞ்சளடையும் பட்சத்தில் வைத்திய உதவி பெறப்படுதல் மிகமுக்கிய மாகும்.

பெரும்பாலான பக்க விளைவுகள் வைத்திய ஆலோசனையின் பின்னர் முற்றாகப் பழைய நிலமைக்கு எம்மை இட்டுச் செல்லும். எனவே நாமாக முடிவெடுத்து மருந்துப்பாவனையை மாற்றவோ கைவிடவோ முயலாது உடனடியாக வைத்தியரை நாடுதல் வேண்டும்.

காசநோயற்ற உலகிற்கான முழுப்பொறுப் பும் எமது அர்ப்பணிப்பிலும், காசநோய்க் கெதிரான மூர்க்கமான தற்காத்தலிலுமே தங்கியுள்ளது. இன்றே காசநோயை எதிர்ப்பதன் மூலம் நாளைய நாள் நல்லதாய் மிளிர வழி சமைப்போம்.

# நா(கா)டாகும் கா(நா)ட்டில்
# மனிதம் தவிக்கிறது மிருகம் சிரிக்கிறது



கு. ஆர்வலன்
26ஆம் அணி

காட்டு வழிப்பயணம்
கரைநாடும் சில நொடிக்குள்
அனல் சூழ்ந்தவனமிசை
நிழல்தேடித் துடிக்கின்றோம்
நாற்புறமும் கடல்சூழ்
நானிலத்தின் தொப்புள் கொடி வழியில்
சிறுத்தை புலிகளுடன் சிங்கங்களின் சீற்றம்
பருக்கைக்கும் வழியின்றி
வனங்களில்(ஏ) மாற்றம் - எம்
மனங்களிலே சீற்றம்

ஏதிலியாகி உலகத்திசைகளில்
எம்மவர் இருக்கின்றார்!
நாதியற்று தாய் நிலத்திலும்
பேதைகொண்டலைகிறார்!

சாதி கோஷ்டி எனச் சந்திகளில் மோதியவர்!
பாதியிலே கட்சியினை
பணத்திற்கு விற்றவர்...
வேலிச்சண்டைகளில்
வெற்றிக்கொலை நாட்டியவர் ...
தாலிக்காய் பெண்டிரை
மணந்துயிர் எடுத்தவர்....
இன்றும்தான் இருக்கிறார்!
என்று தான் திருந்துவார்?
எம் தமிழ் தலைவர் - சிலர்
இவர்கள் தான் நேற்றுவரை
முழங்கினர் மேடை எங்கும்,
வாக்கிடுங்கள் எனக்கு - மீட்டுவேன்
உரிமையினை! ஆட்சிக் கதிரையிலே
தட்டிப்பறித்தபோதும் ஏமாந்த பேர்வழிகள்
ஆடையின்றிய அவலம்மறந்து
மேடை மேடைகளாய் பெரும்சபதமிட்டார்.
பழம்பெரும் படைத்தமிழர் என்றார்
மதிப்பலம் மிக்கவர் என்றார்,
இழந்ததைப் புகழ்ந்து
இனத்தினைப் புதைத்தவர்,
உடல் ஆடி விழவும்
உயிரது அடங்கவும்
அவர் பிள்ளை வந்து
அப்பன் பணியினைப் பிள்ளையும்....
ஆளுவோம் கதிரையை
அளியுங்கள் வாக்கினை!
வீட்டுக்கு வீடேகி
வோட்டுக்கு கரைந்து நிற்பான்
வாக்குக்கு மயங்கிய மக்களும்
வாக்கற்ற தலைவரை
கதிரையில் அமர்த்தினர்
இப்படிப்போனவன் ...
குற்றுயிர் தமிழனுக்கு ஆறுதல் சொன்னான்
உன்னுயிர் பிரிவது நிச்சயம் - ஆகையால்
உன்வாக்குச் சீட்டினை எனக்கு
உயில் எழுது!
பயங்கரவாதக் கொடுமையை
பட்டப்பகல் கொலைவெறித்தனைத்தைப்
பாலிச்சைக்கு அடக்கிய தமிழிச்சி உயிரை
அனலில் கருகிய தமிழரின் சொத்தை
கனதியாய் எண்ணான்,
தனக்கில்லை இழப்பென்றால்
தலைகூடக் காட்டான்!

ஒருவேளை பிள்ளை வெளிப்பட்டு வருவான்
தேர்தலில் தன் தீரத்தைப் புலம்பிட உதவின்
கொலைகளைச் சொல்வான்
அப்பாவி மக்களின் அநியாயசாவு
அழிக்கப்பட்டசொத்துக்கு
அளிக்கவும் நட்டஈடு!
இழக்கப்பட்ட மானத்திற்கு மௌனம்தான்!
ஆள்பவன் கொடுமைக்கு
அகிம்சை,
சத்தியாக்கிரகம்,
கடையடைப்பு,
பணிப்புறக்கணிப்பு,
எம்மை நாமே அடக்கிடச் செய்தான்.


அகிம்சைக்கு மன்னன் இம்சைகள் தந்தான்!
சத்தியாக்கிரகத்தை கால்களால் மிதித்தான்!
கடையடைப்புக்கு கடைகளை எரித்தான்!
பணிப்புறக்கணிப்புக்கு
பயணிகழுத்தறுத்தான்!
இவற்றிற்குப் பின்னும்
எம்மவன் அடங்கியே போவான் - ஆனால்
எம்முன் ஆயிரம் கண்டன அறிக்கைகள்
அதனை பின் மடித்து
கைக்குள்ளே மறைப்பான்
எத்தனை வருடங்கள் இப்படிப் போச்சு!
ஏமாளி தமிழன்
விடிவு வரும் விடிவு வரும் - என
விழித்திருந்தபோதும்

விடிந்தது அறியுமுன்
விழிகள் பறிக்கப்பட்ட முகங்கள் உடன்
சுமந்தவையனைத்தும்
சுழல் காற்றிற் கொடுத்து
தத்தளிக்கும் கடலில் தவிக்கும்
படகாகி எம்பயணம்!

பிச்சைக்குப் பணிந்து எச்சில் கையாகி
சொந்த விடுதலைக்கே சுருக்கிட்ட
சதிவழி வள்ளல்கள் சாகவே இல்லை!
சரித்திரம் இன்றும் மீளவும் இல்லை!
ஆடைக்குக்கூட அடைமானமாகி
அந்நியன் வேசத்துள் முகமறைவாகி
சொந்த இனக் குருதியினை
சுவைக்கின்ற ஜென்மங்கள்!
பிஞ்சுகளின் மனங்களை
முறிக்கின்ற யானைகள்!
தந்திரத்தால் தான் வாழத்
துடிக்கின்ற மந்திகள்!
இவையெல்லாம் காட்டில் அல்ல
இப்போது ...

மனிதவுடல் கொண்டு
இங்கே
இவைகளின் நடுவே
தவிக்கிறது - எங்களினம்
மனிதம் தவிக்கிறது ...!
மிருகம் சிரிக்கிறது ...!

மனதிலிருப்பதையே சொல்;
இல்லையேல் மௌனமாக இரு.
-புத்தர்-



# முடிவைத் தேடும் சமாந்தரங்கள்



இ.இராஜந்தி
25ஆம் அணி

என்றுமில்லா மகிழ்ச்சியுடன் அன்று வீடு குதூகலித்திருந்தது. இன்னும் ஒரு மாதத்தில் கஸ்தூரிக்குத் திருமணம் நடாத்த நிச்சயித் தார்கள். வீட்டோர் முகத்தில் நிம்மதிக் கோலங்கள் ...ஆம் ... இந்தக் கல்யாணத்துடன் வீட்டின் வறுமை விடைபெற்றுவிடும் என்ற எதிர்பார்ப்புத்தான்!

வெளிநாட்டு மாப்பிள்ளை ... ஒரு சதம் சீதனம் இல்லை ... கலியாண வீட்டுச் செலவும் அவங்கள்தான்" பெருமையாகச் சொல்லிச் சொல்லியே அப்பா மாய்ந்து போனார்.

"இருவத்தைந்து வரியம் கைக்குள் இருந்தவளை .... வெளியில் அனுப்புறது எண்டாக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்குது .... ஆனால் பெடியன் குணத்தில தங்கம் ...எங்கட வீட்டு நிலைமையும் அப்படி" அம்மா காரணகாரிய விளக்கம் சொல்லித் திரிந்தா.

நாட்டு நிலைமைகளால் கொழும்பில் தான் கலியாணம் என்று மாப்பிள்ளை வீடு ஒரே முடிவாகச் சொல்லிவிட்டது. "அவனுக்கு PR இருக்குது ... அதால கலியாணம் முடிஞ்ச உடனேயே அங்கால கூப்பிட்டிடுவான்" என்ற தகவலால் எல்லோரிடமும் பயணம் சொல்ல வேண்டிய வேலையும் கஸ்தூரிக்கு சேர்ந்து கொண்டது.

"பிள்ளை .... என்னதான் நான் இங்கால வந்து, நீங்களும் பிறந்து வளர்ந்தாலும், ஒருக்கா ஊருக்குப் போய்ச் சொல்லீட்டுத்தான் வரோணும்" என்று அம்மா நச்சரித்தது தாளாமல், ஒரு நாளை ஒதுக்கிக் கொண்டு இரு வருமாகச் சென்றார்கள்.

பஸ் ஏறி வந்து சேரக் காலை 9 மணியாகிவிட்டது. "அட கோயில் குளிர்த்தி நடக்குது .... நல்ல சகுனம் தான்!" அம்மன் கோயிலைப் பார்த்த அம்மா பூரித்துப்போனா.

"அட ரத்தினத்தின் பேத்தியெல்லோ" என்றவாறு சில ஊரவர்கள் அம்மாவைச் சூழ்ந்து கொள்ள, கஸ்தூரியோ தெரியாத முகங்களைப் பார்த்து அவஸ்தையாய்ச் சிரித்துக்கொண்டாள்.

கோயில்தாண்டி இருவரும் நடக்கத் தொடங்கினர். " உன்ர அப்பாவைக் கட்டின பிறகு... நான் ஊருக்கு வர்றது சரியா குறைஞ்சு போச்சுது" என்று அம்மா தன் பழைய புராணத்தைத் தொடங்கினா. போகிற வழியில் ஒவ்வொரு வீட்டையும் காட்டி, இது இன்னாரின் வீடு, என்று மேலதிகத் தகவல்களையும் வழங்கினா.

"அம்மா .... இவையெல்லாம் சொந்தக் கார வீடெண்டுறீங்க ........ ஆனா நாங்க இப்ப ஐஞ்சோ ஆறு வீட்டுக்குத்தானே போகப் போறம் " கஸ்தூரி குறுக்கிட, ஐயோ பிள்ளை,

முக்கால்வாசி சனமும் வெளிநாட்டிலை" என்றா அம்மா. நானும் தானே வெளிநாடு போகப்போறன்... அம்மாவின் பதில் கஸ்தூரி யின் மனதுக்குக் கஷ்டமாயிருந்தது.

அம்மாவின் தாத்தா வீட்டுக்குப் போகோணுமெண்ட ஆசை .... கஸ்தூரியின் மனதுக்குள் எழுந்தது. " அங்க பெரிய மாமாவின் மகன் தானே இருக்கிறான்..... அந்தப் பெரிய காணிக்குள் பெரிய வீடு ... அவனோ பேய் குடியிருக்கிற வீடுமாதிரி, ஒழுங்கா வைச்சிருக் கிறதும் இல்லை.... பிறகேன் அங்க ! " என்று அம்மா எதிர்ப்பைக் காட்டினாலும், கஸ்தூரியின் ஆசைக்கு முன்னால் அடிபட்டுப் போய்விட்டது.

பல நாட்கள் எண்ணெய் காணாத கேற், இவர்கள் கைபட்டுக் கிரீச்சிட்டது. பக்கத்தில் இருந்த இரட்டை கேற்றோ, தகரம் மட்டைகளால் முண்டு கொடுக்கப்பட்டிருந்தது. "பார்பிள்ளை .... எத்தினை லொறி வந்து போன வீடு.... இப்ப இந்த கேற் கிடக்கிற கேவலத்தை" அம்மாவின் அங்கலாய்ப்புக் கஸ்தூரிக்கும் வேதனையைத் தந்தது. முனனொரு காலத்தில் பூந்தோட்டம் இருந்தது என்று அம்மா சொல்ல, முற்றத்தின் வெறுமையை பார்த்த கஸ்தூரியால் நம்ப முடியவில்லை.

கம்பீரமான வீடு ....... வாழ்வோடு போராடும் வயோதிகத்துடன் காட்சி தந்தது. ஓடுகள் சிதைந்திருக்க .... முன் கதவோ உக்கிக்கிடந்தது.

"மாமா ... மாமா " கஸ்தூரியின் அழைப்புக்குப் பதிலில்லாமல் போக, முன்கதவில் கை வைத்தால், தன் பாட்டில் திறந்து கொண்டது, "மாமா .... இல்லைப்போல, நீங்க உள்ளுக்கு வாங்கம்மா" என்றபடி கஸ்தூரி பெரிய ஹோலுக்குள் சென்றாள். கவனிப்பாரற்ற அவலம் வீட்டின் ஒவ்வோர் அங்குலத்திலும் சோகத்தைத் துளிர்க்க வைத்திருந்தது. சின்னஞ்சிறு வயதில் இங்கு வந்தபோது, கற்பனையில் வரும் அற்புதம் போல வீடு காட்சியளித்தது கலங்கல் ஞாபகமாகக் கஸ்தூரிக்கு வந்தது.

அம்மா மீண்டும் புலம்பத் தொடங்கினா... " சரி ... சரி ... வாங்கம்மா என்று அம்மாவை இழுத்துக்கொண்டு பின்வளவினூடாக நடந்து, வயல்கரைக் கிணற்றுக்கட்டில் அமர்ந்தாள்.

"இங்கதான் நாங்க சின்னனில குளிக்க வாறது, மாரிகாலம் எண்டால் சொல்லி வேலையில்லை... அங்கால வயல் சும்மா பச்சைப்பசேல் என்றிருக்கும் .... அதையே பார்த்துக்கொண்டிருக்கலாம்" அம்மாவின் குரல் கனவில் மிதந்தது.

எத்தனைபேர் வாழ்ந்த இடம்..... எல்லோரின் சிரிப்பு ... குறும்பு .... கலகலப்பு ... சோகம் .... எல்லாவற்றையும் பகிர்ந்து வாழ்ந்த இடம்... இப்ப தன் சோகத்தைச் சொல்ல ஆளில்லாமல் ... ஹூம் கஸ்தூரியின் மனம் சோகப் பெருமூச்சு விட்டது.

எந்த நேரமும் வீட்டில விருந்தாளிகளும் வேலையாட்களும் தான் " அம்மாவின் பேச்சு, கஸ்தூரியின் மன ஓட்டத்துடன் சேர்ந்து கொண்டது.

"பிள்ளை, நேரத்தைப் பார். இருட்டு றதுக்கு முந்தி வீட்ட போடோணும்" என்றவாறு

அம்மா நடக்கத் தொடங்க கஸ்தூரியும் தொடர்ந்தாள்.

"என் நிலையைப் பார் .... பதினைந்து வருசத்துக்கு முந்தி என்னில் எல்லோரும் அடைக்கலமாயிருந்தார்கள்..... இப்போதோ அநாதையாய் நான்" என்று வீட்டுச் சுவர்கள் எல்லாம் அலறுவது போல் பிரமை கஸ்தூரிக்கு ஏற்பட்டது; நெஞ்சிலே பாறாங்கல் ஏறி அமர்ந்து கொண்டது. ஊருக்குள் கட்டினபிள்ளைக்குத் தான் தாத்தா இந்த வீட்டைக் கொடுத்ததாக அம்மா எப்பவோ சொன்ன ஞாபகம். " முந்தி யெண்டா இப்படி நடந்து போகேக்க எத்தனை சொந்தக்காரர்" அம்மா சொல்வதை ஆமோதிப் பது போல் சாலைகள் வெறுமையைக்காட்டின. அம்மாவின் சகோதரங்களில் கடைசி ஒருவ ராவது இங்கிருந்தால், நானும் இந்த மகிழ்ச்சி களை அனுபவித்திருக்கலாமே என்று மனசு ஏங்கியது. " கடைசியில் எல்லோரும் எல்லா வற்றையும் உதறிவிட்டுப் போட்டினம்" கஸ் தூரிக்குக் கோபமாக வந்தது....மீண்டும் "ஐயோ நானும் அப்படித்தானே ..." முள்ளொன்று இருதயத்தை வலிக்க வலிக்க மீண்டும் குத்தியது.

பஸ் ஏறி வீடு திரும்புகையில் கஸ்தூரியின் உள்ளமெல்லாம் ஒரே யோசனை. பிறந்து.... தவழ்ந்து.... நடந்து திரிந்த மண்ணை விட்டு நானும் போகப் போறேனோ? திரும்பத் திரும்ப தாத்தா வீட்டு அவலம் மனக்கண்ணில் சுழன்றடித்தது. " என் தாத்தாவின் வீடு மாதிரி.... வளவு மாதிரி.... என் மனதுக்குப் பிரியமான இடங்களும் தனிமையில் தவிக்க வேண்டுமா?" கஸ்தூரியின் மனம் தவித்தது.

" அம்மா ... நான் வெளிநாட்டுக் கலியாணம் செய்யேல ...." கஸ்தூரி சொல்ல, "என்ன பிள்ளை?? " அம்மாவின் கேள்வியில் உலகத்து அதிர்ச்சி எல்லாம் வந்து ஒட்டிக்கொண்டது. "ஓமம்மா.... எங்கட ஊரைப் பார்த்தனீங்க தானே ... சொந்தங்கள் எதுவுமில்லாம .... வெறும் காணிகளும் வீடுகளும்; நீங்கள் சொன்னீங்களே , முந்தி தாத்தாதான் குளிர்த்திக்கு முதல் பொங்கல் வைக்கிறவர் எண்டு, இண்டைக்கு நாங்க மூண்டாமாக்கள் மாதிரி கும்பிட்டிட்டு போறம் ... இதெல்லாம் என்னெண்டு வந்தது...? எல்லோ ரும் ஊரை விட்டு ஓடிப் போனதால்த்தானே ... எனக்கு மனசுக்குச் சரியான கஷ்டமாய் இருக்குது .... என்ன இருந்தாலும் இங்க இருந்து, ஊர்சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும்....." கஸ்தூரியின் பதிலால் அம்மா கொஞ்ச நேரம் கதைக்கவில்லை..... பின் "சரி பிள்ளை .... உன்ர விருப்பத்துக்கு குறுக்கே நான் நிற்கப்போறேல, ஆனா எங்கட வீட்டு நிலையை யும் யோசிச்சு ... ஒரு நல்ல முடிவுக்கு வா .... " என்றபடி அம்மா படுக்கப் போய்விட்டா. கஸ்தூரி யின் மனமோ, இரண்டு தோணிகளில் காலூன் றிக் கொண்டிருந்தது.; ஊரின் வெறுமைக்கும் வீட்டின் நிலைமைக்கும் இடையில் தவித்துக் கொண்டிருந்தது. "என்னைப் போலவே மற்றவர்களும் ஓடியதால் தான் இன்று இந்த நிலைமை .... நானாவது " மற்றவர்களைப் பார்க்காமல் சரியான முடிவு எடுக்கக் கூடாதா" என்று கஸ்தூரியின் மனம் அங்கலாய்த்தது.

வீட்டுக் கடன் முடியப் போகுது எண்ட பெற்றோரின் சந்தோஷ முகமும், இனி வரப் போகும் ஒளிமயமான எதிர்காலத்தை எண்ணிய

சகோதரர்களின் சந்தோஷ முகமும் .... இந்த நேரம் பார்த்து ஞாபகத்திற்கு வந்தது.

" நான் செய்யுறது எனக்குச் சந்தோஷத் தைத் தரும் .... ஆனா அவர்களுக்கு.... மீண்டும் பழைய சோகங்கள் தான் ! என்னோட சுயநலத்துக்காக மற்றவரின் சந்தோஷத்தை நான் கெடுக்கலாமா? மனதில் ஓடும் போராட்ட பிரளயத்தில் முடிவெடுக்க முடியாமல் அப்படியே அயர்ந்து போகிறாள் கஸ்தூரி.

ஷெல்லின் அதிர்வுகளால் கஸ்தூரி திடுக்கிட்டு எழுந்தாள்..... " விடிந்துட்டுதோ " என்று அவசரமாக நேரத்தைப் பார்த்தால் அதிகாலை 2 மணி !

"ம் ......... எங்கட நாடு இப்படி இருக்கும் மட்டும்.... அக்கரைகளைத் தேடி இக்கரைகள் ஓடிக் கொண்டுதான் இருக்கும். என்னைப் போல ஆக்களும் தங்களை வளர்த்தவை. .... கூடப்பிறந்தவை ... என்று மற்ற ஆக்களின் மகிழ்ச்சியைப் பார்க்க வேணும் ; சொந்தங் களைத் திருப்திப்படுத்தாமல், நாங்கள் மனசுக்குப் பிடித்த மாதிரி நடக்கிறது அர்த்த மில்லாதது ...." கஸ்தூரியின் மனமும் முடிவுகள் போடத் தொடங்கியது.

ஆம் ...... அவளும் மண்வாசம் கிளம்பும் புழுதித்தரையை ..... வயல் காற்றைவிட்டு விலகிப் போகத்தான் போகின்றாள், என்றாவது ஒரு நாள் தன் மகிழ்ச்சிகள் மீண்டும் துளிர்க்கலாம் என்ற நம்பிக்கைகளோடு .....!

பிறருடைய தர்மத்தை நன்றாகச் செய்வதை விட, நிறைவில்லாததாக இருந்தாலும் சொந்த தர்மத்தைப் பின்பற்றுவது சிறப்பானது. சொந்த தர்மத்தைப் பின்பற்றி மரணத்தை தழுவுவது கூடச் சிறப்பானது. ஏனெனில் பிறருடைய தர்மம் பயம் நிறைந்தது.

பகவத் கீதை –

# குறைப் பிரசவம்


வித்யா
28ஆம் அணி

மௌன ஓடுகளை
உடைக்க முயற்சிக்கிறது
உளக்கூட்டில்
கருக்கட்டிய வார்த்தைகள்.....

அவஸ்தையில்
அங்குமிங்கும் ஆடியதால்
அமைதிச் சூழலில்
ஆங்காங்கே வெடிப்புக்கள்!

சொல் பிரித்து
வெளியேறியபோதும்
மழை நனைத்த கோழிக்குஞ்சாய்
வார்த்தைகளில் வெடவெடப்பு!

யுகயுகாந்திரமான
தேக்கங்கள்
துள்ளிவெளியேறுகையில்
குறிலும் நெடிலும் பின்னியிழுக்கும்
பிதற்றுதலாகிறது
பேசும் பொருள்.
உருவமற்ற வார்த்தைகளின்
உணர்வுகளைப் புரியாமல்
மௌனித்து  தவிக்கிறது
என் உலகம்!



# 24th batch

**1st line-Standing Left-Rihgt**

K. Vinothas
M. Steephan
R. Vimalrajan
K. Selvaskanthan
T. Ramanan
T. Sivapiramiyan
K. Vikneswararajah
P. Sivamayoori
J.R.Baskaran
A. Senthooran
M. Navaneethan
N. Navarooban
S. Prasanna

## ABSENT

| | |
|---|---|
| B.Harikaran | M.Mathurageethan |
| S.Panchakalyani | S.Nishanthan |
| S.Sangeetha | V.Sarangan |
| A.C.Nishanthi | S.Vijitha |
| B.Geethanjali | S.Sivakala |

**2nd line-Standing Left-Riht**

S. Yasotha
P. Sharon Virginia
M. Nalina
S. Sangeetha
J. Camilus
T.Visvethithan
T. Satheesan
B.Devakanthan
B. Senthooran
S. Mayooran
K. Kumaran
J. Gajendiran
Y. Thineshkanth
S. Vinothan
T. Gowrypalan
R. Sivashankar
S. Thubakaran
R. Sasivathni
S. Sasitha
R. Mythri
S. Kalagini

**3rd Line Sitting Left-Riht**

A. Nilayini
N. Nalayini
M. Brinthini
N. Thmilini
T. Jeyaniba
R. Ahila
S. Sivakala
A. Anuratha
C. Nirojah
M. Ravjithatharshiny
S. Umaramni
S. Ahalika
B. Thuwaraka
C. Rajini
S. Sivathi
J. Jeyappiriya
V. Gobika
S. Kugaprikai
G. Sivanuja
C. Sivaanuya
S. Thushiyanthi
N. Bavani
K. Nishanthi
B. Abarna




24th Batch

# நன்றி நவிலல் ...



ஞானரதன்
25ஆம் அணி

நான் சலித்துக் கொண்ட
சிலவேளைகளில்
சிரித்தபடி சொல்லும்
எம்பி மிதி ...


சூரியக் கடிகாரம்
காணாமற் போயினும்
சிரித்தபடி எனையழைக்கும்
ஏறவாவென....

மெல்ல ரதமெறி
அதன் திமில் மீதென்
கொழுப்பு அறைசுமத்தி
கைகளில் கடிவாளம் பிடிக்க ....

மெல்ல நகரும் - என்
இலட்சியரதம் ....
கலண்டர்ச் சிவப்புகளிற்
கூட நான்
சின்னதாயும்
துடைத்ததில்லை ....

பெருவிழாவோ
பேருதவியோ
எதுவுமே
செய்ததில்லை....

விழுந்த போது
தொட்டுத் தூக்கி
வலிமறக்கும்



வார்த்தை தந்ததில்லை....
எப்போதாவது
காற்றிட்டு ...
எண்ணையிட்டு...
நினைவிலில்லை...

கிரிச்செனக் கத்தும் ...
நிற்க முடியாதென
தடுப்போடு
தடைபோடும்.....

வளைந்து ஓடி
வித்தை காட்டும் ....

மணி தவிர்த்து
மற்றைய பாகமெல்லாம்
'கிண்' பாடும் ....

சரிந்து நிற்பதா
சட்டென வீழ்வதா ...
சங்கடப்படும்
நிறுத்துகையில் ....

என் தேக நிறத்தில்
என் ஒய்யாரச் சவாரி ....

என்
சைக்கிள்!

## 25th batch

**Sitting Left-Riht**

N. Thiramahal
K. Gayathri
S. Mathuriga
M. Surendran
S. Tharshna
B. Prathaban
S. Thirivergan
K. Ragulan
U. Gobi
G. Paheerathan
T. Kirubendran
P. Nishhan
S. Tharshan
S. Premkumar
N. Sathiyasaharan
G. Thivijananth
S. Thevakumar
S. Sivachandran
S. Nivetha
M. Logitha
B. Nishnthi

### ABSENT

T.Baskaranathan
E.J.Pushpakanthan
R.Sureshkumar
R.Sutharsanan
T.Sendthvaran
K.Pushpamala
K.Sivasuthan
G.Senthan
G.Senthuran

**Standing (middle) Left-Riht**

T. Mithunraj
R. Nishanthan Dias
M. Rajkumar
F.M. Anto Rajeev
M. Ramagini
S. Suganya
S. Arinsikai
A. Shiyashni
M. Thuwaraka
N. Pathmapriya
T. Vasuki
T. Tharani
R. Rajanthi
S. Rojitha
B. Jane Sangeetha
R. Jana
P. Kiripalini
R. Brintha
S. Subothini
J. Janitha
P. Geetha
S. Sivaranjani
K. Arunthini
T. Anujan
S. Naleethran
S. Sijethan
S. Karthigan

**Standing (back) Left-Riht**

S. Gajelan
G. Haritheek
S. Sasikumar
P. Rubasingam
S. Sujendran
T. Janarthanan
D. Thusiyanthan
N. Shakthiraj
A. Satheeskumar
N. Mathusoothanan
M. Mayooran
P. Jeyawaranan
V. Aynkaran
V. Ragulan
R. Gauthaman
S. Srinilanthan
M. Suthan
V. Vijitharan
P. Nishanthan
T. Suganthan
S. Skantan
N. Tharanitharan
A. Donald Rubahan
V. Jeyadinesh
K. Chenthan
J. Jansan


FACULTY OF MEDICINE
1978
25th Batch

# கண்தானம் ஒளியூட்டும் உன்னத பணி , ஓர் அறிமுகம் !



K. மணிதீபன்
30ஆம் அணி

உலகிற் பிறந்த மனிதர்கள் எல்லோரும் இறப்பது இந்த உலகின் நியதிஆகும். அம்மனிதர்களிற் பூரணமிக்க மனிதர்களாக வாழ்ந்த மனிதர்கள் எவருமே இல்லை. ஒவ்வொருமனிதனும் எந்த ஒருவகையிலோ ஊமையாகவே இருக்கிறான். அவ்வாறு ஊமையானவர்களிற் கண்பார்வையற்ற வர்களும் ஒரு வகையினர். இவர்கள் பிறக்கும் பொழுதோ அல்லது வாழ்க்கைப் பாதையின் ஏதோஒரு நிலையிலோ கண்பார்வை இழந்திருக் கலாம். இது மருத்துவ உலகிற்குப் பெரும் சவாலாக இருந்து வருகிறது. உலகில் நாளுக்கு நாள் பல்வேறு பகுதிகளிற் பல்வேறு காரணங் களால், கண்பார்வை இழக்கப்படுகிறது. பிறக்கும்போதே கண்பார்வையற்ற குழந்தைகள் (Visually handi capped Children) பிறக்கின்றன. இவை பெரும் மருத்துவ ஆராய்ச்சிகளுக்கும் சத்திரசிகிச்சைகளுக்கும் இட்டுச் செல்கின்றன. இவற்றிற்குத் தீர்வாக இன்று உலகம் பூராகவும் பின்பற்றப்படும் ஒரு சிகிச்சை முறைதான் "கண் மாற்றுச் சிகிச்சை முறை" (Corneal Transplant).

பிறர் வாழ்வில் ஒளியேற்றி உலகின் மகிமையை உணரவைக்கும் இந்த உன்னத சிகிச்சைக்கு ஊன்றுகோலாக இருப்பது கண்தானம். இறப்பின் பின்பும் உலகின் ஒளியை உணர்வதற்கு உன்னத இப் பணி உதவுகிறது.

**யார் செய்வது?**

நல்ல மனநிலையிலுள்ள 10 வயதுகளைக் கடந்த எந்தவொரு மனிதனும் கண்தானம் செய்யமுடியும். மூக்குக் கண்ணாடி பாவிப்போர், நீரிழிவு நோயாளர், உயர் குருதியமுக்கம் உள்ளோர் (Hypertension) ஆஸ்துமா நோயாளிகள், வயது முதிர்ந்தோர் ஆகியோரும் மேற்கொள்ளமுடியும் .விழித்திரை அல்லது பார்வை நரம்பு (Optic nerve) போன்றவற்றின் பாதிப்பினாற் கண்பார்வையை இழந்தவர்கள்கூட கண்களைத் தானம் செய்யமுடியும்.

**எவ்வாறு செய்வது?**

மிக நீண்ட தூர நோக்குடையவர்கள், உண்மையில் விருப்பமுடையவர்கள் இதனைச் செய்வதன்மூலம், இந்த உலகிலே மிகச் சிறந்த பண்புகளின் வெளிப்பாடுகளைக் காண்பிப்பார் இவர்கள் இரண்டு முக்கிய விடயங்களைக் கவனத்திற் கொள்ளவேண்டும். முதலில் தன்னுடைய சிந்தனையைக் குடும்பத்தினருடன் ஆலோசித்து உறுதியான முடிவுகளை எடுத்தல், பின்பு அருகிலுள்ள கண்தானச்சபையின் ஊடாகவோ அல்லது கண்வங்கி (Eye Bank) யின் ஊடாகவோ கண் தானம் செய்வதற்குரிய படிவத்தைப் பெற்று பூரண மன சம்மதத்துடன் நிரப்பிப் பதிவுகளை மேற்கொள்ளல். இவற்றைச் செய்யத் தவறின் அல்லது விருப்பம் இருந்தும்

வாய்ப்புக்கள் கிட்டாவிடின் இறப்பின் பின் உறவினரின் உத்தரவின்பேரில் கண்கள் தானமாகப் பெறப்படும்.

**எப்படிச் செய்வது?**

உயிருடன் வாழும் எந்த ஒரு நபரில் இருந்தும் கண்கள் தானமாகப் பெறப்பட மாட்டாது. இறந்தபின் சரியாக 6 மணித்தியாலங் களுக்குள் கண் சிகிச்சை நிபுணர்களின் உதவியுடன் கண்கள் தானமாகப் பெறப்படும்.

**எப்பகுதி?**

கண் தானத்தின்போது, கண்விழியின் விழிவெண்படலம் (Cornea) பகுதியே பெறப்படும். இப்பகுதியே கண்மாற்றுச் சத்திர சிகிச்சையிற் பெறப்படும். இப்பகுதியானது கண்களின் கறுப்புப் பகுதிக்கு முன்னுள்ள ஒளிபுகவிடும் தன்மையுள்ள தெளிவான பகுதியாகும். இது பொருளில் இருந்து வரும் ஒளிக்கதிர்களை விழித்திரையை நோக்கிக் குவிப்பதிற் பங்கு வகிக்கும். இப்பகுதி ஒளிபுகவிடும் தன்மையை இழப்பின் பார்வை இழக்கப்படும். விழி வெண்படலம் ஒளியை இழப்பதற்கான காரணங்களாக நுண்ணங்கித் தொற்று , காயம், குறைபோசாக்கு ,சத்திரசிகிச்சையின் பின்பு கவனிப்பின்மை, பாரம்பரியம் என்பவை அமைகின்றன.

**செய்ய முடியாதவர்கள்?**

இறப்பிற்கான காரணம் தெரியாது இருப்பின் நோய்த்தொற்று, நீர் வெறுப்பு நோய், சிபிலிஸ் (Sibilis), ஈரல் புற்று (heparitis) செப்ட்சிமியா, எயிட்ஸ் (Aids) போன்றவற்றாற் பாதிக்கப்பட்ட அல்லது இறந்த மனிதர்களும் இப்பணியைச் செய்ய முடியாது.

**பாரம்பரியத்தின் செல்வாக்கு?**

இங்கு எவ்வித செல்வாக்கும் செலுத்து வதில்லை, விழிவெண்படல மாற்றீடு ( Corneal transplant) என்பதால் பாரம்பரிய காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதில்லை. பாதிக்கப்பட்ட விழிவெண்படலத்திற்குப் பதிலாக நல்ல விழிவெண்படலம் மாற்றப்படும் முழுப் பகுதியை யும் தானம் செய்யும் நபரின் ஏனைய பகுதிகள் ஆராய்ச்சிகளுக்காகவோ அல்லது மருத்துவ கற்கை நெறிக்காகவோ பயன்படுத்தப்படும். ஒளி கொடுக்கும் உன்னத பணி என்பதால் – இனம், மதம், மொழி, என்பவற்றிற்கு அப்பாற் பட்டது.

**முக்கிய கவனத்திற்கு !**

பார்வைப் பரிசு என்பது மிகவும் உன்னதமானது. இதனால், கண்தானம் செய்த வரைப் பற்றிக் கண்களைத் தானமாகப் பெறுப வருக்குக் கூறப்படாது அத்துடன் யாருக்குக் கண்கள் தானமாகச் செய்யப்படும் என்பதனை கண்வங்கியே தீர்மானிக்கும்.

அத்துடன் எந்த ஒரு கூலியோ அல்லது பணமோ கண்தானம் செய்பவரின் உறவினர்களுக்கு வழங்கப்படமாட்டாது. தானம் செய்தவரின் மரணச் சடங்கில் திறந்த நிலையிலுள்ள பிரேதப்பெட்டிகளைப் பயன் படுத்த முடியும். கண்கள் அகற்றப்படுவதன் மூலம் பிரேதத்தில் மாற்றம் எதுவும் ஏற்படுத்தப் படமாட்டாது.

**சேமிக்கப்படும் முறை**

சில நாட்களுக்கும் தானமாகப் பெறப்பட்ட இவ்விழிவெண்படலம் கண் வங்கியின் இழைய வங்கிகளில் சேமிக்கப்படும். விழிவெண்படலம் அன்றோ அல்லது அடுத்த

நாளோ பதிக்கப்பட்டு விடும். பதிக்கப்படாத இழையங்கள் சட்ட ரீதியாக அழிக்கப்பட்டு விடும்.

**கண்தானத்தின் அவசியம்**

ஆரம்பத்தில் கூறியதைப்போல், பல்வேறு கண்நோய்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. பிரதானமாக விழிவெண்படலம் பகுதி பாதிப்பதனால் இன்று நம்முள் பலர் அவதிப்படுகின்றோம். அப்பாதிப்பை நிவர்த்தி செய்ய கண்தானம் அவசியமாகும். பிறப்பிலே கண்பார்வையற்றவர்களாக இருக்கும் பலருக்கு ஒளிபுகவிடும் தன்மையற்ற விழிவெண்படலம் காரணமாக அமைகிறது. அதனை நிவர்த்தி செய்ய இக் கண்தானம் உதவுகிறது.

**கண் மாற்று சத்திரசிகிச்சையில் யாழ்ப்பாணத் தின் இன்றைய நிலை**

யாழ்ப்பாண மாவட்டத்திற் கண் நோயினாற் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமுள்ளது. ஆனால், கண்தானம் செய்வோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. தற்போதைய சூழல்நிலைமைகள் பிரதான காரணமாக உள்ளது. ஆனாலும் கண்தானம் செய்வதற்குப் பல்வேறு சமூகமட்டத்தில் உள்ளவர்கள் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். ஆனாலும் போதிய விளக்கமின்மை காரணமாக இவர்கள் தங்களுடைய தொலைநோக்கு சிந்தனைகளை இழக்கின்றார்கள். கண்தானம் செய்யவிரும்புவோர் பின்வரும் நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளமுடியும்.

தொலைபேசி இல. 021 222 3645

1. சிவபூமி கண்தான சபை,
   கோண்டாவில் கிழக்கு,
   கோண்டாவில்.
   தொலைபேசி இல. 021 222 7938
2. சிவத்தமிழ் மானுட விடியற் கழகம்
   இல.448, மானிப்பாய் வீதி,
   யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல.021 222 5180

**வைத்திய சாலையில் தொடர்புகளை மேற்கொள்வதற்கு**

கண்வைத்திய நிபுணர்,
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 3645

*"Eye donation is one of the most noble deeds one can do"*

மனத்தெளிவு பெற்றவனிடமிருந்து
எல்லாத் துக்கங்களும் விலகுகின்றன.
ஏனெனில் மனத்தெளிவு பெற்றவனின்
புத்தி விரைவில் விழிப்புறுகிறது.

- பகவத் கீதை -



## 26th batch

**Sitting Left-Riht**

K. Neraja
V. Sharmili
P. Pramila
S. Prahteepa
G. Garhteeka
M. Sobitha
T. Balakumaran
M. Vasutharan
S. Sivaruban
B. Sayanthan
G. Jeyakanth
A. Arudchelvan
S. Arunan
N. Pratheep
N. Karikalan
B. Prashanthan
T. Pratheepa
S. Shnmugapriya
S. Sivatharsan
P. Theepana
S. Nithya

**Standing (middle) Left-Riht**

R. Tharsha
S. Suganthi
V. Lavanya
B. Sivashakthi
T.Mirunalan
K.Anihta
T. Mirunalan
V. Jeyadas
K. Pratheepan
T. Jeyakath
R. Sivaruban
T. Subajanan
N. Nevasan
R. Sutharsan
K. Shylavan
K. Dinesh
V. Kirushanthan
T. Kalaimahti
K. Vishnuveni
K. Thamayanthi
S. Kalaichlvi
P. Kaetharani
M. Arany
K. Kalaivani

**Standing (back) Left-Riht**

G. Hyrin Arch
S. Prathap
S. Prasanth
P. Nanthakumar
S. Kunathesan
B. Aravinhtan
T. Subash
K.Suseenthran
R. Muraleethran
M. Ramanan
S. Gajandran
M. Kamalathasan
R. Ahilan
S. Pakeerathan
A. Ravikaran
N. Sasikaran
G. Kabilan
B. Sasikaran
K. Venukoban
N. H. Tharmandran
M. Aathavan
A. J. Thanenthran
K. Suman
Y. Prasanthan

### ABSENT

T.Myooran
T.Sundarakumar
P.Priyathasan
P.Nanthini
M.Anton
K.Balavalli
R.J.Nishanthan
A.Kirisangar
K.Piratheepan
Y.Thivagar
G.Vasanthakumar
M.Samini




26$^{th}$ Batch

# "நீ எனது குரு"



சின்னவன்
26ஆம் அணி

"நீ என்ற கிணற்றுக்குள்
தவளையாகச் சுற்றிய
பொழுதுகள் ....
மீட்டுப் பார்க்கிறேன்!
மனக் கதவுகளை இறுக
மூடியபடி
புற உலகப் பிரக்ஞையற்று
உன் நினைவில் மூழ்கித்
திளைத்து ... அதனால்
நிறையத் தொலைத்து ....
நல்ல வேளை! - நீ
தூக்கிஎறிந்தாய்,
வசந்தமான உலகில்
வந்து விழுந்தேன்!
கொலைச்சேதி இல்லாத நாளில்லை
என்றாலும் - இந்த
உலகம் இனியது!
இரத்த ஆறு ஓடாத இடமில்லை
என்றாலும் வசந்தமானது!
மரணங்கள் மலிந்த பூமியில்
மனிதத்தை ஆராயும்
சுவாரசிய முயற்சியில்
நான் ..................
நம்மவருள் தான் எவ்வளவு
பல்வகைமை!
எங்கு எது நடந்தாலும்
எனக்கு நடக்காவிட்டால் சரி
என்ற சராசரி மனிதர்கள்!
மண்ணுக்காக மடிந்தவர்களை
மறந்த மானமற்றவர்கள்!
புதிய தேசத்திற்கான பாதையில்
படிக்கற்களாகத் துடிக்கும்
மேன் மக்கள்,
"ஏன் இன்னும் விடிவு
வரவில்லை"
சுலபமாகக் கேட்டுவிட்டுப்
பங்களிக்கத் தயங்கும்
நாங்கள்!
இன்னும் இன்னும்
எத்தனையோ வகைகள்!
ஆகா! இந்த உலகம் தான்
எத்தகையது?
காண்பதற்கு வழி செய்த நீ
போற்றத்தகு சற்குருவே! நீ
நீடூழி வாழி!



# 27th batch

**Sitting Left-Riht**

S. Sopan
V. Thanusan
K. Tharshini
M. Harishanthi
S. Gayathri
T. Pramila
T. Biriyakala
G. Gnanakala
B. Kirushka
S. Sugarthika
R. Jenifer Karthika
M. Gowsiga
S. Sivagowry
B. Lavanta
T. Tharshini
P. Kajani
R. Rathai
A. Sharmila
G. AnneGuida
R. Ratnavasanthan
F. Kinoshan

**Standing (middile) Left-Riht**

M. Kogulshnkar
S. Maniharan
J. Vijitha
K. LakshanaKannagi
M. Dharmika Anoj
S. Pratheepa
S. Neeraya
A. Nishanthini
S. Tharmika
M.K. Yalinie
M. Jeyanthini
D. Subithira
N. Thevaki
P. Vadivukarasu
P. Sharmila
S. Kalavani
N. Sharmila
P. Prashnthi
R. Sujitha
P. Kajalvily
K. Karunayokini
S. Thadsajini
S. G. Verni
R. Sajeevan
T. Thirusan

**Standing (back)Left-Riht**

A.Jude Prashanthan
S. Varunprasth
N. Thnansayan
S. Pratheepan
S. Pakeerathan
V.Thusyan
Y. Nimalaraj
B. Shiyam Rakkesh
P. Thushitharan
K. Nimalan
G. Sarulathan
S. Thivaagar
T. Regan
S. Senthuran
E. Kishok
V. Vipulan
T. Partheepan
A. sanjayan
E. Ethayarooban
S. Vinogen
S. Pranavan

## ABSENT

| | | |
|---|---|---|
| S.Manivannan | R.Jegan | B.Priya |
| A.Kishan | T.Jeyanthi | B.Shanruban |
| R.Antonythas | N.Kirushanthi | A.Suranutha |
| M.Arulnathan | S.Kumanan | V.Suthakaran |
| A.Dilan | S.Prashath | K.Vasutheva |
| T.Janojini | | |




27$^{th}$ Batch

# என் காதலின் ஒரு துளி ...

கபா
25ஆம் அணி

நான்
உன்னைக்
காதலிக்கிறேன்
சொல்லியது
என்
மனது
நீ
என்னைக்
காதலிக்கவில்லை
சொல்லியது
நீ
உன்
மனது..............?

உணவு
உடை
உறையுள்
அத்தியாவசியத்
தேவையாம்
எல்லாம்
பொய்
எனக்கு
நீ......
மட்டும்!

ஏழாவதாய்
ஒரு
அறிவு
எனக்குள் நீ.........

விழுந்தது
என் - விழி
நீ
சறுக்கியபோது.....!

உன்
ஞாபகங்களைச்
சேர்த்துவைத்தே
ஒரு
கவிதைப்
புத்தகமாக்கிப் போனது
மனது ....
உன்னைவிட
அழகாக
இருக்கிறது
சில....
சொற்கள்
நீ
உச்சரிக்கும்
போது..........!
உன்
மௌனத்தில்
புதையும்
சொற்கள்
புதையலாகி
புன்னகையில்
கொட்டுகின்றன ...

உனக்குத்
தருவதற்காய்ச்
சேர்த்து வைத்திருந்த
முத்தங்களையே
கடைசியில்
கவிதையாய்த்
தருகின்றேன்.

காதல்
விபத்தில்
இருவரும்
அடிக்கடி
ஒன்றாய்த்தான்
சந்திக்கிறோம்
ஒவ்வொரு
முறையும்
நான் - மட்டும்
காயப்பட
நீ - மட்டும்
தப்பித்து
விடுகிறாய்
இரண்டு கால்கள்
இரண்டு கைகள்

ஒரு முகம்
ஒரே உடம்பு
எல்லாம்
அப்படியே
இருக்க
நான் - மட்டும்
காணாமல்
போய்விடுகிறேன்...

செய்தது
பாவமாகியிருந்தால்
கூட
பரவாயில்லை
பாவமன்னிப்புக்
கேட்டிருக்கலாம்
செய்தது!
செய்தலாகிப்
போனதே!

நீ
ஒரு முறை
பார்க்கும் போது
வெளிப்படுகிறேன்
இன்னுமொருமுறை
பார்க்கும்
போது
தொலைந்து
போகிறேன்!

இன்னும்
எத்தனை
நாட்களுக்கு
இப்படியாய்....
என்னுள்
நீயும்
உன்னுள்
நானுமாய்
தொலைந்து
போவது
எப்போது.....?

எத்தனை பெரிய காரியத்திற்கும் அதனைச் சாதிப்பதற்கு எத்தனை பேர் முன்வருகின்றார்கள் என்பது முக்கியமல்ல; மாறாக எத்தகைய உள்ளப் பண்பு வாய்ந்தவர்கள் முன்வருகிறார்கள் என்பதே இறுதியில் வெற்றியே நிர்ணயிக்கும் அம்சம்.

– மகாத்மா காந்தி –



# சிதம்பர இரகசியம்



த. துஷ்யந்தன்
25ஆம் அணி

"ச்சே... என்னதான் சொன்னாலும் இவன்ட குணம் மாறாது ... இப்பதான் போய் வந்தனான் ... அவனும் கண்டவன் நான் போறத ... அப்பவே சொல்லியிருக்கலாம்... இப்ப இந்த வெயிலுக்குள்ள சையிக்கிள்ள வேற போக வேணும் .... சைக்கிள்ர குடம் வேற சத்தம் போடுது... எப்ப உடஞ்சி போகுமோ தெரியல்ல.... அத மாத்தவே நேரமில்லை இவன் பாவி வேற ..." எனக்கு உண்மையில் எரிச்சல் வந்தது". பாவம் ஆஸ்பத்திரியில படிக்கிற வேலைச்சுமையில் மறந்திருப்பான் என்று எனக்குள் சமாதானப் பட்டுக்கொண்டாலும் இது வெகுகாலமாகவே நடப்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

"தான் சும்மா படுத்திருக்கிறதும், என்ன சாப்பாட்டை எடுத்துக்கொண்டு ஆஸ்பத்திரியில தரச்சொல்றதும்... மாத்தியாக வேணும்.. அவசரத்திற்கு உதவப்போய் போன கிழமை மட்டும் நாலு தரம் எடுத்திட்டன்.... என்ன செய்வது வைரவருக்கு ஒரு நாய் வந்து வாய்த்தாற்போல் எனக்கு இவன் .... அறை நண்பனாய்....

'அன்ரி' 'சுஜீவனுக்கு பார்சலாம்'

"கொஞ்சம் பொறுக்க வேணும்... அப்போதே கேட்டிருக்கலாமே". அன்ரிக்குத் தெரிகிறது 'அது'க்குத் தெரியவில்லையே.... வாய்வரை வந்த வசனத்தை ஒருவாறு மென்று கொண்டேன்.

சிவப்புக்கலர் "சொப்பிங்" பையில் அன்ரி தந்த சாப்பாட்டை எடுத்துக்கொண்டு பலாலி வீதியூடாகச் செல்கிறேன். "அப்பா .... என்ன வெயில் மண்டைவேற காய்ஞ்சி கிடக்கு .... எண்ணை வெய்க்க வேணும் எண்டு நினச்சன் அதுவும் மறந்திட்டுது...". மூக்கு மயிர் பொசுங்கிவிடுமோ என்று பயப்படுமளவிற்கு வெயிலின் உக்கிரத் தாண்டவம் வேறு. வழியில .... இந்தக் கடையில் நிப்பாட்டி... ஒரு நெல்லிக்கிரஷ் அடிச்சாத்தான் சரிப்பட்டு வரும்....". "ஆகா ... குடிக்கையில் குடல் குளிர்வதை அனுபவிக்க முடிகிறது. "அப்பாடா ...." எண்ணை வழிந்த முகத்தினை துடைத்தவாறு தொடர்கிறேன்.

ஒருவாறு எதிர்க்காற்றினின்றும் முட்டிமோதி, மெல்லியதாய் ஆங்காங்கே கலைந்து வீழ்ந்த தலைமுடிகளை ஒதுக்கிய வண்ணம் எம்பி மிதித்து... ஆஸ்பத்திரிச் சந்தியை வந்தடைந்தாயிற்று.

"கையைக் காட்டி சைக்கிளை வெட்டிய போதுதான் கண்டேன். இதுவரை சைக்கிளின் கரியரில் வைத்திருப்பதாய் நம்பியிருந்த சுஜீவனின் சாப்பாட்டுப் பார்சலைக் காணவில்லை.... தடமின்றித் தப்பித்திருந்தது....

"கிழிஞ்சுதுபோ... எங்கவிட்டன்...." மனம் நிவைன் சுவிச்சில்... "கடையிலே ...

இல்ல பின்னுக்கு வெச்சது ஞாபகம் .... நம்மட மூளையும் கறள் பிடிச்சுப் போய்த்தான் கிடக்குப்போல .... ம்... எங்கடாவிட்டன்?

வந்த வழியே மீண்டும்போய் இலக்கிற்கு புறமுதுகு காட்டி சைக்கிள் பயணப்பட, ஏமாற்றம், விரக்தி, வெம்மையின் எண்ணை வழியல் ... கொப்பளிக்கும் வியர்வை என ஆயிரமாயிரம் நெருடல்கள் எனக்குள் ...

"விசில் சத்தம் "

"கடவுளே கொன்வே வருதுபோல..." பாய்ந்து இறங்கி ஓரமாய் நின்று கொண்டு கண்களைச் சுழரவிட்டேன். எதிரே ஒரு நாற்பது இராணுவ வீரர்கள் இருக்கும். கொன்வேக்கான அடையாளமாய்த் தெரியவில்லை. அனைவரும் ஒரு வித பதைபதைப்புடன் அங்குமிங்கும் ஓடித்திரிந்தனர்.

"... என்னவாம் ..."

"ஏதோ கிளைமோர் கண்டு பிடிச்சிருக்கினமாம் ... நடுப் பாதையில கிடக்குதாம்... பொலிசு நாய் வருமெண்டு நினைக்கிறன்" என்றார் அநுபவங்களில் பல பொலிசு நாய் களைக் கண்டிருக்கக் கூடிய ஒருவர்.

உண்மைதான்... நாய் வந்தது. என்னைவிட அரை அடிதான் குறைவு. "கடவுளே இப்படியும் நாயா...?" நாய் கம்பீரமாய் நடக்க ஆமி வழி விலக ... அதோ ... அங்கே ... அந்தக் கிளைமோர் ... பார்க்கும் ஆவலில் தலைதூக்கிய எனக்குள் காதிற்குள் வைத்துக் கிளைமோர் அடித்ததான அதிர்ச்சி.

வெண்டிக்காய்க் குழம்பு, கத்தரிக்காய் வெள்ளைக் கறி, கீரைச்சுண்டல், பப்படம், மோர் மிளகாய்... என, சுற்றி நின்ற ஆமிக்குத் தெரியாத சிதம்பர இரகசியம் எனக்குத் தெரியும் எனினும் ... எனினும் ... அந்தப் பொலிசு நாயின் வித்தியாசப் பார்வையோடு வீதியில் முகரப்பட்டவண்ணம் வீழ்ந்திருக்கும் காதறுந்த சொப்பிங் பைக்குள் .... சு.... ஜீவனின் ... சாப் ... பாடு .....

தியாகம் செய்வதால்; ஆனந்தம் பிறக்காவிட்டால்; அது தியாகம்அன்று. தான் செய்யும் தியாகத்திற்காகத் தன்னிடம் எல்லோரையும் அனுதாபம் காட்ட வேண்டும் என்று எதிர்பார்ப்பவன் மனிதவர்க்கத்திலேயேஅற்பமானவன்.



– மகாத்மா காந்தி –

# நானுனைச் சேர்ந்தகணம் ...



சவிதா
25ஆம் அணி

நா னுனைச் சேர்ந்த கணத்தில்...........
வானம் பூச்சொரிந்தது
எந்த தேவதைகளும்
எம்மைப் போடவில்லை
என்றாலும் எனதன்பே
வாழ்வின் எல்லைவரை
கேட்கும் ஒரு கீதம்
என்னுள் எழுந்து நிறைத்தது

உன்னிலிருந்து தொற்றி
என்முகம் முழுவதும்
அப்பிக் கொண்டது
ஒரு புன்னகை
காலம் துடைத்து விட முடியாதபடி

அத்தனை புலன்களும்
உன்னையே தொடர
இருளின் நாளொன்றில்
மின் மினிகளைத் துரத்தும்
சி றுவன் போலானேன் நான்

உன் உள்ளங்கையில்
நெல் மணியாகிப் போனேன்.........
சமைப்பதோ விதைப்பதோ
உன் பிரிய மென் று...

## 28th batch

**Sitting Left-Riht**

S. Gnanakumaran
N. Saranya
T. Vithushiya
N. Regenia
G. Sivappiriya
V. Ratna
R. Ramarithiya
S. Soobika
S. Mathurathan
S. Medona
P. Varmida
S. zamini
S. Lavanya
P. Vithiya
M. Thakshayini
V. Gawsaliya
G. Prashnth

**Standing Left-Riht**

S. Mathivathanan
S.Sathiyaruba
S.Thinesha
S.Mohanakuma
T.Vaigunthan
R.Elango
P.Satheeskumar
S.Raguraman
S.Kangaiyanan
S.Umaipalan
V.Vishakan
T.Nilojan
S.Suhtgar
M.Oyananan
R. Jayanthan
S.Krishathan
S.Rajeerrajah
K. Karthikeyan
V. Centhuran

### ABSENT

A.Andrew Nishanthan, V.Aravinthan, R.Gayathiri, T.Gayathiri, Y.Hamsapriya, S.Janagan, P.Jenuka, G.J.Ramesh, P.Kalaventhan, T.Kaveri, A.Kiriparan, T.Kunalini, S.Mehan, S.Nirusha, T.Pavithiran, S.Priyathasan, P.Praneetha, Y.Prashath, S.Raguram, N.Ratnarajah, J.Robinson, E.Rosalinin, S.Sakthiyavani, S.Sasikala, T.Satheeskumar, R.Senthuran, N.Shamini, J.Shangeetha, P.Shanjeeban, S.Sivani, G.Shopana, M.Sasikumar, P.Sivatharsini, K.Srikanthan, P.Suvithira, T.Thamayanthy, L.Thanushiya, T.Tharjini, C.Tharsika, D.Thushara, V.Thusyanthy, V.Urmila, V.Vasakan, S.Vidyashagaran, S.Yalini, S.Sasirakka , T.Prashanthan, T.Jeyanthini.



FACULTY OF MEDICINE
1978
28th Batch

# சேவை ? !

**[கதையல்லாத கதை]**

"சங்கிலியன்"
26ஆம் அணி

2037ஆம் ஆண்டு ஆவணித்திங்கள், காலைப்பொழுது வாகனங்கள் எறும்பைப்போல் வீதிகளை நிறைத்துக்கொண்டிருக்கின்றன. யாழ் நகரப் பொது மணி ஆறு என்பதைக் காட்டிநிற்கின்றது. வீதிகள் எங்கும் சுறுசுறுப் பாக இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். வானு யர்ந்த மாடிக் கட்டடங்களும், கோபுரங்களும் நகரை நிரப்பிக்கொண்டிருக்கின்றன. அதில் ஒரு தொடர் அடுக்குமாடியில் 30ஆம் மாடியில் உள்ள வரலாற்று ஆவணக் காப்பகத்தில் ஓர் அறையில், அருணன் தனது கணினிகளில் வரலாற்று ஆவணங்களைத் தொகுப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

அருணன் ! , ஒரு உயர்தரவர்க்கத்தைச் சேர்ந்தவன். தந்தையார் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர். ஒரேயொரு அண்ணா! அவர் மருத்துவத்துறையின் நோய்த்தடுப்புப் பிரிவில் முக்கிய பணியாற்றுகின்றார். அதாவது நாட்டுக்குள் நுழைவோரில் இடம்பெறும் அனைத்துச் சுகாதார சோதனைகளை ஓர் அறையில் இருந்துகொண்டு கண்காணிப்பதும் அது தொடர்பான பணிப்புரைகளை வழங்குவது மாகும். எவ்வளவு வசதி படைத்த குடும்பமா னாலும் தமக்குரிய வேலைகளை மிகவும் பொறுப் புடனும் கனகச்சிதமாகவும் செய்து கொண்டி ருக்கிறார்கள். இது அவர்களுக்கு மட்டுமல்ல; இங்குள்ள மக்களுக்கேயுரிய தனித்துவ இயல்பாயுள்ளது.

ஆம் ! அருணன் பல்வேறு சிந்தனைகளுடன் தனது வேலையில் மூழ்கி யிருக்கிறான். தற்போது 2007ஆம் ஆண்டின் ஆவணங்கள் தொகுக்கப்படுகின்றன. அதில் உதயன் பத்திரிகையில் ஒரு மூலையில் வந்த செய்தி அவனைக் கவர்கின்றது. அது .... "இம்முறை உள்ளகப் பயிற்சிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்திலிருந்து வெளியேறியவர்கள் வடக்குக் கிழக்கிலேயே கட்டாயம் வேலை செய்ய வேண்டும். – இலங்கை சுகாதார அமைச்சர்" இன்னொரு செய்தி, "அதை எதிர்த்து பட்டதாரிகள் வழக்குத் தாக்கல் செய்ய முஸ்தீபு". அந்தச் செய்தியை வாசித்தவன் அது தொடர்பான செய்திகளை அறிவதில் ஆர்வமேற்பட்டவனாகக் கணினியில் அது தொடர்பான செய்திகளை ஒழுங்கு படுத்திக்கொண்டிருக்கிறான். அவை, உதயன் பத்திரிகையில் .... அவை தொடர்பான மக்களின் கருத்து; மருத்துவபீடாதிபதி, துணைவேந்தரின் வேண்டுகோள்; வலம்புரி, தினக்குரல் பத்திரிகை களில் ஆசிரியர் தலையங்கம். மறுபக்கம் என்று தொடர்ந்து ..... " உள்ளகப் பயிற்சிக்கு 19 வைத்தியர்களை மட்டுமே இலங்கை சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டமையைக் கண்டித்து வரும் வெள்ளியன்று யாழ் போதனா வைத்திய சாலை வைத்தியர்கள் அடையாளப் பணிப்புறக் கணிப்பு" வரை செய்திகள் தொடர்கின்றன.

............. இரவு 9.00 மணி வேலைக் களைப்பால் வந்த அண்ணன், தம்பி மற்றும்

தந்தை மூவரும் முகம், கை, கால் கழுவி சாப்பிடுவதற்கு மேசையில் உட்கார்கிறார்கள். தெருவில் வாகனச் சத்தங்கள் குறைந்து கொண்டு செல்கிறது. தாயார் மூவருக்கும் உணவு பரிமாறுகிறார். அருணன் தொடங்கு கின்றான். "அண்ணா ! அந்தக் காலத்தில் எங்கட மண்ணில படிச்ச டொக்டர் எல்லாரும் இங்கை வேலை செய்யாமலே ஓடினவை ஏன்? அவை யவை முடியுமானவற்றை இங்கே உறிஞ்சிவிட்டு பின்னர் தங்கட சுகத்திற்காக வேற இடங்களுக்குச் சென்றிருக்கினம்."

இல்லையடா தம்பி ! அந்தக் காலத்திலும் நாட்டுப் பிரச்சினைக்கும் மத்தியிலும் வைத் தியர்களும், வைத்திய நிபுணர்களும் தங்கட குடும்பங்களை விட்டு இங்க சேவை செய்தவை தான். ஆனா நீ சொன்ன மாதிரி பெரும்பாலான ஆக்கள் வெளியில போனது உண்மை! அப்படி போனதாலதான் இப்ப இப்படிக் கெட்டிக்காரத் துறைசார் வல்லுநர்கள் இங்க பெரியாஸ்பத் திரியில் இருக்கிறதால கொஞ்சக் காலத்தி லேயே எங்கட ஆஸ்பத்திரி ஆசியாவில முக்கிய இடத்தில வரமுடிஞ்சுது.

"நீ சும்மா கதைக்காதை நான் இன்டைக்கு 2007ஆம் ஆண்டின் பேப்பர் எல்லாம் பார்த்தனான். அவங்கள் எல்லாம் நாறநாற எழுதிவைச்சிருக்கிறாங்கள்." இவர் களுடைய வாதம் சூடு பிடித்துக் கொண் டிருக்கிறது. இதுவரை அமைதிகாத்த தந்தையார் கதைக்கத் தொடங்கினார். தாயாரும் அதில் இணைந்து கொண்டார்.

"உங்களுக்குத் தெரியாதடா, நீங்கள் இப்ப இருக்கிற ஆவணங்களை மட்டும் பார்த்துப்போட்டு கதைக்கிறியள். அந்தக் காலத்தில பத்திரிகைகளில வந்தது உண்மையாக இருக்கலாம். என்றாலும் நான் அந்தக் காலத்தில இருந்தவன் என்றவகையில, அந்தக் காலத்தில் வைத்தியர்களின் நிலை என்ன என்றால், இவ்வளவு காலம் கஷ்டப்பட்டுப் படிப்பிச்சதுக்கு ஒருவருடம் இங்க நின்று கீழ் வரும் மருத்துவ அணிகளுக்குப் படிப்பிக்க உதவ வேண்டும் என்றது. ஆனா பெரும்பாலான மாணவர்கள் தாங்கள் இவ்வளவு காலம் கஷ்டப்பட்டு பிரச்சினைக்க படிச்சதால கொஞ்சக்காலம் வெளியால இருந்து வரலாம் என்ற மாதிரியிலிருந்தது. ஆனா இவர்களுக் கிடையில் நடந்த தொடர்ச்சியான கலந்துரை யாடலில் மாணவர்களில் குறிப்பிட்ட எண்ணிக் கையானவர்கள் இங்க நிற்பதாக வாக்களித் தனர்...


இதைச் சொல்லத்தான் எனக்கு வாழ்க்கையில் நடந்த ஒரு திருப்புமுனை ஞாபகத்திற்கு வருவது " ... என்று சொல்லத் தொடங்கினார்.

பிள்ளைகள் இருவரும் சிறுவர்போல் கதைகேட்கத் தயாரானார்கள். "அன்று ஒருநாள் எனக்கு 20 வயதிருக்கும், ஒரு சம்பவத்தில் தொடைப் பகுதியில் குண்டு பாய்ந்துவிட்டது. ஒரு சனமும் பயத்தில வைத்தியசாலைக்குக் கொண்டுபோக உதவாத நிலைமை. இரத்தமோ பீறிட்டுக் கொண் டிருக்கிறது, நான் கொஞ்சம் கொஞ்சமாக

நினைவிழந்து கொண்டி ருக்கிறேன். அந்தநேரத்தில் என்ன செய்வதென்று தெரியவில்லை. அப்போது நிலைமையின் சிக்கலை விளங்கப்படுத்தி உதவி கேட்டவுடன் நிலைமை புரிந்து தனக்க வரும் உயிராபத்தையும் துச்சமென மதித்து ஒரு வைத்திய மாணவன் வந்து, இரத்தப் போக்கை நிப்பாட்டி, காயத்திற்கு மருந்திட்டு என்னைக் கடவுள் போலக் காப்பாற்றினான். அன்று அவன் வந்திரா விட்டால் என்னை இன்று கண்டிருக்க மாட்டியள்." என்று கூறும் போது அவரின் நா தளதளத்தது. கண்கள் பனித்தன ! பிள்ளைகள் இருவரும் எச்சிலை விழுங்கிக்கொண்டு தந்தையைப் பார்த்தனர்.

மௌனமானவர் சிறிது நேர இடை வெளிக்கும் பின் கதைக்கத் தொடங்கினார். " "அன்று அவன் தன்னைப் பணயம் வைச்சு என்னைக் காப்பாத்தியிருக்காட்டி என்ர வாழ்க்கை 20 வயதுடன் முடிந்திருக்கும். ஆனா அவனைக் கண்டு நன்றி சொல்லக் கூடச் சந்தர்ப்பம் கிடைக்கேல்ல. இப்படி எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கு" இந்நிலையிலிருந்து நான் உங்களுக்கு என்ன சொல்லிறனெண் டால்... மருத்துவம் என்றது ஒரு மகத்தான சேவை. அது எந்த வடிவத்திலும் இருக்கலாம். அவரவர் அதை உணர்ந்து செய்ய வேணும். ஆனா, அதைப்பற்றிக் கருத்துக் கூறவோ, விமர்சனம் பண்ணவோ எங்களுக்குத் தகுதியில்லை. அந்தக் காலத்தில இதைப்பற்றிச் சிந்திக்காம எழுதின ஆவணங்களையே நீ இண்டைக்குப் பார்த்திருக்கிறாய்" என்று சலனமற்ற உறுதியான குரலில் சம்பா சணையை நிறைவு செய்து வைக்க, சாப்பாட்டு மேசையை விட்டெழுந்த அருணன், "சேவை " என்பதை வரையறுக்க முடியாது என்பதை உணர்ந்தவனாகத் தனது இலத்திரனியல் படுக்கையில் அடுத்தநாள் எழும்புவதற்கான நேரத்தைப் பதிந்துவிட்டுக் கண்ணயர்ந்தான்.!

பற்றுடன் வேலை செய்கின்ற பாமரர்களை அறிவாளி குழப்பக் கூடாது. தான் எல்லா வேலை களையும் ஈடுபட்டு நன்றாகச் செய்து கொண்டு, அவ்வாறு செய்வதற்குப் பிறரையும் தூண்டவேண்டும்.
- பகவத் கீதை -



# 29th batch

**Sitting Left-Riht**

S. Sivasankari
W. Dhayani
A. Thushyanthi
T. Kalyani
K. Uthayaseelan
S. Srisubakaran
S. Sarangan
S. Nithiyaruban
A. Thileepkumar
N. Piratheeban
P. Sathees
T. Shaysananth
T. Jeyaram
S. Sunantha
M. Narmatha
B. Sinduja
M. Umananthini
P. Sivanthini
T. Thavaranjini

**Standing (Middle) Left-Riht**

T. Karthika
S. Ann Jenita Arulini
S. Vaseehari
S. Piriyatharsini
P. Vijitha
S. Yathasini
R. Powthra
S. Thinoja
P. Janaha
R. Vithiya
B. Karhtika
M. Thanaya
M. Mary NiRoshinee
S. Pavithra
Y. Thivyaa
B. Asothai
K. Varuni
S. Dhulashiha
T. Hemalatha
P. Shalini

**Standing (Back) Left-Riht**

K. Tharsanan
M. Vishnukaran
S. Kumaran
G. Nirojan
R. Thuvara Theeban
K. Elangoveri
T. Matheesan
K. Niruthan
T. Kokulan
T. Thivagar
T. Vimalakanth

## ABSENT

A.Arulnesan
T.Ingaran
S.Kanshan
G.Karthick
S.Kirushanthan
K.Kobinath
B.Manchuthan
R.M.M.Theepan
Y.Muraleetharan
V.Pavithra
M.Sivashangar




29th Batch

# வரம் வேண்டும் பராசக்தி......



நடராஜா தனஞ்சயன்
27ம் அணி

காணிநிலம் கேட்டவனை
யானை கொண்டடித்துவிட்டாய்,
ஆனபோதும் அஞ்சேன் நான்,
நின்னைச் சில வரங்கள் கேட்பேன்............
என் தலைமீது குட்டாமல்,
தட்டிக்கொடுத்தென்னைத்
திறம்படச் செயற்படுத்தும்,
தலைமை கொடு எனக்கு..............

கலைப்படைப்பு நான்செய்ய,
பிழைதேடிக் கண்டறிந்து,
எகத்தாளம் செய்யாமல்,
கைதட்டிப் பாராட்டும்,
மூத்தோர்கள் கொடு எனக்கு..........

இளந்தென்றல் உடல்வருட,
காதலுடன் தவழ்ந்து வரும்,
இளமாலைப் பொழுதினிலே.........
வீட்டினுள்ளே அடைபட்டு
மின்விசிறி சுழலவிடும்,
அவலநிலை அகற்றிவிட்டு,
இயற்கையினுள் மூழ்கிவிடும்,
இன்பநிலை கொடு எனக்கு..........

உள்ளே பொறாமை கொண்டு,
உதட்டளவிற் சிரிக்கின்ற
கள்ளத்தனமழித்து
உள்ளும் புறமும் ஒருவாறாய் இருக்கின்ற,
உள்ளம் கொடு எனக்கு............
கற்ற கல்விதனைக்
காசாக்க நினைக்காமல்,
மற்றவர்க்காய்ச் செலவழிக்க,
மனமாற்றம் கொடு எனக்கு.....
கூடாரக் குழந்தைகளின்
நினைவு வந்து உறுத்தாமல்,
மழையை ரசிக்கின்ற,
நிலை வேண்டும்
கொடு எனக்கு.........

அடுத்தவன் விடயத்தில்
அத்துமீறி உள்நுழைந்து,
மூக்குடைபட்டு,
முகம் சுருங்கி நிற்கின்ற,
முட்டாள்தனம் அழித்துவிடு.........

காற்றுவாக்கில் காதில்வந்து,
விழுகின்ற சேதிதனை,
ஊதிப் பெரிதாக்கி,
ஊர்முழுதும் பரப்பிவிடும்,
கயமைதனைக் களைந்துவிடு,

செய்த தவறுக்காய்,
வருந்தித் திருந்தாமல்,
நியாயப் படுத்துதற்கு,
கற்பனையைச் செலவழிக்கும்,
கேவலத்தைக் கெடுத்துவிடு,

பெறுமதியேயில்லாத,
சிறியதொரு சங்கதிக்கு,
உடல் நடுங்கி உருவாகும்,
பெருங்கோபம் குறைத்துவிடு.........

சொந்தச் சகோதரனின்,
துன்பத்தில் மகிழ்வுகொள்ளும்,
பொல்லாத சிறுமதியை
இல்லாது செய்துவிடு............
இத்தனையும் கொடுத்துவிட்டால்,
முக்தி நிலை கொடு என்று,
இனி உன்னைக் கெஞ்சேன் நான்.........

இத்தனையும் கொடுக்க,
இயலாமல் போனாலும்,
வாணி வைக்கையிலே,
வார்த்தைகள் சிக்காமல்,
வளவளன்று வருவதற்கு,
வழி சமைத்துக் கொடுத்துவிடு,
வாழ்ந்துவிட்டுப் போகின்றேன்!

"சுதந்திரம் என்பது போராடாம
லேயே கிடைத்து விடும் என்று
கனவை நாம் வளர்த்துக்
கொள்ளக்கூடாது. அதற்கு நமக்கு
உரிமையும் கிடையாது"
- சேகுவேரா

# சிக்குன்குனியா எனும் ஒரு சிறிய அரக்கன்



மோ. றமாஜினி
25ஆம் அணி

நவீன மருத்தவ உலகிலே தற்போது பலராலும் பரவலாகப் பேசப்பட்டு வருகின்ற விடயம் சிக்குன்குனியா காய்ச்சலாகும். இந்நோயானது தனது பாரதூரத் தன்மையினாலும், அதிகரித்த பரவல் வீதத்தினாலும், குறுகிய காலப் பொழுதினிலே உலகைத் தன் பக்கம் ஒருமுறை திரும்பிப் பார்க்க வைத்தது. சிக்குன்குனியா வைரஸ் ஆனது சற்றும் எதிர்பார்க்க முடியாத அளவிலே, அசாதாரண நோய்ப் பெருக்கத்தினை ஏற்படுத்தியதாகக் கடந்த 40 வருட காலத்தில் அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

**சிக்குன்குனியா பற்றிய ஓர் அறிமுகம்**

சிக்குன்குனியா கிருமி ஆனது (chikV) நுளம்பினாற் பரப்பப்படுகின்ற ஒரு வகை வைரஸ் ஆகும். இவ் வைரஸ் ஆனது "அல்பா" எனப்படும் (Alpha virus)வகையைச் சார்ந்தது. (Family togaviridae) இவ் வைரசானது 1952 ஆம் ஆண்டிலே ரன்சானியாவில் இடம்பெற்ற ஒரு பாரிய நோய்ப் பெருக்கத்தின்போது (out Break) முதன் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டது. 1952 ஆம் ஆண்டிலே Tanganyika, Mozambique ஆகிய இரண்டு இடங்களிற்கும் இடையே காணப்பட்ட பகுதியாகிய Makonde Plateau எனும் இடத்திலேயே பாரிய நோய்ப்பெருக்கம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து, 1953 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலே Marion Robinson, W.H.R. Lumsden என்பவர்களால் இந்நோயானது முதன்முறையாக விபரிக்கப்பட்டது. Lumsden 1955 ஆண்டு வெளியிட்ட முதல் அறிக்கையின்படி, சிக்குன்குனியா எனும் பதம் Makonde மொழியின் அடிச்சொல்லாகிய Kungunyala எனும் சொல்லிலிருந்தே உருவாகியுள்ளதாகத் தெரிய வருகிறது. Kungunya என்பதன் கருத்து " to dry up or become controlled " உலரும் நிலைக்குயர்ந்து கட்டுப்பாட்டுக்குள் வரும் இதேவேளை Robinson என்பவர் இச்சொல்லின் விரிவான தெளிவான விளக்கம் " மடிதல் " That Which bends up " எனவும் கூறினார் . இதனைத் தொடர்ந்துவந்த பலர் இப்பெயருக்கான அடிச்சொல் Swahili மொழியிலிருந்து வந்ததெனவும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## Vectors / காவிகள்

மனிதனிலே நோயினை ஏற்படுத்துகின்ற CHIK வைரசினது பிரதான காவியாக *Aedes aegypti* எனப்படும் ஒருவகை நுளம்பு தொழிற்படுகின்றது. இந்நுளம்பு வகையானது வீடுகளிலே காணப்படுகின்ற, நீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்களில், குறிப்பாகச் சுத்தமான நீர் தேங்கக்கூடிய, சிறு சாடிகள் , சிரட்டைகள் , ரின்கள், இளநீர்க்கோம்பைகளில் முட்டையிட்டுப் பெருக்கக்கூடியது. இவை மனிதனிடமிருந்து குருதியை உறிஞ்சுவதற்கு மிக்க விருப்பமுள்ளதோடு பகல் வேளையிலே குருதியை உட்கொள்ளவும் செய்கிறது. இவ்வகை நுளம்பினைத் தவிர, *Aedes albopictus* எனும் வகையானது, ஆசியா போன்ற பகுதிகளிலே CHIK வைரசின் பரவுகைக்குக் காரணமாகவுள்ளது. இதனைத் தவிர இன்னும் மேலதிக வகை நுளம்புகள்,

ஆபிரிக்கா போன்ற இடங்களிலே காவிகளாகத் தொழிற்படுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

## *Aedes aegypti*

Aedes வகை நுளம்பானது, புவியின் வெப்ப, இடைவெப்ப வலயங்களிலேயே காணப்படுகின்றது. ( இந் நுளம்பு மனிதனுடன் நெருங்கிய தொடர்பினை வைத்துள்ளதால், இது ஒரு குறிப்பிடத்தக்க ஒரு பீடையாகக் காணப்படுகிறது) Aedes நுளம்பினை அதன் உடலமைப்பு, நிறப்பரம்பல் போன்றவற்றிலிருந்து தெளிவாக இனங்காணக்கூடியதாக இருக்கும். இவை தமது கறுப்பு உடலிலே வெள்ளை நிறக் கோடுகளைக் கொண்டு காணப்படும். நெஞ்சுப் பகுதியின் ஓரங்களிலும் ( Lyre shaped line ) வெள்ளைக் கோடுகள் காணப்படுவதோடு, அவற்றின் உறிஞ்சும் அமைப்பு, கறுப்பு நிறமாகக் காணப்படும். இவை காலையிலும், பிந்திய மதிய வேளையிலும் மிகச் சுறுசுறுப்பாகத் தொழிற்படக் கூடியன. இந் நுளம்பு வகையானது மிகச் சிறியளவு நன்னீர் காணப்படுகின்ற இடத்திலே பெருகக் கூடிய ஆற்றல் மிக்கது. உதாரணமாக, சில அவுன்ஸ் அளவு–நன்னீர் தேங்கி நிற்கக்கூடிய சிறிய கொள்கலன்கள், சிரட்டைகள், ரின்கள் போன்றவற்றினுள்ளே முட்டையிட்டுப் பெருக்கக்கூடியன. இவை மிகக் குறுகிய அளவு பரப்பினுள்ளேயே அதாவது 200m ஐ விடக் குறைவான தூரத்திற்குள்ளேயே பறந்து திரியக்கூடிய ஆற்றலுடையவை.

*Aedes aegypti* ஆனது வெப்பநிலை மாற்றம், ஈரப்பதனின் அளவு என்பவற்றிற்குக் கூடிய உறுத்துணர்ச்சி உள்ளனதாதலால் இவற்றின் இனத்தொகை அடர்த்தி, பரவுகை என்பன காலநிலைக்கேற்ப மாறுபடுகின்றன. கோடைகாலப் பருவத்திலே குறைவான எண்ணிக்கையிலும் , மாரி அல்லது குளிர் காலப் பருவத்திலே கூடிய எண்ணிக்கையிலும் பெருகுகின்றன.இப்பருவகால மாற்றமானது நுளம்பினம் பெருகும் இடங்களிலே அதிக செல்வாக்குச் செலுத்துவதனால் இவ் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

மனிதன் தனது அஜாக்கிரதையான நடவடிக்கைகளினாலே இந் நுளம்புகள் பல்கிப்பெருகுவதற்கு வழி அமைக்கின்றான். அதாவது மனிதன் தன்னைச் சூழவுள்ள சுற்றாடலிலே நீர்தேங்கி நிற்கும் இடங்களைக் கண்டும் கவனமின்றி, அதனைப் பொருட் படுத்தாது இருக்கும் பட்சத்தில் இந்நுளம்பு களுக்கு இனிய வாழ்விடத்தை அமைத்துக் கொடுக்கின்றான். எது எவ்வாறு இருப்பினும் இந்நுளம்பினம் ஆண்டின்முழுப்பகுதியிலும் நிலைத்து நிற்பதற்கு, காலநிலையும் அவற்றிற்குச் சாதகமாக இருப்பதும் ஒருவகையில் காரணமாக அமைகிறது. இந் நுளம்பு வகையானது தனது வாழ்விடத்துக்கு மிக அருகாமையாகவே உணவைப் பெற்றுக் கொள்ளும். அதன் பின்னர் தனது இருப்பிடத்திற்கு அருகாமையிலுள்ள குளிர்மையான இடத்தில் ஒய்ந்திருக்கும். ஒவ்வொரு முறையும் உணவாக உள்ளெடுக்கப்படும் குருதியானது 2–7 நாட்களின் பின்னரே சமிபாடடையும். தமது முற்றான விருத்தியடைந்த முட்டைகளை உருவாக்குவதற்கு இந் நுளம்பு 1–3 முறை குருதியை உணவாக உள்ளெடுத்தல் அவசியம். வெப்பநிலை அதிகமாகக் காணப்படும் காலப்பகுதியிலே முட்டை உருவாக்கமும் உயர்வாகக்காணப்படும்.

Aedes நுளம்பினது பெருக்கத்திற்கு முன்பு கூறப்பட்டவற்றுடன் சிறிய நீர்தேங்கி நிற்கும் இடங்களும் முக்கிய பங்களிக்கின்றது. களிமண் பானை, கொள்கலன்கள், சீமெந்துத் தாங்கிகள், பூச்சாடிகள், சிரட்டைகள், இளநீர் கோம்பைகள் போன்றவையாகும்.

பருவப்பெயர்ச்சி மழைக்காலங்களில் மேற்கூறப்பட்ட இடங்களில் மழை நீர் தேங்கி நிற்பதனால் *A. aegypti*, *A. albopictus* போன்ற இன நுளம்புகளின் பெருக்கத்திற்கு ஏதுவாக வாழிடங்கள் அமைத்துக் கொடுக்கப் படுகின்றன. சில ஆய்வு அறிக்கைகளின்படி 39% ஆன *A. aegypti* நுளம்பு வகைகள் பாரிய அளவில் நீர்தேங்கி நிற்கும் இடங்களான பெரிய கொள்கலன்கள், நீர் சேமிப்புத்தாங்கிகள் என்பவற்றிற் பெருகுவதாகவும், 44% ஆனவை நடுத்தர அளவுடைய நீர் சேமிப்புப் பகுதிகளான கற்களிலுள்ள பிளவுகள், வாளிகள், ரயர்கள், போன்றவற்றிற் பெருகுவதாகவும் கூறப் படுகின்றது.

## Pathogenesis - நோய் உருவாக்கம்

CHIK Virus தொற்றினாற் பலவிதமான குணங்குறிகள் ஏற்படுகின்றன. அவையாவன:– காய்ச்சல், தலையிடி, உடற்சோர்வு, குமட்டல், வாந்தி, தசைநோவு, சரும வியாதிகள், மற்றும் மூட்டு நோவுகள் என்பனவாகும். இக்காய்ச் சலின் நோய் அரும்புகாலமானது, அதாவது கிருமித்தொற்று நடைபெற்று, குணங்குறிகள் தோன்றுவதற்கு இடைப்பட்ட காலம் 2-12 நாட்களாகும். ஆனால், பொதுவாக குணங்குறி களை வெளிக்கொணர 3-7 நாட்கள் நோய் உருவாவதற்குப் போதுமானதாகும். சிலரில் கிருமித் தொற்று நடைபெற்றாலும், நோய்க்கான குணங்குறிகள் தோன்றாமலேயே காணப் படலாம். இது "Silence CHIK V" தொற்று எனப்படும். ஆனால் இவ்வகைத் தொற்று ஏற்படுவதற்கான விகிதம் தற்போது வரை அறியப்படவில்லை. நோய் அரும்புகால முடிவில் திடீரென உச்ச வேகத்திற் காய்ச்சல் அதிகரித்து $39^0$c தொடக்கம் $40^0$c செல்வதோடு நோயாளி இடையிடையே குளிர் நடுக்கத்துடன் காணப்படுவார். இவ்வாறாகக் காய்ச்சலின் உடனடி அவத்தை 2–3 நாட்கள் வரை நீடிக்கும். பின்னர் ஓரிரு நாட்களுக்கு நோயாளி காய்ச்சல் இன்றிக் காணப்படுவார். (" Saddle - back" fever curve )

இதனைத் தவிர மூட்டுநோவு இக்காய்ச்சலின் பிரதான அறிகுறியாகும். இம்மூட்டுநோவானது, பொதுவாக ஒன்றிற்கு மேற்பட்ட மூட்டுக்களிலே அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. உதாரணமாக: கை, விரல், மூட்டுக்கள், மணிக்கட்டு, கணுக்கால் மூட்டுக்கள், பாதத்தி லுள்ள மூட்டுக்கள் போன்றவற்றிலேயே காணப் படும். பெரிய மூட்டுக்களிற் குறிப்பிடத்தக்களவு குறைவான மூட்டுநோவே காணப்படும். மூட்டுக்களில் உடற்பாய்பொருள் தேக்கமடை வதனால் மூட்டுவீக்கம் ஏற்படுகின்றது. இக்காய்ச்சலினால் மூட்டுக்களிற் சிறியளவு தாக்கம் ஏற்படும். நோயாளிகளில் இம்மூட்டு நோவானது ஓரிரு வாரங்களில் முற்றாக நீங்கிவிடும். ஆனால், பாரிய தாக்கத்திற் குள்ளான நோயாளிகளில் இம்மூட்டு நோவானது பல மாதங்களிற்கு நீடித்திருந்த பின்னரே குறைவடையும். இதனைத் தவிர உடல் நோவு , முதுகுவலி, தோள்மூட்டு வலி என்பன பொதுவாகக் காணப்படும். அத்தோடு சருமம் சம்பந்தப்பட்ட வியாதிகளும் ஏற்படுகின்றன. அதாவது முகம், நெஞ்சு, வயிறு (Trunk) பகுதிகள் சிவந்து காணப்படும். பொதுவாக இவை மகுலோ ( Maculo ) – பாபுலர் படை (papular rash) ஆகக் காணப்படும்.

இவை அநேகமாக முண்டம், கை, கால்களின் பகுதிகளிலே அதிகமாகக் காணப்படுவதோடு, முகம், பாதம், உள்ளங்கை போன்ற பகுதிகளிலும் காணப்படலாம். இச்சருமத்திலே ஏற்படுகின்ற தழும்புகள் அரிப்புத்தன்மை ( Pruritis) உள்ளவையாகவும் காணப்படலாம்.

இதனைத் தவிர இந்நோயின் ஆரம்ப பகுதிகளில், அநேகமான நோயாளிகள் கடும் தலைவலியினால் அவதியுறுவர். கண்கூச்சம், கண் நோவு என்பனவும் சிலரிற் காணப்படும். சிக்குன்குனியா காய்ச்சலின் அநேகமான குணங்குறிகள் டெங்கு காய்ச்சலின் குணங்குறி களுடன் ஒத்துக்காணப்படுவதால் இரண் டினையும் வேறுபடுத்தி அறிவது அத்தியாவசிய மாகும்.

ஏனெனில், ஒரு சந்தர்ப்பத்திலே நோயாளி ஒருவரின் குருதி மாதிரி ஒன்றிலே சிக்குன்குனியா வைரஸ், டெங்கு வைரஸ் இரண்டுமே கண்டறியப்பட்டு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக இரண்டு வைரஸ்களின் தொற்றுக்களும் ஒரே சமயத்தில் ஏற்படலாம். ஆகவே இவ்விரு நோய்களையும் பிரித்தறிவது மிக மிக அவசியமாகும். எது எவ்வாறு இருப்பினும், டெங்குக்காய்ச்சலினால் ஏற்படுத்தப்படுகின்ற பாரிய உயிர் இழப்புக்கள் போன்று பாரதூரமான அளவுகளிற் சிக்குன் குனியா காய்ச்சலில் ஏற்படுத்துவதில்லை.

### கர்ப்பகாலத்தில் சிக்குன்குனியா காய்ச்சல்

கர்ப்பமுற்றிருக்கும் தாயிடமிருந்து குழந்தைக் குச் சிக்குன்குனியா வைரஸ் பரப்பப்படுகின்ற ஒரு பாரிய சிக்கலான சந்தர்ப்பம் பிரசவமாகும். கர்ப்பமுற்றிருக்கும் பெண் பிரசவ தினத்திற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னதாக இந்நோயினாற் பீடிக்கப்பட்டால், இவர் இவ் வைரசிற்குக் காவியாகத் தொழிற்படுவார். தாயின் குருதியில் இவ்வைரஸ் காணப்படுமிடத்து, பிரசவத்தின் போது குழந்தைக்கு நோய்த்தொற்று ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் 48% ஆகும். பலவிதமான ஆய்வு அறிக்கைகள் இவ்விடயம் சம்பந்தமாக, பாரிய விளைவுகள் ஏற்படுவ தில்லை எனக் குறிப்பிடுகின்றன. அதாவது தாயிடமிருந்து பிரசவ வேளையின்போது நோய்த்தொற்றுக்குள்ளான குழந்தைகளில் (New borns ) 90% விகிதத்தினை விட அதிகமானவை எவ்வித பிந்திய விளைவுகளு மின்றி உடனடியாகப் பழைய நிலையை அடைகின்றனர். சிக்குன்குனியா வைரசின் நோய் அரும்புகாலம் 2–4 நாட்களாகும். உடலிலே குணங்குறிகள் தோன்ற ஆரம்பித்து 4 தொடக்கம் 7 நாட்களில் உடலினாற் பிறபொருள் எதிரிகள் ( IgM ) உருவாக்கப்படும். ஆனால் சூல்வித்தகத்தை ஊடுருவிச் செல்லாது.

உடலானது 15ம் நாள் அளவில் IgG எனப்படும் பிற பொருள் எதிரியை உருவாக்கும். இவை சூல்வித்தகத்தினூடாக ஊடுருவிச்செல்லும் ஆற்றலுடையவை, இதனால் இவை தாயிலிருந்து சூல்வித்தகத்தி னூடாகச் சிசுவிற்குச் சென்று, சிசுவிலே நோய் எதிர்ப்புச் சக்தியினைஏற்படுத்தும்.

கர்ப்பமுற்றிருக்கும் தாயிலே இவ் வைரசானது காய்ச்சலினை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாது, கருப்பையின் சுருக்கத்தினைத் தூண்டிவிடும். இதனால் கருக்கலைதல் அல்லது சிசு மரணம் என்பன ஏற்படுகின்றன. ஒரு குழந்தை பிரசவத்தின்போது சிக்குன்குனியா நோய்த் தொற்றுக்குள்ளானால், நோய்க்கான அறிகுறிகள் கிட்டத்தட்ட 4 நாட்களில் தென்படும். ஆனால் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று 90 வீதத்திற்கும் அதிகமான தொற்றுக்குள்ளான குழந்தைகள் எதுவித பிந்திய விளைவுகளோ, பிரச்சனைகளோ இன்றி உடனடியாகச் சுகமடைவர்.

## இனங்காணுவதற்குரிய பரிசோதனைகள் (Diagnostic tests)

இந்நோயினைக் கண்டறிவதற்கு நம்பகரமான முறை ஆய்வுகூடப் பரிசோதனை மட்டுமே ஆகும். ஆனால் CHIK வைரசு ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலே நோய்ப்பெருக்கத்தினை ஏற்படுத்தும்போது, அந்நோய்த் தொற்றுக்குரிய சில சிறப்பம்சங்களான காய்ச்சல், சருமவியாதிகள், அத்தோடு முக்கிய மூட்டுக்களில் ஏற்படுத்துகிற குணங்குறிகள் மூலம் இந்நோயைக் கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்கும். இதனைத் தவிர, நுளம்பு கல வளர்ப்பூடகங்கள் (Mosquito cell culture ), மனித கல வளர்ப்பூடகங்களில், ( Human cell culture ) இவ் வைரசினை வளர்த்து, அதிலிருந்து பிரித்தெடுப்பதன் மூலம் இவ்வைரசினை அறியலாம்.

சிக்குன்குனியா நோயினாற் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியின் குருதியிலே, நோய் உருவாகி முதல் 48 மணிநேரத்தினுள்ளே இவ்வைரஸ் ஆனது காணப்படும். சிலவேளைகளிற் சில நோயாளிகளின் குருதியிலே நான்காவது நாட்களிலும் இவ் வைரசினைக் கண்டறியலாம். இவ் CHIK வைரசுக்கு எதிரான குறிப்பிட்ட பிறபொருள் எதிரியான IgM இனை நோய் குணமடையும் காலப்பகுதியிலும்கூட ELISA எனும் சோதனை மூலம் கண்டறியலாம். இவ் IgM ஆனது நோய்த்தொற்று ஏற்பட்டு 6 மாத காலம்வரை குருதியிற் காணப்படும்.

குருதியிலே காணப்படுகின்ற CHIK வைரசின் அளவானது, நோய் ஏற்பட்டு 5–7 நாட்காலப் பகுதியிற் குறைவடைந்துகொண்டு செல்லும், இவ்வேளையிலே , Haemagglutination Inhibition (HI) antiboidies இற்கான சோதனை செய்வதன்மூலம் CHIK வைரஸ் தொற்றினைக் கண்டறியலாம்.

## சிகிச்சை முறைகள் (Treatment)

சிக்குன்குனியா காய்ச்சலுக்கு எதிரான தடுப்பூசிகளோ அல்லது குறிப்பிட்ட வைரசுக்கு எதிரான மருந்து வகைகளோ நடைமுறையில் இல்லை. இக்காய்ச்சலினால் உருவாகும் குணங்குறிகளைக் குறைப்பதற்கான மருந்துகளே பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக: ஓய்வாக இருத்தல், கூடியளவு நீர் உள்ளெடுத்தல். இதனைத் தவிரக் காய்ச்சல், நோவு என்பவற்றைக் குறைப்பதற்காக Ibuprofen, Naproxen, Acetaminophen அல்லது Paracetamol போன்ற மாத்திரைகளை உள்ளெடுத்தல், இந்நோயின் ஆரம்ப நிலையில் அஸ்பிரின் உள்ளெடுத்தலைத் தவிர்க்க வேண்டும். ஆரம்ப நிலையிலே ஏற்படுகின்ற மூட்டு நோவு என்பவை ஓய்வெடுப்பதன் மூலம் குறைவடையும். விசேடமாக அதிகாலையிலே ஏற்படுகின்ற மூட்டு இறுக்கம், மூட்டு நோவு, என்பன மெதுவாக அப்பியாசம் செய்வதன் மூலம் குறைவடையும்.

மூட்டுக்களிலே ஏற்படுகின்ற வீக்கம் (Arthritis ), நோவு என்பன குறையாமற் காணப்படுமாயின் அவை அஸ்பிரின் போன்ற NSAIDs மருந்துக்களுக்குப் பயனளிக்காது. இவை Chloroquine Phophate.( 250mg / day ) எனும் மருந்திற்கே குணமாகும். ஆய்வுகளின்படி Chloroquine இற்கு வைரஸிற்கு எதிராகத்தொழிற்படும் ஆற்றல் உண்டு என நம்பப்பட்டாலும் இவை முழுமையாக நிறுவப்படவில்லை. நோய்த் தொற்றுக்குள்ளானவர். மேலும் நுளம்பானது தன்னைக் கடிப்பதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு செய்வதனால், தொற்றுக்குள்ளானவரிடமிருந்து

மற்றுமொருவருக்கு இந்நோய்த்தொற்று வருவதினைத் தவிர்க்கலாம்.

### நோயினைத் தடுப்பதற்கான முற்காப்பு நடவடிக்கைகள்

சிக்குன்குனியா நோய்க்கெதிரான தடுப்பூசி இல்லாத காரணத்தினாலும், வைரசுக்கு எதிரான சிறந்த மருந்துகள் அற்ற காரணத்தினாலும், நுளம்புகளைக் கட்டுப் படுத்தி வைரசின் பரம்பலினைத் தடுப்பதால் இந்த சிக்குன்குனியா காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரமுடியும். நுளம்புகள் பெருகுவதைத் தடுப்பதால் நோய்ப் பரவலினைத் தடுக்கலாம். புல்பூண்டுகள் அழிக்கப்படல் வேண்டும். வடிகால்கள் சீராக அமைதல் வேண்டும். நீர்தேங்கி நிற்கவிடக் கூடாது. விட்டுவிட்டுப் பொழியும் மழையி னாலேயே நுளம்புப் பெருக்கம் அதிகமாகும். நோயாளிகள் 2 கிழமைவரை வேலை செய்யும் இடங்களுக்கோ, பாடசாலைக்கோ, பொது இடங் களுக்கோ செல்லாது விடுவதனால் நோய்ப் பரம்பலைக் கட்டுப்படுத்தலாம்.

- பகல் வேளையிலேயே நுளம்பு கடிப்பதால் நோய் ஏற்படுகின்றது. நுளம்பை விரட்டக் கூடிய இரசாயனங்களை உடம்பின் வெளிக் காட்டப்படும் பாகங்களில் பூசுதல் (DEET) சாத்தியக் குறைவானது.
- உடலினை இயலுமானவரை முழுமையாக மறைக்கத்தக்க உடைகளை அணிதல்.
- நுளம்புகள் வதிவிடத்தினுள் வரமுடியாத வாறு கதவு, யன்னல்களின் திரைச் சீலைகள் இடுதல்.
- மிக முக்கியமாக *A.agypti* நுளம்புகளின் பெருக்கத்தினை ஊக்குவிக்கக்கூடிய சிறிதளவு நீர் தேங்கி நிற்கும் இடங்களை வெறுமையாக்குதல். உதாரணமாக: பூச்சாடிகள், வாளிகள், கொள்கலன்கள் போன்றவற்றில் தேவையற்று நீர் தேங்கி நிற்கும் வேளைகளில் அவற்றை வெறுமையாக்குதல்.
- செல்லப்பிராணிகளுக்கு நீர் வைக்கும் பாத்திரங்கள் போன்றவற்றிலுள்ள நீரை அடிக்கடி மாற்றுதல்.
- பாவனையற்ற ரயர் காணப்படுமாயின், அவற்றுக்குத் துளையிடுதல் வேண்டும். இதனால் நீர் தேங்கி நிற்காது வழிந்தோடச் செய்யமுடியும்.
- நோயாளிகள் 2 கிழமைவரை வேலை செய்யும் இடங்களிற்கோ பொது இடங்களிற்கோ செல்லாது விடுவதால் நோய் பரம்பலைக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறான வழிமுறைகளைக் கிரமமாகக் கைக்கொள்வதன்மூலம் சிக்குன்குனியா வைரசினைப் பரப்பும் *A.agypti* நுளம்பின் பெருக்கத்தினைத் தடைசெய்யலாம். இதனால் CHIK வைரசின் பரம்பற் சக்கரமானது உடைபடுவதனால், நோய்த்தொற்று ஏற்படு வதனைத் தடுக்கலாம்.



வலிமையே வாழ்வு; பலவீனமே மரணம்.

- சுவாமி விவேகானந்தர் -

# தேடுகிறோம்......................

அ.நிஷாந்தன்
28ஆம் அணி

வறண்ட புல்மேவி
நீள நிலந்தடவி
வளர்ந்த இடுக்கு வழி
வளர்ந்து முடுக்கும் ஒலி
தடுக்கும் கல்மோதி
துடுக்கும் நுரை கக்கி
கால் கடுக்கும்- புல்லினம்
தலை துவட்டும்
ஓடி மறையும்
நண்டு காண
நாடியுறையும் - கொக்கு
தலை தொங்கும்.

சோளத்தின் மணியிடையே
சோழகத்தின் இளந்தளுவல்
சாளரத் துணுக்கூடாய்
தேகத்தில் கிளுக்கிண்டும்

நாணித்தலை கோணும்
சீமைப்பனை முட்டி
பிரசவித்த கள்வாடை
காற்றுக்கே சுதியேற்றும்

உவர்காற்றுப் பட்டு
ஊர்ப் படலை
உறுமல் ஊளையிடும்
ஊர்நாயை உசுப்பிவிடும்

வயலோர ஆமணக்கு
வரப்போரப் பூவரசு

வரிவரியாய்
வாடகைக்கு
வதியும் புலுணிக்குஞ்சு......

பிதற்றவில்லை யிவை
யாழ்பாடியின்
யாகமங்கள்
சகாராவின்
சஹாரனாக்கள்
பூபாளமிட்ட
புல்லாங்குழல்கள்.....

தொலைத்துவிட்டோம் - இன்று
அதிகாரத் தூரிகையின்
சதிகார வண்ணங்கள்
சகாராவில்
முகாரிக்க
எக்காளமிடும்
பல் குழல்கள்
கருவறைக்குள்
கல்லறையும்
அறுவைச் சிகிச்சை......

சங்கக்கடைகளிலும்
சவப்பெட்டிகள்
சனங்களைத் தின்னும்
சன்னங்கள் பற்றி
பாராளுமன்றத்தில்

*பட்டிமன்றம்*
*விதையேந்தா*
*விளைநிலம்*
*கறை படிந்த*
*களை நிலமாய்*
*விடுதலை வயலில்*
*வெட்டுக் கிளிகள்*

*குந்திய திண்ணையும்*
*கூடிய கூடலும்*
*கூண்டோடு "பண்டாகி"*
*உருண்ட முட்கம்பியில்*
*உதிரச் சீழ்க்கட்டிகள் ....*
*யார் செய்த*
*சதி?*
*பெருமூச்சுமட்டும்*
*விடையாகி*
*எம் மூச்சுக்கள்*
*விடுகதையாகி*
*நட்டாற்றில்*
*கோணிகளாய்*
*துடுப்புகளைத்*
*தேடுகின்றோம் - நம்*
*அடுப்புகள் எரிய.*

ஒரு மாதம் முழுவதும் ஒரு விஷயத்தைப் பற்றி வருந்துவதைவிட ஒருமணி நேர உழைப்பு உங்கள் துயரைப் போக்கி அதிக மகிழ்ச்சி தரும்.

-ஃப்ராங்க்ளின்



# யாழ் நிலா

## 2007 ஐப்பசித் திங்கள் இரவு



திவி
25ஆம்அணி

மழை மேகப் போர்வைகளற்ற அழகான தொரு முன்னிரவு. நட்சத்திரங்கள் பொழிகின்ற தெளிந்த வானம். அங்கே சற்றுக் கர்வத்துடன் முழு நிலவு வலம்வரத் தொடங்கிய பொழுது. மற்றைய இடங்களிலெல்லாம் நிலாவுடன் போட்டியிடும் மின்சாரம். நிலாச்சாரலைத் தூக்கிச் சாப்பிடும் அளவு பிரகாசம். ஆனால், யாழ்ப்பாணத்தின் இரவு நிலவுக்குப் பிடிக்கும். ரசிக்க யாருமில்லாவிடினும் தனது கிரணங் களைத் திருப்தியாகப் பாய்ச்சுகின்ற ஒரு அற்ப சந்தோசம். "இன்றைக்கொருக்கா யாழ்ப்பாணத் தைச் சுத்தி என்ன நடக்குதுஎண்டு பார்க் கோணும்" என்று தனக்குள் எண்ணிக் கொண்டது.

மெதுவாகக் தனது பயணத்தைத் தொடங்கியது. என்ன புண்ணியம் செய்ததோ, முதன் முதலாக நல்லதொரு காட்சி. ஆம், நம்மைப்போலவே நிலவுக்கும் நேர்வழி கொஞ்சம் பிறழ்ந்தது போலும். உடைந்துபோன கூரை ஓட்டின் நீக்கலூடாக ஏதாவது சமாச்சாரம் கிடைக்குமா என்ற ஏக்கத்துடன் எட்டிப் பார்த் தது. அங்கே, ஒரு சிறிய குப்பிவிளக்கு. சிறுவ னொருவன் வெற்றுத்தரையில் குனிந்திருந்து ஆர்வமாக எழுதிக்கொண்டிருந்தான். என்ன இது? யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இல்லையா என்று எண்ணியவாறு நிலவு புறப்பட எத்தனிக்கத் திடீரென மின்சாரம் ஒளி பாய்ச்சவே படித்துக்கொண்டிருந்த சிறுவனைக் காணவில்லை. சற்றுச் சிரமத்துடன் யன்னலின் துவாரத்தினூடாக எட்டிப் பார்த்தால் தொலைக் காட்சிப் பெட்டிமுன் அவன், "ஜோடி நம்பர் 1" பார்த்துக்கொண்டிருந்தான். நிலவுக்குக் குழப் பமாக இருந்தது. மெதுவாகச் சிந்தனையுடன் அடுத்த வீட்டுக்குத் தாவியது. அங்கு நுழைய முற்படவே, தொலைக்காட்சிப் பெட்டி காதைச் செவிடாக்கவே, ஒரே ஓட்டமாக நிலவு அடுத்த தெருவுக்கு வந்தது.

அங்கே ஒரு மாடிப் பல்கனியில் கூத்தும் கும்மாளமுமாக இருக்கவே சற்று உன்னிப்பாகக் கவனித்தது. ஆம். அது அரச சார்பற்ற நிறுவனத்துக்கான கட்டடம். மேல்மாடியில் வெளி நாட்டுக் குடிவகைகள், சிகரட்டுக்கள் மணத்தன. சற்று நின்றால் நிலவுக்கே மயக்கம் வரும் போலிருக்கவே அவசரமாகப் புறப் பட்டது.

அடுத்த கட்டமாக நிலவின் பார்வை யாழ் போதனா வைத்தியசாலைக்குத் தாவியது. விடுதிக்குள் எங்கும் நிசப்தம். எல்லாம் ஓய்ந்து போயிருந்தன. ஒரு விடுதிக்குள் மட்டும் சிறிய முனகல் சத்தம் இடையிடையே கேட்டுக் கொண் டிருந்தது. மருத்துவர்கள், தாதிமார்கள் பலரும் மேசையைத் தலையணையாக்கிக் குட்டித் தூக்கம் போட்டுக்கொண்டிருந்தார்கள்.

இதென்ன சோம்பேறிகளின் வைத்தியசாலை என்றெண்ணியவாறு நிலவு மனக்குறையுடன், அகல முயலவே, சத்திரசிகிச்சைக் கூடத்தி லிருந்து வெளிவந்த அழகிய பெண் நிலவின் ஆர்வத்தை அதிகரித்தாள். உள்ளே என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்று அறியும் ஆவல். ஆனால் முடியவில்லை.

எனவே, மெதுவாக அவளுடன் உறவு கொள்ள முயன்றது. தப்பாக எண்ணவேண்டாம். பேசமுயன்றது நிலவு. ஆனால் அவளோ சிடுமூஞ்சி. வியர்வை பிசுபிசுத்த முகத்துடன் தூக்கம் கண்களைக் கட்ட சிறிய கொப்பி ஒன்றுடன் தளர் நடை போட்டுக்கொண்டிருந் தாள். விட்டால் போதுமடா சாமி என்று நிலவு எகிற நினைக்க, இளிச்சவாயனாக நான் அகப்பட்டுக்கொண்டேன். ஆனாலும் நிலவின் ஈர்ப்பு சக்கி என்னைச் சற்றுச் சாந்தப்படுத் தவே, சற்று மனங்களால் சம்பாசித்துக் கொண் டோம். உள்ளே நடந்த சத்திரசிகிச்சை பற்றித் தெளிவாகக் கூறிய நான், அந்தப் பெண்ணைப் பற்றிக் கூறவும் தவறவில்லை. ஆனால், நிலவோ அதிற் சற்றுமே ஆர்வம் காட்டாமல், நோயாளி யின் உடல் நலம் பற்றிக் கரிசனையோடு வினவியது. நானும் சற்றுத் தடுமாறிப்போய் சத்திர சிகிச்சை நிபுணர் கடைசியாகக் கூறிய வார்த்தைகளை மனதில் மீட்டி, ஒருவாறு 48 மணித்தியாலத்திற்குப் பிறகுதான் முடிவு சொல்லலாம் என்றேன். என்னை ஒரு கேவலப் பார்வையுடன் தாண்டிச் சென்றது நிலவு.

அடுத்ததாக நிலவைக் கவர்ந்தது வீதியால் சென்ற ஒரு வாகனம். ஆம். அது தனிக்காட்டு ராஜா போல எகிறிப் பறந்து கொண்டிருந்தது. ஏதேனும் இராணுவ வாகனமோ என்றெண்ணிச் சற்று உற்றுப் பார்த்தபோது, அது ஒரு வான். அம்புலன்ஸ் போலும் என்று எண்ணிய நிலவின் ரியூப்பல்ப் மூளைக்கு அது ஒரு ஆள்கடத்தும் வெள்ளை வான் என்று கண்டு பிடிக்கச் சற்று நேரம் எடுத்ததில் ஆச்சரியமில்லை. பிரதான வீதியால் சென்று கொண்டிருந்த அந்த வாகனம் தனது முன்பின் விளக்குகளை அணைத்து விட்டு, ஒரு குறுக்குச்சந்துக்குள் நுழைந்து. நிலவின் கண்காணிப்பிலிருந்து விடுபட்டு விலகவே, வேண்டாம் இந்தப்பிரச்சனை என்றவாறு நிலவு வழிந்தோடிய வியர்வையை ஒற்றியவாறு ஒரே ஓட்டமாய் நகர்ந்தது.

வழியில் கண்களில் தட்டுப்பட்ட பத்திரிகை நிலையத்தை பார்க்கலாமா? வேண்டாமா? என்ற உணர்வு மேலாங்கவே வேண்டாம் என்று முடிவு செய்து எட்டிப்போனது நிலவு.

அடுத்ததாக திறந்து கிடந்த யன்னலின் திரைச்சீலையூடாக எட்டிப் பார்த்த நிலவுக்கு கொள்ளை மகிழ்ச்சி. அங்கே கணவனும் மனைவியும் சல்லாபத்திலே மூழ்க முற்பட்டுக்கொண்டிருக்க, மனைவி; "யன்னலை மூடிவிட்டு வாங்களேன்" என்று சிணுசிணுக்க, " ஒரே புழுக்கமாய் இருக்குது. கேட்டின் போட்டிருக்குத்தானே.அதைவிட முழு நிலாவில் தான் நல்ல மூட் வரும்" என்றவாறு கணவன் சிற்றின்பக்கடலில் மூழ்கப் போந்தான். தன்னைப் புகழ்ந்து பேசிய அந்த ஆண் நிலவின் மனதில் உயர்ந்த இடத்திற்குச் செல்லவே " சீ... இனிப்பார்க்கிறது சரியில்லை" என்றவாறு நிலவு வெட்கத்துடன் விருப்பற்றுத் தாவியது. இவ்வளவு நேரமும் சோர்ந்திருந்த நிலவுக்கு உற்சாகபானம் அருந்தியது போன்றதொரு பூரிப்பு.

தொடர்ந்து தெருவோரத்தில் ஒரு உருவ அசைவு நிலவை நிற்க வைத்தது.சற்று உற்றுப்பார்க்கவே முகத்தில் சிகரட் வெளிச்சம். கிட்டப்பார்த்தால் ஒரு இராணுவ வீரன் வீதி வாய்க்காலில் காலை மடித்து, துப்பாக்கியை அணையாக்கி மனப்பிராந்தியுடன் இரகசிய மாகச் சிகரட் புகைத்துக்கொண்டிருந்தான். உடனே நிலவுக்கு "அவர்களையும்" பார்க்க வேண்டுமே இந்தக் கணத்தில் என்ன செய்து கொண்டிருப்பார்களோ என்ற ஆர்வம். ஆனாலும். சற்றுத் தூரம் பயணிக்க வேண்டிய இக்கட்டான சூழலைப் புரிந்துகொண்ட நிலவு எண்ணத்தை ஒத்திப்போட்டது.

ஒரு மைானத்தில் சனப் புழக்கம் இருக்கவே தங்கள் உடைமைகளுடன் கப்பல் பயண அறிவித்தலுக்காகக் காத்துக் கொண் டிருந்தார்கள். பல அகதிமுகாம்களையும் , மனித அவலங்களையும் இங்கேயே பார்த்துப் பழகிப்போன நிலவுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

திடீரென எங்கிருந்தோ கருக்கட்டிய மழை மேகங்கள் அணி வகுத்து வான் பரப்பை ஆக்கிரமிக்கவே, எங்கள் குட்டி நிலா பாவம். சிறைபிடிக்கப்பட்டது. இவ்வளவும் போதும் என்ற வாறு விடை பெற்றுக்கொண்டது. நிசப்தம் கலைந்து மின்னல், முழக்கம்.... இடையிடையே புறப்பட்டுப் போன எறிகணைகளாலும்தான்.

ஒரு குறுஞ்செய்தி கிடைக்கப் பெற்ற தாக எனது கைத்தொலைபேசி உறுமியது. திறந்து பார்த்தேன். இலக்கம் புதியதாக இருந்தது. அது ஒரு " நீண்ட" குறுஞ்செய்தி... "இரவு" என்பது வலிமையானது. சாந்தமானது. உணர்ச்சிகள் செறிந்தது, உறவுகள்துளிர்ப்பது, கனவுகள் நிறைந்தது. புதிய பகலுக்கு பூரிப்பளிப்பது. உபயோகமானது. பலருக்கு முகத்திரை களைந்து சுயத்தைத் தருவது. சிலருக்கு முகத்திரை அணிய வழி சமைத்துக் கொடுப்பது. அந்தரங்கமானது. ஆனால், பூமியின் மறு பாதிப்பந்தில் இதே கணங்கள் சூரிய ஆக்கிரமிப் பில் ... போகட்டும் ..........

தூக்கம் மறுத்த ஒரு இரவில் இருளின் நிசப்தத்தில், தனிமையில் கட்டியுள்ள உங்கள் எண்ண அலைகளைத் திறந்து விடுங்கள். அவை பொங்கிப்பிரவகிக்கட்டும். நிகழ்ந்த வைகளை மீட்டால் அவை ஆயிரம் கதைகள் செல்லும். அர்த்தங்கள் துலங்கும். உங்களை நெறிப்படுத்த அளவற்ற சக்தியைத் தரும். வெற்றி ஏணியின் உச்சி உங்களுக்காகக் காத்திருக்கும் – **நிலா**

எந்தன் நிலவா? வானத்து நிலாவா? சற்றுக் குழம்பித்தான் போனேன்!

"ஒவ்வொரு அநீதியையும் கண்டு ஆத்திரத்தில் அதிர்ந்து போவானா னால் அவன் புரட்சியாளன்"

*– யாரோ –*

# 2007 இல் மாணவர்களுக்காக...

மிகவும் இக்கட்டானதொரு சூழலில் யாழ்ப்பாணம் இருக்கின்ற இந்தக் கால கட்டத்தில் மருத்துவ மாணவர் ஒன்றியம் சாதித் தவைகள்.......

- எமது பீட சிற்றுண்டிச்சாலையைத் தரமுடன் நடாத்துவதுடன் சுமார் 150 மாணவர்களுக் கான காலை, மதிய, இரவு உணவுத் தேவைகளை JMFOA இன் நிதியுதவியுடன் குறைந்த விலையில் பூர்த்திசெய்து வருதல்.
- JMFOA இனால் மாதாந்தம் உதவித் தொகையாக வழங்கப்படுகின்ற ரூ.94000 இனை உரிய முறையில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு உடனுக்குடன் பகிர்ந் தளித்து வருதல்.
- MIOT இனால் வழங்கப்படுகின்ற உதவிப்பணத்தினைப் பெறத்தகுதியுடைய மேலும் 11 மாணவர்களைத் தெரிவுசெய்ய வேண்டிய ஒழுங்குகளைச் செய்தமை.
- யாழ் போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் ரவிராஜ் அவர்களால் தனிப்பட்ட ரீதியாக வழங்கப்பட்டுவருகின்ற உதவித் தொகையை தெரிவு செய்யப்பட்ட மாணவர்களக்கு வழங்கிவருகின்றமை.
- மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுகிய காலத்திற் கரப்பந்தாட்ட மைதான மொன்றை எமது வளாகத்தில் அமைத்தமை.
- எமது சத்திர சிகிச்சை நிபுணர் ரவிராஜ் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் அயராத முயற்சியின் பயனாக எமது மாணவர்களுக் காக இரண்டு Photocopier இயந்திரங் களை அன்பளிப்பாகப் பெற்று, பலத்த போக்குவரத்துச் சிரமங்களின் மத்தியிலும் விரைந்து தருவித்து எமது மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்திற் பிரத்தியேகமான நிழற்பிரதிச்சேவையை வழங்கி வருகின் றமை.
- நெருக்கடியானதொரு சூழலிலும் எமது IT சேவைகளைத் தினமும் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை ஒழுங் கமைத்தமை.
- மாணவர்களுக்கான இணையத்தளச் சேவையை மேம்படுத்தும் பொருட்டு வேண்டிய நடவடிக்கைகளை நிர்வாக ரீதியாக மேற்கொள்வதற்கு அழுத்தங் களைப் பிரயோகித்ததுடன் வலைப்பின் னலில் உள்ள கணினிகளின் எண்ணிக் கையை 16 ஆக உயர்த்துவதற்கு வேண்டிய உபகரணங்களைக் கொள்வனவு செய்தமை.
- IRQUE வேலைத்திட்டத்தின் கீழ் மாணவர் களுக்காக மேலும் 20 கணினிகளையும், Multi media projector ஒன்றினையும் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் விரைந்து கொழும்பிலிருந்து தருவித்து IT சேவையை விரிவாக்கியமை.
- மேலும் எமது கணினிப்பிரிவின் தளத்துக்கு தளவிரிப்பிணை (Wool carpet) இனை விரைந்து தருவித்தமை.
- மாணவர்களின் விளையாட்டு உபகரணத் தேவைகளை இயன்றளவு உடனுக்குடன் பூர்த்திசெய்து வருகின்றமை.
- மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்தால் இருகட்டங்களாக வழங்கப்பட்ட காகிதாதிகள் மற்றும் அத்தியாவசியப்

கொள்ளவிருந்த காலதாமதங்களை நீக்கியமை.

- வெளிமாவட்ட மாணவர்கள் இராணுவ அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதை இலகுபடுத்தியமை.
- தமிழ்ப்புத்தாண்டை முன்னிட்டு எமது அணி மாணவர்களுக்கிடையே மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப் பாட்டத் தொடரொன்றினை வெற்றிகரமாக ஒழுங்கமைத்து நடாத்தியமை.
- மருத்துவ வார நிகழ்வினை 27ஆம் அணியினரின் ஒத்துழைப்புடன் நடாத்தி யமை.
- புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வை 28ஆம் அணியினரின் துணை யுடன் திறம்பட நடாத்தி முடித்தமை. அவர்களுக்கான மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் அடையாள அட்டைகளை விரைந்து தயாரித்து வழங்கியமை.
- பல்வேறு அழுத்தங்களின் மத்தியிலும் இயன்றளவு முயன்று மாணவர்களின் ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் உள்ளகப்பயிற்சி நெறிக்காக குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மாணவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேவையாற்றுவதற்கு நடைமுறைச் சாத்தியமான வேலைத் திட்டத்தை முன்னெடுத்தமை.
- வாராவாரம் உலகத்தரம் வாய்ந்த திரைப் படங்களை அகலத்திரையில் மாணவர்கள் பார்த்த தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தமை.
- பிரத்தியேக ஒன்றுகூடல்கள் மூலம் மாணவர் களின் குறைநிறைகளை நேரடியாகக் கலந்துரையாடி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தமை.
- மாணவர்களின் எதிர்பார்ப்புக்களைத் தேவைகளை எமது பீடாதிபதிக்கும் நிர்வாகத்தினருக்கும் நேரடியாகவும் மாதாந்த Board meeting இனூடாகவும் உடனுக்குடன் தெரியப்படுத்தி இயன்ற அளவு விரைவாகத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தமை.
- எமது ஒன்றியம் தனது பிரத்தியேக நன்றிகளை JMFOA (Jaffna Medical Foreign Overseas Alumni) மற்றும் துஆமுஹ (Jaffna medical Graduates Alumini Association) இற்கும், எமது சத்திரசிகிச்சை நிபுணர் Dr.S.ரவிராஜ் அவர்களுக்கும், எமது பதில் துணைவேந்தர் Prof.V.குமாரவடிவேல் அவர்களுக்கும், எமது பீடாதிபதி Dr.K.சிவபாலன் மற்றும் எமது பெரும்பொருளாளர் Dr.D. குணராஜசிங்கம், மற்றும் IT Committe பொறுப்பாளர் Dr. பாலகுமார் அவர் களுக்கும், என்றென்றும் எம்முடன் கைகோர்த்த எமது நண்பர்களுக்கும் தெரிவித்துக்கொள்வதில் அகமகிழ்வடை கின்றது.

# Stress



***Kalai***
***26 Batch***

Stress is not a disease. It is a reaction to the environment. It will induce the creation of the energy to succeed in competition. But excessive stress may be harmful. When stress exceeds physiological demand, it becomes pathological. Its means when stress exceeds certain limits it causes disturbances.

Stress is defined in various ways by various authorities. Han seyle, father of stress research defines stress as the wear and tear of our bodies' experiences as we adjust consciously to the changing environments. It has physical and emotional effects on us and can create positive or negative feeling.

Stress is also defined as a force from out side world impinging on the individual. is the emotional and physical strain caused by our response to pressure from the outside world. Stress has a particular pattern of disturbing psychological and physiological reactions and a non specific response of the body to a demand. Stress is a normal effect in our life. It can help to learn and grow. Conversely stress can cause significant problems also.

During stress, brain signals for the release of the stress hormones and make a series of response that gives body extra energy. So blood sugar level rises, heart beat speeds up and blood pressure increases. The muscles tense for action.

Stress is classified into good type of stress and bad type of stress. Good type of stress means demand or eustress. Through demand we have an opportunity to grow and succeed. Good types of stress help to create energy to become better and stronger. Bad type of stress causes distress or emotion. Emotions end up in worries. Stress demands energy for action. If the demand is not fulfilled, it causes mental distress. Failures to cope up to with stress in a situation leads to worries sickness or death. Thus it has positive effects and negatives effects.

Positive effects are the following. It can compel us to action. It can result in a new awareness, exciting new perspective. Positive stress also enables concentration, increases performances and energizes in to motion.

Negative effects of stress may be health problems and non health

problems. Health related problems cause headache, upset stomach, rashes disturbances in sleep, ulcers, high blood pressure, heart diseases, stroke, irritability, changes in thoughts, dry mouth, frequent urination, backache, worries and anxiety. Non-health related problems are loss of motivation, reduction of effectiveness, and physical, mental or behavioral problems.

Stress can worsen the diseases such as hypertension, diabetes mellitus, and peptic ulcer. Chronic stress can cause depression and anxiety.

We can escape the stress from the following ways.

- Notice your distress.
- Never ignore it.
- Notice what events distress you.
- Determine how your body responds to the stress.
- Notice "Do you become nervous or psychologically upset?"
- Recognize whether you can change your stressors by avoiding or eliminating them completely?
- Recognize whether you can reduce their intensity?
- Recognize whether you can shorten your exposure to stress?
- Recognize whether you can devote the time and energy necessary to make a change?
- Try to control your excess emotion.
- Put the situation in a perspective.
- Take slow, deep breathing. It will bring your heart rate and respiration back to normal, while you are in stress.
- Involve in relaxation techniques. Eg- yoga
- Involve in stress relief games and diversions.
- Involve and enjoy in your hobbies. Eg- Listening music. Taking vacation, participating in sports activities.
- Do regular meditation.
- Take exercise for cardiovascular fitness three to four times a week.
- Maintain your ideal weight.
- Avoid nicotine and excessive caffeine.
- Mix leisure with work. Take breaks and get away when you can.
- Get enough sleep. Be as consistent with your sleep schedule as possible.
- Follow the trap methode.

  T is for "Tune in" - Get into the habit of noticing early signs of stress.

  A is for "Analyze" - Think about the source or causes of your stress.

  R is for "Respond" -Deal with the cause of your stress, and its effects on you.

  P is for "Prevent" - Develop good stress-reduction habbits.
- Avoid self medication.

- Avoid Alcohol.
- Give up smoking.
- Take care of yourself.
- Share your stress with others.
- Try to know your limits.
- Find time for fun.
- Always be a participant.
- Take break in between your work.
- Try out new way of thinking.
- Minimize reaction to stress.
- Learn better way to manage your time.
- Always let to feel out. Eg — talk, cry, laugh, and express anger when you need.
- Don't blame others.
- Always expect some frustrations, failures and sorrows.
- Be a friend of yourself.
- Always be kind and gentle.
- Develop some mutually supportive friendship and relationship.

The best strategy for avoiding stress is to learn how to relax.

"விளைவுகளை ஏற்படுத்தாத
வார்த்தைகள் முக்கியமற்றவை"

– யாரோ –



# காதலித்த தோழி



என். இரட்ணராஜ்
28ம் அணி

அன்று தான் ....
என் இதயத் துடிப்பு ...
மார்புக் கூட்டின் மத்தியில்
மையம் கொள்ள மறுத்த நாள் ...

அன்னைக்கு அடுத்ததாய்....
உன்னைத் தானடி
சத்தியமாய் நேசித்திருந்தேன் ....

நீயாகச் சொல்லவில்லை
நானாய்த் தான் புரிந்து கொண்டேன் ...

விழியோரம் வழியக் காத்திருந்த ...
அரும்பியதோர் நீர்த்துளியும் ...
திக்கித் திணறி வார்த்தைகளை வெளிவிட்ட
வரண்டுபோன உன் உதடுகளும் ....
அருகினில் அமர்ந்ததால் தெரிந்த
தளர்ந்த உன் ஆடை நுனிகளும்

உரக்கச் சொல்லிற்று
மறைக்க முனைகிறாய் என்று !
மறுக்கவில்லை நான் ...

பகிடிவதையின் வரைமுறை தேடிய
கனிஷ்ட மாணவன் போல்
நட்பின் எல்லை நாடிய
என் காதல் குதிரைக்கு ...
காரணங்கள் ஏதோ கூறி
கடிவாளம் இட்டாய் ....

அப்பொழுதும்கூட அழகாகவே தெரிந்தாய் ...
நீ தான் ....
காதலிக்கப்படுபவள் ஆயிற்றே ...
இத்தனையும் இருக்க

இன்னும் ஒருமுறை ஏனடி ?...
உன் திருமண அழைப்பிதழை
கைகளில் திணித்த பொழுது ...
கண்களிற்கும் உதட்டிற்கும் இடையே
உணர்ச்சிப் போராட்டம் ...
முந்துவது யாரென்று ...

வலிந்தே வழியவிட்ட புன்னகையுடனும்
வழியனுப்பும்வரை
கலங்காத கண்களுடனும்
அன்று நான்....

அறிவுக்கெட்டியவரை அன்று தான் ...
முதன் முறை ...
அன்னை மடி புதைத்து
நான் முகம் நனைத்ததாய் ஞாபகம்.

தூறலோடு இணைந்து வரும் சாரலில்
உன் மூச்சுக் காற்றையும்
ஆதவனை அழைக்கும் பனித் துளிகளில் ...
நீ சிந்திச் சிதறவிட்ட குறும்புச் சிரிப்பையும்
கருவறையில் சுமந்தவளிடம்
உன் முழு உருவையும்
காணும் எனக்கு - தெரிவதென்னவோ
இவை எல்லாம் நம் நட்புச் சின்னங்களாய்...

இன்னமும் காத்திருப்பேன் ....
உன் கைவிரல் ஸ்பரிசத்திற்காய் ...
அன்னையின் கைப்பிடித்துக்
கொஞ்சி விளையாடும்
பிஞ்சுக் குழந்தைபோல்
உன் சாலை வழி தொடர ....

# கால்கள் எழுதிய கதை



வ.விஜிதரன்
25ஆம் அணி

கால்கள்....... மனிதன் மரமென்றால் ,கால்கள் நடக்கத் தெரிந்த வேர்கள். கருவறைக்குள் இருந்தபடி அம்மாவைச் செல்லாமய் உதைக்கும் சிசுவின் கால்களில் தொடங்கி எட்டுக்கால்கள் சுமக்கச் சுடுகாடு செல்லும் இறுதி ஊர்வலம் வரை கால்களின் கதை நீள்கிறது.

வாழ்வு முழுவதும் கால்கள் எம்மை பூமியோடு பிணைக்கின்றன. பூமியின் தட்ப வெப்பத்தோடு நெருங்கி உறவாடி, பூமியோடு சிநேகம்கொண்டபடி எம்மை விழுந்துவிடாதபடி நிறுத்திவைத்திருப்பவை கால்கள்.

தினமும் எத்தனையோ பேரைச் சந்திக்கின்றோம். அப்போதெல்லாம் நாம் பார்ப்பது அவர்களது முகங்களைத்தான். கால்களை யார்தான் கவனிக்கிறோம்.! இன்றிருக்கும் இடத்திற்கு வரும் வரையில் அவை எங்கெல்லாம் அலைந்தனவோ, எத்தனை தெருக்களில் நடந்தனவோ

நாம் பார்க்கும் எல்லாக் கால்களும் எமக்கு ஒரே உணர்வைத் தருவதில்லை. முகங்களைப் போலவே கால்களும் பார்த்தவுடன் ஏதோவொரு பதிலை எமக்குள் தந்துவிடுகின்றன. ஆனால், அந்த உணர்வைப் பெறுவதற்குக் கொஞ்சம் கூர்ந்த கவனிப்பும் பரிச்சயமும் தேவைப் படுகின்றது என்றே படுகிறது.

ஒரு மழலையின் கால்கள் ரோஜாப் பூக்களைப்போல எப்போது பார்த்தாலும் எடுத்து முத்தமிடவேண்டுமென்ற உணர் வைத்தரும். மண்ணின் சொரசொரப்பிற்கும், ஈரலிப்புக்கும், வெதுவெதுப்பிற்கும் இன்னும் அனுபவப்படாதவை அவை. அவையே வளர்ந்து பெரியவையானதும் எல்லா வற்றிலும் பட்டுத்தேறி விடுகின்றன. பூமியோடு இயைந்து வாழும் வகையில் அவை மாறிவிடுகின்றன.

ஆன்மீக உலகில் கால்களுக்கென்று ஒரு இடம் இருக்கிறது. அங்கு இறைவனின் காலடிகளிலேயே எல்லாம் சமர்ப்பிக்கப் படுகிறன. பெற்றோர், குரு ஆகியோரின் பாதங்களைத் தொட்டுத் தொழுவது நமது மரபு. நாம் இழந்துவரும் மரபு. கால்களைத் தொழுவது என்பது வெறுமனே வழிவழியாய் வரும் வழக்கம் மட்டுமல்ல. அது ஓர் அற்புதமான ஆன்மீக அனுபவம். வணங்கு பவரின் தன் முனைப்பு முழுமையும் வணங்கப்படுபவரின் காலடிகளிற் கரைந்துருகி வடிந்தோடும் அனுபவம். நல்ல மனிதர்களின் கால்களில் விழுந்து வணங்கியபின் அந்த ஆழ்ந்த அமைதியின் நுண்ணதிர்வுகள் நாட்கணக்கில் எமக்குள்

நிறைந்திருப்பதை உணரலாம். ஏன் சிலரது பாததரிசனங்கள் மனிதர்களின் வாழ்க்கைப் பாதைகளையே மாற்றிவிட்டிருக்கின்றன.

பாதங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில் என் நினைவுகளில் எப்போதும் நிறைந்திருக்கும் என் அப்பாவின் பாதங்களைப்பற்றிக் கூறா மலிருக்க முடியவில்லை. எங்கள் குடும் பத்திற்காக உணவும், உடையும், உறையுளும், மற்ற எல்லாமும் தேட அதிகாலை முதல் மாலை வரை இருபத் தைந்து வருடங்களுக்கும் மேல் நின்று நின்றே உழைத்த பாதங்கள் அவை. அப்பாவின் பாதங்கள் கொஞ்சம் கடின மானவை. தடித்த கொழுக்கட்டை போன்ற உருண்டைப் பாதங்கள்.அவை சிற்ப நேர்த்தியோடு செதுக்கிய விரல்கள், நேர் கோடாய், அழகாய்த் தறித்த நகங்கள் எனப் பார்க்க மிகவும் கம்பீரமாய்த் தெரியும். ஓயாமல் உழைத்த அப்பாவின் பாதங்கள் ஐம்பதைத் தாண்டிய வயதுகளில் அடிக்கடி நோவெடுக்கத்தொடங்கின. குதிக் கால் களை நிலத்தில் ஊன்ற முடியாவண்ணம் வலிப்பதாகச் சொல்வார். மாலையில் அம்மா ஆமணக்கஞ் செடியின் வழுவழுவென்ற இலைகளைப் பறித்துவந்து சூடான அடுப்புக்கல்லின் மேல் விரித்துக் கல்லின் சூட்டில் வதங்கும் இலையின்மேல் அப்பாவின் பாதத்தை வைத்து அழுத்துவார். பாதங்களின் தடித்த தோலையும் ஊடுரு விப்பரவும் மருத்துவ குணம் மிக்க அந்தச் செடியின் இலைதரும் கதகதப்பு தன் வலியை நீக்கிவிடுவதாக அப்பா சொல்வார். எனக்கென்னவோ களைத்துவரும் அப்பாவின் கால்வலிக்காக இலைபறித்து வைக்கும் அம்மாவின் அன்பிலும் அப்பாவின், பாதங்களைப் பக்குவமாய் அழுத்தும் அம்மாவின் விரல்களிலும் கூட ஏதோ மருத்துவகுணமிருப்பதாய்த் தோன்றும். அந்த இலை மருத்துவத்தின்பின் மறுநாள் அதிகாலையே அப்பா வேலைக்குப் புறப்படுவது எனக்கு வியப்பும் மெல்ல வலியும் கலந்த நினைவு.

யாழ்ப்பாணத் தெருக்களிற் பயணிக்கையில் அவ்வப்போது சந்திக்கும் போது மனதை நெருடும் பலகால்களைக் கண்டிருக்கிறேன்.அவை மனிதத் தோலின் நிறத்துக்கு அண்மித்த இளங்கபிலமும் மஞ்சளும் கலந்த ஒருவித நிறத்தாலான 'ஜெய்ப்பூர்' கால்கள். இந்தத்தேசமும் அதன் மக்களும் எதிர்கொண்டபடியிருக்கும் பேரவலத்தின் நினைவுகளைப் பூமியெங்கும் சுவடுகளாய்ப் பதிப்பவை அந்தக் கால்கள். பொய்யான அந்தக் கால்களைக் காணும் போதெல்லாம் இல்லாமற்போன கால்களை மட்டுமல்லாமல் அவற்றைப் பறித்துக் கொண்ட குண்டுகளையும் அவற்றை ஏவிய மனிதர்களையும் நினைவிற் கொண்டு வருகின்றன. நோவோ தொடுகையோ அறியாத அந்தக் கால்கள் காண்கின்ற வர்களின் மனங்களைத் தொட்டு நோகச் செய்கின்றன.

சலரோக நோயாளிகளின் பாதங் கள் விஷேடமானவை. அவை ஒருவர் தமது முகத்தை எவ்விதம் கரிசனையோடு கவனித்துக் கொள்வாரோ அதே கரிசனை யோடு கவனிக்கப்பட வேண்டியவை.

சலரோக நோயின் தாக்கம் நீண்டகாலத்திற் பாதங்களின் உணர் திறனைக் குன்றச் செய்து விடுகிறது . தொடுகையுணர்விற் தொடங்கி நோ, வெப்பம் என்று ஒவ்வொரு உணர்வாக மெல்ல மெல்லக் குறைந்து கொண்டு வருவது நோயின் இயல்பு. உணர்விழந்த பாதங்கள் எச்சரிக்கையு ணர்வற்று நடக்க முயல்வதாற் சின்னஞ்சிறு காயங்களுக் குள்ளாகிப் பின் நாட்பட்ட புண்ணாகி விடுகின்றன. இக்காயங்கள் சரியான கவனிப்பற்று விடப்படும்போது சர்ப்பம்போல படர்ந்து, கடைசியிற் கால் களையே காவு கொண்டு விடலாம். எனவே தான் கவனம் செலுத்துகிறார்கள்.

பாதங்கள் எங்கே எம்மை எடுத்துச் செல்கின்றன என்பது எப்போதும் எமக்குத் தெரிந்திருப்பதில்லை. மழைக்காலங்களில் தெருக்களில் நுழைந்த ஆமைகளின் முதுகில் ஏற்றிவிட்ட மெழுகுதிரிகள் போல பாதங்கள் எடுத்துச் செல்லுமிடத்துக் கெல்லாம் நாம் சிலவேளை சென்றிருக் கின்றோம். அதிக மக்கள் புழங்காத கிராமத்து வீதிகளில் அரைக்காற் சட்டைப் பருவத்திற் கிட்டிப்புள் விளையாடும் போது "கிட்டி"போகிற தூரத்திற்கெல்லாம் ஏனென்று கேளாமல் நம் பாதங்களோடு நாமும் போயிருக்கிறோம் . வளர்ந்த பிறகும் கூட எம்மில் பலருக்குப் பாதங்களிடம் "எங்கென்னைக் கொண்டு போகிறாய்" என்று கேட்கும் பக்குவம் வரவில்லை.

கால்களின் கதை நீண்டு கொண்டே போகிறது. முகங்களைப் பற்றி எவ்வளவு பேசமுடியுமோ அதேயளவு, ஏன், அதைவிடவும் அதிகமாய் பாதங்கள் பற்றியும் பேசலாம்போல் தோன்றுகிறது எல்லாப் பாதங்களுக்கும், பயணங்களுக்கும் முடிவிருக்கிறது. ஒருவரின் பாதங்களின் மகத்துவம் அவரது மரணத்தில் உணரப் படுகிறது. அதனாற்றான் எமது மரபில் இறந்தவரின் பாதங்களை நீரால் கழுவி வணங்கி உற்றவர்கள் விடை தருகிறார்கள்.

கடைசியாக, கால்களுக்குச் சொன்னது போல இருக்கும் கவிஞர் வாசு தேவனின் ஒரு கவிதைத் தலைப்பு. அவரது தலைப்புகளே கவிதைகள்தான். "வழியில் நடவாதே; காட்டில் நட" ..நீங்களே ஏனென்று எண்ணிப்பாருங்களேன்.

# கிறுக்கல்கள்

"திவாகரன்"
26 ஆம் அணி

தென்றலின் ஸ்பரிஸத்தால்
தென்னமிளங் கீற்றுக்குள்
தெரிந்தது ...
தேவதையின் திருமுகம்
பௌர்ணமியில் முழுநிலவு!

காலைக் கதிரவன்
இறுக்கிய அணைப்பில்
பூமித்தாய்க்கு வியர்த்துக் கொட்டியது
புல்மேல் பனித்துளி!

இதயக் கன்னியின்
இதழோரப் புன்னகை கண்டு
வெட்கித் தலை குனிந்தன,
பார்வைக் கினிய
பாரிஜாதப் பூக்கள்!



எரிபொருட் செலவின்றி
நீண்டதொரு புகைவண்டி
நிம்மதியாய் பயணிக்கின்றது
எறும்புகளின் ஊர்வலம்!

கரிய விழிக் காரிகையே
காதலிக்கிறாயா என்னை?
இறுதியாகச் சொல்லிவிடு
இரண்டில் ஒன்றை
ஆம் அல்லது ஓம்.......

# காதலின் விம்பங்கள்



இ.யதார்த்திகன்
26ம் அணி

ஹோர்மோன்களின் கொண்டாட்டம்-ஆம்
அவை உள்ளுணர்வுகளை உந்தித் தள்ளிடும்
உணர்வுகளின் உச்சக்கட்ட உந்தலில்
உருவாடிடும் இந்தச் சிறிய வாலிபம்!

பதின் வயதுணர்வுகள் உடலில் பத்தியெரிந்திடும்-அது
வீசும் வாலிபக் காற்றினில் அசைந்தாடிடும்
கூடிக் களிக்கும் கூட்டம் இதை
குறைவிலாது ஓங்கி ஒளிரச் செய்திடும்!

வசந்தத்தை மட்டுமே நுகரத்துடிக்கின்ற வாலிபம்-இது
உணர்வு நெருடலில் உண்மையை மறந்திடும்
தன் தன்மையை அறிந்திடாது
தன்னையே இழந்திங்கு காதலிற் சிக்கிடும்!

பாய்க்கடை ஒதுக்கங்கள்....புல்தரைக் கல்லிருக்கைகள்
விரிவுரைக் கதிரைகளிற் கழிவறை ஓரங்கள்-எனக்
காலங்களை இனிதாக்கிக் கல்வியுடன்
காதலிங்கு கரைபுரண்டோடிடும்

பெற்றவர் வியர்வையில் விளைகின்ற உழைப்புகள்
மக்கள் வரிகளில் வருகின்ற மகாபொலவும் பேசரியும்
வரவின்றிய இவர்களின் வருவாய்களாம்-இவை
கச்சிதமாய்க் கரைந்திடும் காதலின் களிப்பிலே ...

# மருத்துவ மாணவர் ஒன்றியம் 2005 / 06 இன் முயற்சிகள் ...

எமது மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் காலப்பகுதியில் தகவல் தொழில் நுட்பப் பிரிவிற் பல கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு ரீதியான மேம்படுத்தல்கள் ஏற்படுத்தப்பட்டன. தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கென IRQUE செயற்திட்டத்தினூடு ஒதுக்கப்பட்ட நீதியின் உதவியுடன் புதிய தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் திரைச்சீலைகள், தளவிரிப்பு என்பன திறம்பட அமைக்கப்பட்டன.

இதுவரை காலமும் நிழற்பிரதி எடுக்கும் வசதிகள் முழுமையாக தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் வழங்கப்பட்டிராத நிலையில் அச்சேவை மீள ஒழுங்கமைக்கப்பட்டு குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்டதுடன் புதிய இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படுவ தற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. மாணவர்களுக்கான இணையத்தள சேவைகள் மீள ஒழுங்கமைக்கப்பட்டதுடன், மிகக் குறைந்த கட்டணங்களிற் சேவை வழங்கப்பட்டது, மிகுந்த பயனுள்ளதாக அமைந்தது.

மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற் கான வேண்டுகோள் பல்கலைக்கழக நிர்வாகத் திடம் விடுக்கப்பட்டு, அது பயன் தராத நிலையில், மருத்துவ மாணவர் ஒன்றிய நிதியிலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவிற் புதிய விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

பூப்பந்தாட்டத்திடல் புனரமைப்புப் பணிகள் முழுமை பெற்றன. இவற்றில் 29ஆம் அணி மாணவர்களின் பங்களிப்பு முதன்மை யானதாக இருந்தது. மாணவர் ஒன்றியப் பிரதிகள் கண்டியில் நடைபெற்ற IRQUE செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடலில் விடுத்த வேண்டுகோளின் விளைவாக உடல் வலுவூட்டல் கூடம் (GYM) ஒன்றை மாணவர் கட்டிடத்தொகுதியின் கீழ்த்தளத்தில் அமைப் பதற்காகவென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

எமது மாணவர் ஒன்றியத்தின் காலப்பகுதியில் மாணவர்களுக்கான வைத்திய சாலை பணியாளரூடான அடையாள அட்டைகள் தாபிக்கப்பட்டு வழங்கப்பட்டன. இவ்வடையாள அட்டைகள் நெருக்கடியான சூழ்நிலைகளில் மாணவர்கள் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு உறுதுணையாக அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதுமுக மாணவர்களின் உள்வாங்கல் வைபவம் சிறப்பாக, பயனுள்ள வகையில் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டதுடன் மாணவர்களுக்கான, புதிய கைநூலும் பயனுள்ள வகையில் வடிவமைக்கப்பட்டு அச்சிட்டு வழங்கப்பட்டது.

மருத்துவ பீடத்திற் கல்வி பயிலும், பொருளாதார உதவி தேவைப்படும் மாணவர் களுக்காக எமது மாணவர் ஒன்றியம் MIOT நிதியத்தினூடாக உதவித் தொகைகளை

வழங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது. அம்மாணவர்களிற் சிலருக்கு, திருவாளர் ஆறு திருமுருகன் அவர்களின் உதவியுடன் Stethoscope கருவிகளும் பெற்றுத் தரப்பட்டன.

எமது மாணவர் ஒன்றியத்தின் காலப்பகுதியில் மருத்துவ பீட சிற்றுண்டிச் சாலையில் பல ஆக்கபூர்வமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. சிற்றுண்டிச்சாலைக்கான புதிய தளபாடங்கள் IBM நிதியத்தின் உதவியுடன் பெறப்பட்டதுடன் சிற்றுண்டிச் சாலையின் சேவைத்தரமும் மேம்படுத்தப்பட்டு முறைப்படுத்தப்பட்டது.

யாழ் போதனா வைத்தியசாலை உளமருத்துவ நிபுணர் சிவயோகன் அவர்களினால் மருத்துவமாணவர் ஒன்றியத்திடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க 26ஆம் அணி மாணவர் முயற்சியினால் உளமருத்துப் பிரிவு வைத்தியசாலைக் கட்டிடத்தொகுதிக்குத் தீந்தை பூசப்பட்டது.

இவை தவிர 2006ஆம் ஆண்டின் பின் அரைப்பகுதியில் யாழ் குடாநாட்டில் எற்பட்ட அசாதாரண நிலையைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மற்றும் வெளி மாவட்ட மாணவர்கள் முகம் கொடுத்த பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண மாணவர் ஒன்றியம் முன்னின்றது.

இக்காலப் பகுதியில் வெளிமாவட்ட மாணவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு முறைப்படுத்தப்பட்டதுடன் அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளச் செல்வதற்கான கப்பல் பயண ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள் பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் அரச அதிபர் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. அசாதாரண சூழ்நிலையிற் சிக்குண்ட வெளிமாவட்டத்தை சேர்ந்த மாணவர்களுக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷனரியினால் வழங்கப்பட்ட ரூபா, 50000/= பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்நிதி வங்கிச் சேவைகள் ஸ்தம்பிதமடைந்திருந்த அந்நிலையில் மிகுந்த உதவியாக அமைந்தது.

மேலும் மாணவர்கள் தமக்குத் தேவையான உணவை வெளியிடங்களிற் பெற்றுக்கொள்வதிற் சிரமங்களை எதிர் கொண்ட நிலையில் பல்வேறுபட்ட தரப்பினரதும் உதவியுடன் மருத்துவபீட சிற்றுண்டிச் சாலையின் உதவியுடன் அவர்களுக்கான உணவுகள் தயாரித்து வழங்கப்பட்டன. மேலும் இறுதியாண்டு மாணவர்களுக்கான உணவு வசதிகள் வைத்தியசாலை சிற்றுண்டிச் சாலையிற் பெறத்தக்க வகையில் ஒழுங்கு செய்யப்பட்டன.

பல்கலைக்கழக துணை வேந்தர், அரச அதிபர், நல்லூர் உதவி அரச அதிபர் ஆகியோரின் ஏற்பாடுகளினாலும் அரசசார்பற்ற நிறுவனங்களான சேவா லங்கா, HUDEC முதலியவற்றாற் காலமறிந்து ஆற்றிய உதவிகளினாலும் மாணவர்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்கள் பெற்றுத்தரப்பட்டன.

இக்கட்டான இந்தச் சூழ்நிலையில் வெளிநாட்டில் இயங்கிவரும் எமது பழைய மாணவர் சங்கத்தினரின் நிதியுதவியுடன் சிற்றுண்டிச்சாலையினூடாக மாணவர்களுக்கு

மிகக் குறைந்த கட்டணங்களில் உணவுகளை வழங்கக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத் தக்கது. இந்நிதியுதவிகளைப் பெறுவதில் முன்னின்று உதவிய சத்திரசிகிச்சை நிபுணர் ரவிராஜ் அவர்களின் பங்கு அளப்பரியதாகும்.

நெருக்கீடான சூழ்நிலை நிலவிய காலப்பகுதியில் மாணவர்களின் கற்றற் செயற்பாடுகள் மின்விநியோகம் இன்மையால் பாதிப்படைந்ததைத் தொடர்ந்து மாணவர் ஒன்றியம் எடுத்த முயற்சியால் யாழ் அரச அதிபர் அவர்களின் உதவியுடன் மாணவர் களுக்கான எரிபொருள் பங்கீட்டு அட்டைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன், யாழ் பெற்றோலி யக் கூட்டுத்தாபன முகாமையாளரூடாக மண்ணெண்ணையும் கொடுக்கப்பட்டது.

மேலும் இவ் இக்கட்டான நிலைமையிற் புதுமுக மாணவர்களுக்கான அடையாள அட்டைகள் துரிதமாகத் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. நெருக்கடியான சூழ்நிலையில் மருத்துவ மாணவர்களின் அவசரத்தேவைகளை நிறைவு செய்வதற்கும் அவர்களின் பிற நலன்களைப் பேணுவதற்கும் மருத்து மாணவர் ஒன்றியம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஆதரவளித்து உதவிகள் புரிந்த யாழ் அரச அதிபர், நல்லூர் உதவி அரச அதிபர், சேவாலங்கா, HUDEC நிறுவனத்தினர், IMFOA ( வெளிநாட்டு பழைய மாணவர் சங்கத்தினர், நல்லூர் கூட்டுறவுச் சங்க முகாமையாளர், துணைவேந்தர், மருத்துவ பீடாதிபதி, சிரேஷ்ட பொருளாளர் மற்றும் மருத்துவ மாணவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.



முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக் கொள்;

கட்டளையிடும் பதவி பிறகு உனக்குத் தானாக வந்துசேரும்.

–சுவாமி விவேகானந்தர்–

# Medical Students in Sports


**Medical Students among the various sports teams of Jaffna University.**



**Athletic team**

| | | | |
|---|---|---|---|
| A.Thushyanthan | - | 25th batch | F C (Re) |
| T. Vasuki | - | 25th batch | F C (Re) |
| A. Jude Prashanth | - | 27th batch | F C (Re)/SLUSA |
| S. Pratheepa | - | 27th bach | |

**Badminton**



| | | | |
|---|---|---|---|
| K.Mohankumar | - | 23rd batch | H.C |
| G.Thivijananth | - | 25th batch | F.C (Re) |
| S.Karthigan | - | 25th batch | F.C |
| S.Manivannan | - | 27th batch | |
| S.Rajeevan | - | 27th batch | |
| R.Jana | - | 25th batch | |
| T.Vasuki | - | 25 batch | |
| S. Sivatharsana | - | 26th batch | H.C |
| G.Verni | - | 27th batch | F.C |

**Basket ball**

| | | | |
|---|---|---|---|
| T. Gandeepan | - | 23rd batch | H.C |
| B.T. Gowribahan | - | 24th batch | F.C |
| S. Arunan | - | 26th batch | F.C / SLUSA |
| ...Janakan | | 28th batch | |
| T.Vasuki | | 25th batch | |
| S.Pratheepa | | 27th batch | |

**Carrom**

| | | | |
|---|---|---|---|
| B.S.C. Sampath | - | 25th batch | |
| A. Sanjayan | | 27th batch | F.C |
| M.Arunathan | - | 27th batch | |

**Chess**

| | | | |
|---|---|---|---|
| T.Kirubenthiran | - | 25th batch | |
| K. Karthikeyan | - | 28th batch | F.C |

**Hockey**

| | | | |
|---|---|---|---|
| T. Gandeepan | - | 23rd batch | F.C |

**Netball**

| | | | |
|---|---|---|---|
| T.Vasuki | - | 25th batch | F.C |
| S.Pratheepa | - | 27th batch | |

**Soccer**

| | | | |
|---|---|---|---|
| A. Jude Prashanth | - | 27th batch | F C / SLUSA |

**Table Tennis**

| | | | |
|---|---|---|---|
| M.Steepan | - | 24th batch | |
| S.Vinojan | - | 27th batch | H.C |

**Tennis**

| | | | |
|---|---|---|---|
| K. Mohanakumar | - | 23rd batch | |
| G. Thiviyananth | | 25th batch | F.C |
| R. Sivaruban | | 26th batch | F.C |

FC: Full Colours , HC : Half Colours.

## UNIVERSITY CHAMPIONS & RUNNERS' UP

**Badminton**

**Champions**

| | | | |
|---|---|---|---|
| G.Thivijananth | - | 25th batch | single |
| G. Verni | - | 27th batch | single |
| G.Thivijananth& Karthikan | - | | doubles |
| G. Verni & Partner | - | | doubles |
| K. Mohanakumar & Partner | - | | mixed doubles |

**Runners' up**

| | | | |
|---|---|---|---|
| S. Karthikan | - | 25th batch | single |
| G.Thivijananth &G. Verni | - | | mixed doubles |

**Tennis**

**Champions**

| | | | |
|---|---|---|---|
| G.Thiviyananthan | - | 25th batch | single |
| G.Thivijan & R.Sivaruban | - | | doubles |

**Runners'up**

| | | | |
|---|---|---|---|
| R.Sivaruban | - | 26th batch | single |


| | | | |
|---|---|---|---|
| T.Vasuki | - | 25th batch | All rounder 2005/06 |

*Captions and vice captains of Various sports*

| *Name* | *Team* | *State* |
|---|---|---|
| T.Gandeepan | Basket ball | Vice Captain |
| T.Gowribahan | Basket ball | Captain |
| G.Thivijananth | Badminton | Captain |
| S. Karthikan | Badminton | Captain |
| R.Sivaruban | Tennis | Captain |
| S.Arunan | Basket ball | Vice Captain |
| A.Jude Prashanthan | Athletic | Captain |
| T.Vasuki | Netball | Vice Captain |
| G.Verni | Badminton | Captain |

**Sports Council Representatives**

K. Mohanakumar 2005
T. Vasuki 2006




யாழ் போதனா வைத்தியசாலை, சத்திர சிகிச்சை நிபுணர், Dr.S.ரவிராஜ் அவர்களின் முயற்சியினால் அகில இலங்கை இந்துமாமன்றத்தினரின் சிபாரிசிற்கு அமைய Metropolitan மற்றும் George Steuart (Agencies) Ltd ஆகிய நிறுவனங்களினால் அன்பளிப்பு செய்யப்பட்ட Digital Photocopy இயந்திரங்கள்.



மாணவர்களுக்காக முற்றுமுழுதாக மாணவர்களால் நிர்வகிக்கப்படுகின்ற தகவல் தொழினுட்ப மையம் (ITS).


# நன்றிக்குரியவர்கள்

பதினோராவது "நாடி" இதழ் எம்மவரின் கூட்டு முயற்சியின் வெளிப்பாடு. குடா நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் கடந்த முறை "நாடி" இதழ் தடைப்பட்டது. ஆயினும் சக மாணவர்களின் தூண்டுதலாலும், ஒத்துழைப்பாலும் இம்முறை நாடி துடிக்க வைக்கப்பட்டுள்ளது.

இவ்விதழுக்கு தம் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி ஆதரவு அளித்த துணைவேந்தர், பேராசிரியர் இ.குமாரவடிவேல் அவர்களுக்கும், பீடாதிபதி Dr. க.சிவபாலன் அவர்களுக்கும், மாணவ ஆலோசகர் Dr. R. சுரேந்திகுமாரன் அவர்களுக்கும்,

தேங்கி நிற்கும் பாடச் சுமைகளுக்கு மத்தியிலும் மனம் கோணாது ஆக்கங்களைத் தந்துதவிய சக மாணவர்களுக்கும், ஓவியங்களை வரைந்து உதவிய S. பிரதீபன் (27ம் அணி), மற்றும் பிழை திருத்தி உதவிய நண்பர்களுக்கும்,

சிறப்பாக "நாடி" யை அச்சேற்றிய "கரிகணன் பிறின்டேர்ஸ்" தனியார் நிறுவனத்தினருக்கும், மருத்துவ மாணவர் ஒன்றியம் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.



Harikanan Printers, jaffna.
021-2222717, 4590123